# ஞான தீபம்

யா/ஞானாசாரியர் கல்லூரி - கரவெட்டி

1935 - 2015



## அமுதவிழா மலர்

வெளியீடு

யா/ஞானாசாரியர் கல்லூரி
கரவெட்டி

வெள்ளைக் கலை உடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தே வீற்றிருப்பாள் - வெள்ளை
அரியாசனத்தில் அரசரோடு என்னை
சரியாசனம் வைத்த தாய்



கண் கண்ட என் கலைவாணித் தெய்வமே - யுன்
பண் கண்ட பாதத்தை பணிந்திடுவேன்- எனக்கு
எண் கொண்ட எழுத்தும் எடுத்தியம்பும் ஆற்றலும்
சொன் கொண்ட வன்மையும் சொரிந்திடுவாய் - சுகந்தினியே

வாணி துணை

# ஞான தீபம்

## யா / ஞானாசாரியர் கல்லூரி

## அமுத விழாச் சிறப்பு மலர்

## (1935 - 2015)


வெளியீடு

**அமுதவிழாக் குழு**

**2015**

# சங்கீத சரஸ்வதிக்கு சமர்ப்பணம்

ஞானசாரியர் அன்னை அமைத்துக் கொடுத்த மேடையில் இந்தப் பாடலுக்காக சரஸ்வதி (முத்துதம்பி ரீச்சர்) யின் வழி காட்டலில் தடம் பதித்தோர் எத்தனையோ பேர்....! ஆந்தக் காட்சியை மறக்கத் தான் முடியுமா?

கல்வித் தெய்வம் அவள் தானடி தோழி
நல்வித்தை யாவும் தருவாளடி
பல் விதமாக நாம் பாடுவோம் வாணியின்
பாதம் பணிந்திடுவோம் வாருங்கடி

வெண்டாமரை தனில் வீற்றிருப்பாள்-அவள்
வீணாகானம் செய்வாளடி
கொண்டாடிப் பாடிடுவோம் தண்டாமரைப் பாதம்
கண்டானந்தம் கொண்டு ஆடுங்கடி

தீபங்கள் ஏற்றிடுவோம் ஆராத்தி செய்திடுவோம்
தீந்தமிழ் வாணி புகழ் பாடிடுவோம்
பாவங்கள் தீர்ப்பாலடி வேதங்கள் போற்றுமடி
கீதம் இசைக்க வரம் ஈவாளடி

தேவி சரஸ்வதியின் தேமலர் சேவடியை
பாமலர் நிதம் தூவிப் பாடிடுவோம்
நாவில் உறைவாளடி நல்வாழ்த்து சொல்வாளடி
வாணி சரஸ்வதியை வாழ்த்துங்கடி

வெள்ளைக் கலையுடுத்து அன்னந்தனில் அமர்ந்து
வண்ணத்தமிழ் ஏடேந்தி வருவாளடி
உண்மைக் கவிஞரது உள்ளக் கமலத்திலே
உவந்து களித்து ஆடுங்கடி

மங்களப் புகழ்பாடி பங்கயர் பதம் போற்றி
மங்கையர் நாம் கூடி ஆடிடுவோம்
மங்களம் பொங்கிடுமே இன்பங்கள் தந்திடுமே
மாது கலைமகளை வாழ்த்திடுவோம்.

## "ஞானதீபம்"

அமுத விழா சிறப்பு மலர்க் குழுவினர்

## தலைவர்

திரு ப. செல்வ விநாயகம் (அதிபர்)

## மலராசிரியர்கள்

திரு க. ஸ்ரீசந்திரன் (சிரேஷ்ட ஆசிரியர்)

திருமதி.சாந்தமலர் குகநேசன் (ஆசிரியை)

## மலர்க் குழு உறுப்பினர்கள்

திருமதி. சாந்தி இராகவன் - ஆசிரியை

திருமதி. யசிந்தா விஜயகுமாரன் - ஆசிரியை

திருமதி. பராநிதி நவரட்ணம் - ஆசிரியை

திருமதி. ஜெயவாணி நகுலேந்திரன் - ஆசிரியை

திரு. நா.கலாதரக்குருக்கள் (ஆசிரியர்)

திரு.ஆறுமுகம் சுதர்சன் - ஆசிரியர்

## அமுத விழாக்குழு உறுப்பினர்கள்

திரு.வே. கருணாநிதி - பிரதி அதிபர்

திரு.வ. விக்கினேஸ்வரன் - ஆசிரியர்

திருமதி. ராதா மனில் சுஜீவன் குலாஸ் (ஆசிரியை)

திருமதி. மதிவதனி கோபிநாத் (ஆசிரியை)

திருமதி.சிவமாலா பவானந்தன் (ஆசிரியை)

திரு.க.கி.அம்பிக்குமார் (ஆசிரியர்)

திரு.தா.குணசேகரம் (ஆசிரியர்)

திரு.இ.சுரேஸ்குமார் (ஆசிரியர்)

### நோக்கக்கூற்று

செயற்றிறன் மிக்க முகாமைத்துவத்தினூடாக பெறக்கூடிய வளங்களை ஒன்றிணைத்து இன்றைய உலகில் கல்வியின் முக்கியத்தை உணர்த்தி. அதில் ஆர்வத்தை ஏற்படுத்துவதனூடாகச் சமூகமனப்பாங்கு, நல்லொழுக்கம், நல்லிணக்கம் முதலிய நற்பண்புகளும், ஆளுமையும் கொண்டசிறந்த மாணவ சமூகத்தை வளர்த் தெடுத்தல்.

### MISSION

To groom a student Society with social interests, good conguct, distinguished characteristics and sustainable qualities of co-existence through ang exemplary management process by optimizing and coorginating availble resources and instigate the indispensa bility of education among them and instill in them a sense of craving for it.

### தூரநோக்கு

மாறி வரும் உலகின் சவால்களை எதிர் கொள்ளக்கூடிய சமநிலை ஆளுமையுடைய பிரஜைகளை உருவாக்குதல். (கிராமத்தின் முன்னணிப் பாடசாலையாகத் திகழச் செய்தல்)

### VISION

producing citizens of distinctive personality to face the challenges of the changing World (To make the school a leading one in the village)

### MOTTO

Adhere to what you learn.

### மகுடவாசகம்

கற்றுணர்ந்தொழுகு

# பாடசாலைக் கீதம்

ஞானா சாரியார் கல்லூரி-அன்னை
ஞாலத்தில் வாழிய பல்லூழி
தேனார் துன்னை நல்லூரில்-கலைத
தேவி அமர்ந்தருளும் கோவில்
(ஞானா)

சைவமும் செந்தமிழும் எங்கும்-அன்னை
சகல கலை மலிந்து பொங்கும்
சைவ வித்தியாவிருத்திச் சங்கமும்-முன்னை
சமைத்த கலை பயிலரங்கம்
(ஞானா)

ஆன்மிகம் வளர்க்கும் மெய்ஞ்ஞானம்
அறிவுத் திறன் நல்கும் விஞ்ஞானம்
தேன் மேவு செந்தமிழின் கானம்-கல்வி
செழிக்கத் தருவாள் அன்னைமோனம்
(ஞானா)

செந்தமிழ் ஆங்கிலம் பௌத்தீகம்-என்றும்
திகழ் கணிதக் கலையின் தாகம்
தந்தெமக் கருள்வாய் விவேகம்-அன்னை
தாளினை பணிவோம் எந்நாளும்
(ஞானா)

எழில் தரும் மனையியலோடும்-வாழ்வில்
ஏர் முனை விவசாய ஏடும்
தொழில் தருகலைகளும் கூடும்-அன்னை
தூய பதத்தை மனம் நாடும்
(ஞானா)

துதி பெறும் துன்னை நல்லூரும்-வாழ்வில்
சுகம் பெறும் மாணவர் பல்லோரும்
அதி பராசிரியர் நாமும்-அன்னை
அடி பணிந் திடுவோம் எப்போதும்
(ஞானா)

# தமிழ் தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ் பரதக்கண்டமிதில்
தெக்கணமும் அதிற் சிறந்த திராவிட நல் திருநாடும்
தக்க சிறு பிறைநுதலும் தரித்த நறும் திலகமுமே.
அத்திலக வாசனை போல் அனைத்துலகும் இன்பமுற
எத் திசையும் புகழ் மணக்க இருந்த பெருந்தமிழணங்கே!

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள் முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமுங் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும்
உன்னுதரத் தேயுதித்தே ஒன்று பல வாகிடினும்
ஆரியம்போல் உலகவழக்கழிந் தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம் வியந்து செயன்மறந்து வாழ்த்துதுமே!"
வாழ்த்துதுமே!"வாழ்த்துதுமே!"வாழ்த்துதுமே!"

**மனோன்மணியம் சுந்தரனார்.**



# தமிழ் மொழி வாழ்த்து



வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!

வானமளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழிய வே!

ஏழ்கடல் வைப்பினுந் தன் மணம் வீசி
இசை கொண்டு வாழிய வே!

எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழிய வே!

சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினை தரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே!

வாழ்க தமிழ் மொழி!வாழ்க தமிம் மொழி!
வாழ்க தமிழ்மொழி யே!

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!

## கட்டைவேலி ஞானாசாரியர் கல்லூரி அமுத விழாப்பாடல்

இராகம்:-கம்பீரநாட்டை

அகவை எண்பதிலே அடியெடுத்து வைக்கும்-எங்கள்
துன்னையூர் அன்னையைப் போற்றிடுவோம் நாம்
ஆய கலைகள் பல வளர்த்திட எங்கள்
சூல வைரவர் பாதம் தொழுது ஏற்றிடுவோம்-எங்கள்

தாளம்:-ஆதி பல்லவி

அமுதத் தமிழில் இசைகூட்டி உனைப் பாடவே-எங்கள்
அன்னையின் புகழை என்றும் நாம் கூறவே
பைந்தமிழ் பாமாலை நாம் தொடுக்கவே-என்றும்
பசுந்தமிழ் மொழி எடுத்து நாம் பாடுவோம்

(அமுதத் தமிழில்)

கல்விபல வளர்த்திடுவோம் கலைகள் பல பெற்றிடுவோம்
மாணவரின் வாழ்க்கைதனை வழிநடத்த வேண்டுகிறோம்
அதிபர் ஆசிரியர் வள அணியை-எந்நாளும்
அருளுடன் காத்தருள்வாய் அன்னையே ஞானசாரியரே

கணிதம் விஞ்ஞானம் கவின்கலைகள் பலவுடனே
வணிக தொழில்நுட்பம் வளர்துறைகளில் சித்திபெற்று
அத்துறையில் வளர்ச்சி பெற்று உயர்ந்திருப்போம் ஊரினிலே
அன்னையே உனக்கு நாங்கள் சமர்ப்பணமாய் அளிக்கின்றோம்

உள்ளூரில் வெளியூரில் வாழ்ந்திடும் அன்பரே
உங்களின் வழிகாட்டல் எங்களின் அன்னையே
உயர்ந்திடும் வளர்ந்திடும் என்பதை என்றென்றும்
மறவாதீர் உங்கள் அன்பு உள்ளங்களில்

கல்லூரி அதிபரே அறிவுடை ஆசான்களே
பண்புடைய பெற்றோர்களே பழைய மாணவரே
நலன் விரும்பிகளே உங்கள் அனைவரையும்
எங்கள் இதயமதில் ஏற்றுகிறோம்.

வாழ்க வாழ்கவென வளமுடனே
வாணி சரஸ்வதியை வணங்கிடுவோம்

வாழ்க வாழ்கவென வாழ்க வாழ்கவென வாழ்க வாழியவே-எங்கள்
ஞானாசாரியர் வாழியவே வாழியவே
வாழிய வாழிய வாழியவே-எங்கள்
ஞானசாரியர் வாழியவே.

# ஞான தீபம்-வாழ்த்துக்கவி

இராகம் :- ஹம்சத்வனி அல்லது மத்திமாவதி. தாளம் :- ஆதி

பல்லவி

ஞானாசாரிய நல்தீபம்- அன்னை
நாமகள் பீடமாய் வாழியவே

சரணம்

வெள்ளிப் பனிமலையில் தீபமதாய் - மேலை
வித்யா தரரேத்தும் விரிசுடராய்
தெள்ளு தமிழ்ச்சங்கத் தீபமதாய் - வங்க
தேசத்துச் சாந்திநி கேதனமாய் - ஞானா

அக விருளை ஓட்ட எழும் ஆதவனாய்-என்றும்
அகல் விசும்பில் ஏறிவரும் அணிநிலவாய்
சகம் போற்றும் சாணக்யத் தனிமன்னாய் -நின்று
தலமெங்கும் புகழோங்க வாழியவே - ஞான

மேலைத் தலத்து மிளிர் கலைகளெல்லாம் -நாளும்
விரிந்து விரிந்து மணம் வீசிடவே
வாலைமகள் வாணித்தாய் நோக்கினிலே-தெய்வ
வண்ணக் கலைத்தடமாய் மலர்ந்திடவே. - ஞானா

**ஆக்கம்:**

**க.கணபதிப்பிள்ளை**

பண்டிதர், வித்துவான், ஓய்வுபெற்ற ஆசிரியர்

# சுவாமிகளுக்கு சமர்ப்பணம்

குருநாதரின் அன்புச் சீடரான கட்டைவேலியைச் சேர்ந்த திரு.வே.ஆழ்வாப்பிள்ளை என்பாரது விடாமுயற்சியாலும் கட்டை வேலி ஞானாசிரிய கலாவிருத்திச்சங்கத்தின் பேருக்கத்தினாலும் பவ வருடம் (1935) மாசி திங்கள் 24ம் நாள் வியாழக்கிழமை பகல் 11.30 மணிக்கு ரேவதி நட்சத்திரமும் இடப லக்கினமும் கூடிய சுப வேளையில்,

கட்டைவேலி ஞானாசாரிய வித்தியாசாலை

எனும் இக் கல்விக்கூடத்தின் அத்திபாரச் சங்கினை ஞான குருவான மகாதேவா சுவாமிகள் நிறுவினார்.

அன்றைய அப் புனித பணியில் சுவாமிகளுடன் அருகிருந்த ஞானாசிரியர்கள்


1. புலோலி சித்தாந்த சாகரம் திரு க.சிவபாதசுந்தரனார்
2. கந்தவனகோயில் மனேஜர் திக்கம் சி. செல்லையாபிள்ளை
3. திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை அதிபர் வித்துவான் மயிலிட்டி சி.சுவாமிநாதர்
4. கோண்டாவில் திரு. குந்தையா சுவாமிகள்

(ஆதாரம், மகாதேவ சுவாமிகள் நினைவு மலர்)

ஞானத்தின் உருவான செல்வர்களினால் உருவாக்கப்பட்டது இக் கல்லூரி எங்கும். எதற்கும் இல்லாத கீர்த்தியும் பெருமையும் இக் கல்லூரிக்கு உண்டு. இன்றைய அமுதவிழா காணும் இத் திருநாளில் எங்கள் நன்றிகளையும் வணக்கங்களையும் மகாதேவா சுவாமிகளுக்கு சமர்ப்பணம் செய்கின்றோம்.

ஆசிரியர்

# தவத்திரு மகாதேவா சுவாமிகள்



# எங்கள் கல்லூரி முதல்வர்




**திரு ப.செல்வவிநாயகம் அவர்கள்**

BA.MA.PGDE,M.Pill.Q,SLPS-II

Bachlor of Acadmic Laws Secound year,

Annamalai University, India

## கல்லூரி பிரதி அதிபர்



**திரு வே.கருணாநிதி அவர்கள்**

BSc.PGDE, SLTS-I




# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர் :- ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

முதலாவது குருமஹா சந்நிதானம்

ஆதீன குரு முதல்வர் :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

இரண்டாவது குருமஹா சந்நிதானம்

ஸ்தாபிதம் : 1966

021 222 2870

பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை




## அருளாசிச் செய்தி

கல்விசார் பெருந்தகையீர்!

கல்வி என்னும் ஞானத்தைக் கற்பிக்கும் அறநெறி நிற்கின்ற கல்லூரியான கரவெட்டி, யா/ஞானசாரியர் கல்லூரிச் சமூகத்தினர் அமுதவிழாவையொட்டி "ஞானதீபம்" என்ற சஞ்சிகை ஒன்றை வெளியிட உத்தேசித்ததையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்கு தக"

என்ற தெய்வப்புலவர் திருவள்ளுவரின் குறட்பாவைக் கருத்தில் கெண்டு கல்வியைகற்று நாம் கற்றவண்ணம் ஒழுகி சமுதாயத்திலே நல்வாழ்வு வாழ்வதற்கு நம்மை நாமே தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும்.

"நல்லோரிணக்கம் எப்போதும் நன்மையே தரும்" என்பதற்கிணங்க நாங்கள் நல்லவர்களோடு சேர்ந்து வாழ்ந்தால் நமக்கு நன்மையே கிடைக்கும். இதை நாம் மறக்கக்கூடாது. ஆதலினால் கரவெட்டி ஞானசாரியர் வெளியிடுகின்ற அரிய நல்ல பொக்கிஷம் திகட்டாத தித்திப்புடைய ஒளிவீசும் ஞானதீபம் ஒன்றேயாகும். அது நல்ல முறையில் வெளிவந்து உலகோர்க்கு பயன் தருகின்ற ஒரு சஞ்சிகையாக மலரவேண்டும் என்று உளமார வாழ்த்தி ஆசிகள் நல்கி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"



# எண்பதாம் ஆண்டிலே எமது கல்லூரி

வாழ்வியலில் நாம் எவ்வளவு உச்ச நிலைக்கு சென்றாலும் அந்த உயர்வின் அத்திபாரமாக அமைவது எமக்கு அறிவு தந்த எம் கல்லூரியே. ஆம் "ஞானசாரியார் கல்லூரி" எனும் பெயரைக் கேட்டவுடனேயே எமது பள்ளிப்பருவ நினைவுகள் எமைச் சூழ்ந்து கொள்கின்றது. எங்களின் உரிமைக் கூடமாக அமைந்த இந்தப் பாடசாலையில் நாம் உயர் கல்வி பயிலும் காலம் ஐம்பதாம் ஆண்டு விழா அமைந்தது. அப்போது V.K.நடராஜா அவர்கள் பாடசாலை அதிபராக பணிபுரிந்தார். நாட்டிய நாடகம், வில்லிசை போன்ற நிகழ்வுகளை பத்தாம் வகுப்பு மாணவர்களாகிய நாம் நடாத்தினோம். ஆந்தப் பசுமையான அனுபவங்கள் இன்றும் எம் மனதிலே பதிந்து இருக்கின்றன. எமது வகுப்பு மாணவர்கள் எல்லோரும் இன்று பரந்து நிற்கும் உலகின் ஒவ்வொரு பாகங்களிலும் நல்ல உயர்வோடு வாழ்வு கொண்டுள்ளனர். ஆலயப்பணிக்காக லண்டன், கனடா, அவுஸ்ரேலியா என்று சென்று வரும் போதெல்லாம் எனது சக மாணவர்களை கண்டு எமது பாடசாலை அனுபவங்கள் நினைவுகள் பற்றி பகிர்ந்து கொள்வதுண்டு காசிநாதன், இராமநாதன், மகாதேவன் எனும் மூன்று இல்லம் கொண்ட எமது கல்விக்காலம் விளையாட்டுப்போட்டி நடைபெறுகின்ற போது தம் இல்லங்களின் வெற்றிக்காக மாணவர் சமூகம் எடுத்துக் கொள்ளும் பிரயத்தனம் மிக மிக அற்புதமானது எமது கல்லூரியில் பயின்ற பல மாணவர்கள் உயர்ந்த நிலையில் மருத்துவராக, கட்டிட நிபுணராக சிறந்த வியாபார நிறுவன அதிபர்களாக, ஆசிரியராக என்று பல துறையிலும் மிளிர்கின்றனர். மருதமரமும், ஞானவைரவர் திருவருளும் நிறைந்தோங்க ஞானசாரியார் கல்லூரி தனது எண்பதாம் அகவையில் மிளிர்வது எமது ஊருக்கும் பாடசாலை சார்ந்த மாணவ சமூகம், ஆசிரியர் சமூகம் பழைய மாணவர்கள், என அனைவரும் பெருமை கொண்டு பூரிக்கின்ற நிகழ்வாகும். இன்னும் பல நூற்றாண்டுக்கு எம் கல்லூரி எழிற் கோலம் பூண்டு ஏற்றமிகு மாணவ சமூகத்தை உருவாக்க வேண்டி அன்னை பராசக்தியை பிரார்த்திக்கின்றேன்.


வாழ்க எமது கல்லூரி, வளர்க மாணவர் சமூகம்.

நன்றி

**அன்புடன்**
**ராம் தேவலோகக்குரு**
**(பழைய மாணவர்)**

# The Methodist Church, Sri Lanka
# ශ්‍රී ලංකා මෙතෝදිස්ත සභාව
# இலங்கை மெதடித்த திருச்சபை

## ஆசியுரை



அருட்பணி.செபமாலை பிறின்சன்,
இலங்கை மெதடித்த திருச்சபை,
கட்டைவேலி.

ஞானாசாரியார் கல்லூரியின் அமுத விழா கொண்டாடுவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகிறேன். 80 வருடகாலமாக இக்கல்லூரி ஆற்றிய கல்விப்பணி, அடைவு மட்டங்கள் அளப்பெரியவை பாராட்டுதற்குரியவை. இப்பிரதேசத்தில் சிறந்த கல்விமான்களை உருவாக்கியதில் இக் கல்லூரியும் பெரும் பங்கு வகித்துள்ளது என்பது யாவரும் அறிந்ததே.

கல்விப்பணி என்பது தெய்வீகப்பணியாகும். இப்பணி அறியாமை என்னும் இருளை அகற்றி அறிவு என்னும் ஒளியை ஏற்றி வைக்கும் உத்தமமான ஒரு பணியாகும். இப்பணியை உண்மையான அர்ப்பணிப்புடன் கடந்த காலங்களில் ஆற்றிய அதிபர், ஆசிரியர்கள் வணக்கத்திற்குரியவர்கள். அதே வீச்சோடு இன்றும் இப்பணி வீறுநடை போடுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். தற்போதும் பணியாற்றி வரும் அதிபர் ஆசிரியர்களின் அயராத முயற்சியினை போற்றுகிறேன். கல்விப்பணி மட்டுமல்லாது இணைவிதான செயற்பாடுகளிலும் சிறந்த அடைவு மட்டங்களை எட்டிவருவதையிட்டு பெருமிதமடைகிறேன்.

கடந்த கால கல்விப்பணியிலே எமது கட்டைவேலி மெதடித்த திருச்சபை கல்லூரியுடன் மிகவும் நெருக்கமான தொடர்பை பேணியது குறிப்பிடத்தக்கது. எமது திருச்சபை மூலம் நடாத்தப்பட்ட ஆண்கள் இல்லத்தில் நாட்டின் பல பிரதேசங்களிலும் இருந்து வந்து கல்விபயின்ற மாணவர்களும் இக்கல்லூரியிலேயே கற்றனர் என்பதுடன் அவர்களுள் நானும் ஒருவன் என்பதை இத் தருணத்தில் தெரிவிப்பதில் பெருமையடைகிறேன்.

இந்த சந்தோசமான தருணத்தில் இக்கல்லூரியின் பணிகள் மென்மேலும் சிறக்கவும் இன்னும் பல ஆண்டுகள் தொடரும் சந்ததிக்கு சிறந்த சேவையாற்றவும் எனது உளமார்ந்த வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவித்து கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

வாய்ப்பளித்த அதிபருக்கும் சஞ்சிகை வெளியீட்டுக் குழுவிற்கும் எனது வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

# யா/ஞானாசாரியார் கல்லூரி கரவெட்டி
# அமுத விழா(1935-2015)
## ஞானதீபம் சஞ்சிகைக்கான
## வாழ்த்துச்செய்தி



**நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்**
முதலமைச்சர்,
வடமாகாணம்.

யா/ஞானாசிரியர் கல்லூரி தனது எண்பதாவது ஆண்டு நிறைவை கொண்டாடுகின்ற அமுத விழா நிகழ்வில் வெளியிடப்படுகின்ற "ஞானதீபம்" சஞ்சிகைக்கான வாழ்த்துச் செய்தியொன்றை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

இந்து போர்ட் இராஜரட்ணம் அவர்களினால் 1935களில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை இயற்கை எழில் நிறைந்த துன்னாலை மத்தியில் அமைந்துள்ள துடன் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இன்று வரை கல்வித் துறையில் சாதனைகள் புரிந்து சிறந்து விளங்கி வருவது பாராட்டிற்குரியது.

இப்பாடசாலை மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளுடன் நின்று விடாது சைவ பாரம்பரியத்தையுங் கட்டிக்காத்து வருவது ஒரு சிறப்பம்சமாகும்.

இப் பாடசாலை 1963ஆம் ஆண்டில் அரசினால் பொறுப்பேற்கப்பட்ட பின்னர் 1966 தொடக்கம் கலை வர்த்தகப் பிரிவுகளை கொண்ட **1C** தர பாடசாலையாக மிளிர்கின்றது. நகர பாடசாலைகளின் வளர்ச்சி மற்றுங் கூடிய வசதிகள் போன்ற காரணங்களினால் அதிகளவிலான மாணவர்கள் நகர்பபுறப் பாடசாலைகளை நோக்கிப் படையெடுக்கின்றார்கள். எனினும் கிராமப்புற பாடசாலைகளின் தரமுந்தத்துவமும் ஒரு தனித்துவமானது. குரு சிஷ்ய கட்டமைப்பு, ஒழுக்கம், கீழ்ப்படிவு, என்பன போன்ற குணாதிசயங்கள் கிராமப்புற பாடசாலைகளில் கூடிய வாறு காணப்படுகின்றன. ஆசிரியர்களின் அர்ப்பணிப்பும்,மாணவர்களின் அயரா உழைப்பும் பெற்றோரின் கவனிப்பும் அப் பாடசாலைகளில் சிறந்த பெறுபேறுகள் கிடைக்கக் காரணமாகி விடுகின்றன "கற்றுணர்ந் தொழுகு" என்ற மகுட வாசகத்திற்கு அமைவாக இக் கல்லூரி மாணவர்கள் கற்றலுடன் மட்டும் நின்றுவிடாது சைவபாரம்பரியத்துடன் கூடிய சிறந்த ஒழுக்க சீலர்களாகவும் திகழ்வது பெருமையளிக்கின்றது. பல சிறப்புக்களுடன் கூடிய இப் பாடசாலை இன்னும் பல நூற்றாண்டுகள் இப்பகுதியில் சிறந்த கல்விச் சேவையை வழங்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

நன்றி

## திருமதி. விஜயகலா மகேஸ்வரன். பா.உ
### பெண்கள் விவகார பிரதி அமைச்சர்,
### பாராளுமன்ற உறுப்பினர், யாழ் மாவட்டம்

# Mrs.vijayakala Maheswaran. M.P
### Deputy Minister of Women's Affairs
### member of parliament, Jaffna District.



## வாழ்த்துச் செய்தி

கரவெட்டி பிரதேசத்தில் கடந்த 80 ஆண்டுகளாக அறிவினைப் புகட்டி வரும் யா/கரவெட்டி ஞானசாரியர் கல்லூரியானது அமுத விழாவினைக் கொண்டாடுவதோடு "ஞானதீபம்" சஞ்சிகையினையும் வெளியிடுவதில் பெருமிதம் அடைகின்றேன்.

ஒரு நாட்டின் வளர்ச்சியானது மக்களின் செயற்பாடுகளில் தங்கயிருப்பது போல ஒரு மாணவனின் வளர்ச்சி கல்வியிலே தங்கியுள்ளது. அப்படி கடந்த 80 ஆண்டுகளாக இக் கல்லூரியானது நிறைவு செய்த சாதனைகளையும் அதனது வெற்றிக்காக அயராது உழைத்தவர்களையும் புற இன்னோரன்ன விடயங்களையும் இச் சஞ்சிகையானது தாங்கி வருவது எதிர் காலத்தில் இக் கல்லூரியின் சகல விடயங்களையும் கல்லூரிச் சமுதாயம் அறியக் கூடிய வகையில் அமைந்திருப்பது பாராட்டப்பட வேண்டியது. ஒவ்வொரு குழந்தைகளுக்கும் கல்வி இன்றியமையாத செல்வமாகும். அத்துடன் அக் கல்வியினை யாரும் அழிக்கவோ அன்றி சூறையாடவோ முடியாது இச்செல்வத்தினை இக்கல்லூரி 80 ஆண்டுகளாக ஊட்டி பல பொறியியளாலர்களையும், வைத்தியர்களையும், பேராசிரியர்கள் மற்றும் கல்வியலாா்களையும் உருவாக்கியதையிட்டு நாம் மட்டற்ற பெருமை கொள்வதோடு மேலும் இப் பணியானது சிறப்பாகத் தொடர எனது மனமுகா்ந்த வாழ்த்தினைத் தெரிவித்து கொள்கின்றேன்.

கல்வி, பண்பாட்டலுவல்கள்,விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சர் செயலகம்
வடக்கு மாகாணம்,124, ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

OFFICE OF THE MINISTER OF EDUCATION, CULTURAL AFFAIRS, SPORTS & YOUTH AFFAIRS
Northern Province, 124, Adiyapatham Road, Kalviyankadu, Jaffna.

# வாழ்த்து செய்தி



அமுதவிழாவைக் கொண்டாடும் ஞானசாரியார் கல்லூரி என்பது ஆண்டுகளுக்கு முன்னர் பிரத்தியேக பாடசாலையாக கரவெட்டி ஊரிலே உருவாக்கப்பட்டது. அக்காலத்திலே இங்கே ஒரு பாடசாலையை உருவாக்குவதற்கு எண்ணிய தமிழ்பேசும் நல்லுள்ளங்கள் தமது செல்வங்களை நன்னொடையாக வழங்கி பாடசாலையை உருவாக்கியுள்ளனர்.

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக உருவாக்கப்பட்ட பாடசாலைக் கட்டடங்களை இன்னமும் காணலாம். எழுபதுகளிலே ஆயிரம் மாணவர்களுக்கு மேலாக கல்வி பயின்ற இக்கல்லூரியில் பெற்றோர்கள் தூர உள்ள சிறப்பான பாடசாலைகளில் தங்கள் பிள்ளைகளை இணைக்க விரும்புகின்றதனால் தற்போது மாணவர் தொகையில் வீழ்ச்சி யைக் காண முடிகிறது.

அண்மையிலே 2015ம் ஆண்டு இப்பாடசாலையின் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தேன். அவ்வேளையில் மாணவர்கள் மிக உற்சாகமாக பங்கு கொள்வதையும் பலநூற்றுக்கணக்கான ஊர்மக்கள் நிகழ்வை கண்டுகளிக் கவந்திருந்ததையும் அவதானிக்க முடிந்தது. இதன் மூலம் குறைந்துள்ள மாணவர் தொகையை படிப்படியாகக் அதிகரிப்பதற்கு பெற்றோர்கள் பங்களிப்பார்கள் என்ற மேலான நோக்கம் எனது மனதிலே குடிகொண்டுள்ளது. அழகான ஒரு விளையாட்டுத் திடலிலே மாணவர்கள் தங்களது திறமைகளை வெளிக்காட்டிய போல முன்னை வரலாற்றிலே சிறப்பாக தேர்ச்சி பெற்ற மாணவர்கள் போல தற்காலத்து மாணவர்களும் செழுமையான கல்வியறிவுடன் உயர்ந்த பழைய மாணவர்களாகப் பள்ளியிலே இருந்து வெளியேற வாழ்த்துகிறேன்.

# வாழ்த்துச் செய்தி



யா/ஞானாசிரியர் கல்லூரி சமூகத்தினரால் அமுத விழாவைக் கொண்டாடும் முகமாக வெளியிடப்படும் "ஞானதீபம்" சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமிதம் அடைகின்றேன்.

ஒரு கிராமத்தின் கல்வி, கலாசார விழுமியங்களின் பாரம்பரியங்களைப் பேணிப் பாதுகாக்கும் நிறுவனங்களுள் பாடசாலைகள் முதன்மையானவை. இவ்வகையில் இயற்கை எழில் நிறைந்த துன்னாலை எனும் கிராமத்தின் மத்தியில் அமைந்துள்ள யா/ஞானாசிரியார் கல்லூரி இந்து மத பண்பாட்டு விழுமியங்களின் பாரம்பரியங்களை பல சகாப்தமாக கடைப்பிடித்து வருவதென்றால் மிகையாகாது.

பாடசாலையில் பௌதீக, கல்வி, விளையாட்டு, கலாசாரம் போன்ற துறைகளின் வளர்ச்சியை ஆவணப்படுத்தும் சான்றுகளாக காலத்துக்குக் காலம் வெளிவரும் பாடசாலை சஞ்சிகைகள் அமைவதுடன் பிற்கால சந்ததியினருக்கும் வரலாற்றுப் பதிப்புக்களாகவும் இவை உதவுகின்றன. இந்த வகையில இப் பாடசாலையினால் வெளியிடப்படும் ஞானதீபம் சஞ்சிகையை வெளியிடுவதிலும், பாடசாலையின் அபிவிருத்தியை சுட்டிக் காட்டுவதிலும் இப்பாடசாலையின் செயற்பாடுகளை ஆவணப்படத்துவதிலும் நடவடிக்கை எடுத்ததையிட்டு அதிபர், ஆசிரியர்கள், மலர்க்குழு உறுப்பினர்கள் அனைவரையும் பாராட்டுகின்றேன்.

இப்பாடசாலை பல கல்விமான்கள், உயரதிகாரிகள், சிறந்த வீரர்கள், நற்பிரஜைகள் போன்றோரை உருவாக்கி மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் பல சாதனைகளைப் படைக்கவும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**இ.இரவீந்திரன்**

**செயலாளர், கல்வி, பண்பாட்டலுவல்கள்,**

**விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,**
**வடமாகாணம்.**
22.05.2015

# மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்
# District Secretariat, Jaffna

## அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



**நா.வேதநாயகன்,**
அரசாங்க அதிபர் / மாவட்ட செயலாளர்,
யாழ்.மாவட்டம்.

மத்திய ஞானாசாரியர் கலா விருத்தி சங்கத்தினால் 1935ஆம் ஆண்டு சைவ பாரம்பரியத்தையும், நல்லறிவையும் மேம்படுத்தும் நோக்கில் கரவெட்டி ஞானாசாரியர் கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டதாகும்.

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவினுள் அமையப்பெற்ற இக்கல்லூரி இயற்கை எழில் நிறைந்த நெல் வயல்களால் சூழப்பெற்றதும், அருகே ஞானவைரவர் பெருமானது அருட்கடாட்சமும் ஒருங்கு சேரப் பெற்றதும் சிறப்புடையதாகும்.

இக் கல்லூரி விவசாய பெருமக்களின் ஞானகூடமாக விளங்கும் அதேவேளை 1938ஆம் ஆண்டு சைவ வித்தியா அபிவிருத்தி சங்கத்தினால் போசிக்கப்பட்டதும் ஆகும். இக் கல்லூரி 1963இல் அரசினால் பொறுப்பேற்கப்பெற்று தற்பொழுது 1Cதர பாடசாலையாக விளங்குவதும் குறிப்பிடத்தக்கது.

இக் கல்லூரி "கற்றுணர்ந்தொழுகு" என்ற மகுட வாசகத்திற்கு ஏற்ப மாணவர்களை கல்வி கேள்விகளால் சிறப்புப் பெற வைத்த சாதனைகளை தனது அகவை எண்பதில் அமுத விழாவை கொண்டாடும் இவ்வேளையில் ஞானதீபம் எனும் சஞ்சிகையை வெளியீடு செய்வதும் போற்றுதற்குரியது.

அகவை எண்பது வரை இக்கல்லூரி வளம் பெற உழைத்த அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், நலன்விரும்பிகள் என அத்தனை உள்ளங்களையும் வாழ்த்துவதோடு ஞானதீபம் பிரகாசிக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

# பிரதேச செயலாளரின் வாழ்த்துச்செய்தி



**எஸ்.சிவபறீ**
பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம்,
கரவெட்டி.

கரவெட்டி ஞானசாரியர் கல்லூரி தன்னுடைய அமுதவிழா ஆண்டில் கால்பதித்ததின் சுவடாய் வெளிவரும் "ஞானதீபம்" மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

கரவெட்டிப் பிரதேசம் புலமையின் வேராகவும் விலாசமாகவும் விளங்கி வருவதற்கு ஊற்றுக்கண் திறந்த பாடசாலைகளின் வகிபாகமும் அவற்றோடு பின்னிப் பிணைந்து ஆசிரியார்களின் சேவைகளுமே காரணம் என்பது சொல்லாமலே தெரிகின்ற ஒன்றாகும். இந்த வகையில் ஞானாசாரியார் கல்லூரியின் எண்பதாண்டு சேவையும் கவனத்திற்குறியது ஆகும். இந்த பாடசாலையின் சாதனைகள், உருவாக்கிய அறிஞர்கள், செய்து கொண்டிருக்கும் பணிகள், இடர்களை ஆவணமாக்கும் நினைவகமாக்கி மீட்கும் இந்த முயற்சி பெரிதும் பாராட்டப்பட வேண்டியது ஆகும்.

நாம் எமது சுயத்தையும் இருப்பையும் இற்றைவரை தக்க வைத்துக் கொள்வதற்கு கல்வித்துறையில் கால்கோளிட்டவர்கள் ஆறுமுக நாவலரும் அவர் வழிவந்தவர்களுமேயாகும். "சைவமும் தமிழும்" இவர்களது தாரகமந்திரமாக இருந்தபோது அவர்களது செயற்பாடே நம்மவர் கல்வியை நன்கு வளர்த்தது. இந்த வகையில் எல்லோரும் இணைந்து வனப்புற வளர்த்த எமது வடமராட்சிக் கல்விப் பாரம்பரியத்தின் ஆரம்பகால ஊற்றுக்களின் நிலைக்களில் ஒன்றாக ஞானசாரியார் கல்லூரி அமைந்திருக்கின்றமை நமக்கெல்லாம் பெருமை தருவதாகும்.

மிகச்சிறந்த புறச்சுழலில் அமையப் பெற்ற இப்பாடசாலை தனது நோக்கத்தினை நிலைபேறாக்குவதற்கு உகந்த அகச்சூழலை அமைத்துக் கொள்ள வேண்டுமெனும் எமது எதிர்பார்ப்பை இவ்விடத்தில் பதிவு செய்து கொள்ள விரும்பும் அதேவேளை இப்பாடசாலையும் அதனோடு இணைந்த சமூகமும் சேர்ந்து வெளியிடுகின்ற இவ்வமுதவிழாச் சிறப்பு மலரின் இக் கல்விநிறுவனமானது தனது வரலாற்றில் சந்தித்தவற்றினதும் சாதித்தவறினதும்

குறுக்குவெட்டுமுகத்தினை: இங்கு இருக்கிறவர்களுக்கும் எதிர்காலசந்ததியினருக்கும் சமர்ப்பிக்கும் என்ற நம்பிக்கையோடு என்றைக்கும் உபயோகப்படும் இத்தகைய வரலாற்று ஆவணத்தினை ஆக்கித்தந்துள்ள பாடசாலைச் சமூகத்திற்கும் மலர்க் குழுவினருக்கும் குறிப்பாக அதிபருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

# வாழ்த்துரை



**சி.நந்தகுமார்**
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்வி அலுவலகம்,
வடமராட்சி.

வடமராட்சி பிரதேசத்தில் கரவெட்டியின் மத்தியில் துன்னாலை கிராமத்தில் ஞானஒளியாய் நிலைநின்று கல்வி அறிவு வழங்கி வருகின்ற "ஞானாசாரியார் கல்லூரி" தனது அமுதவிழாவை இன்று கொண்டாடுவதை யிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

1935ஆம் ஆண்டு ஆறுமுகநாவலர் பரம்பரையைச் சேர்ந்தவர்களும் இந்துபோர்ட் இராஜரட்ணம் சபையினரும் சைவத்தையும் தமிழையும் வளர்பபதற்காகவும் பாதுகாப்பதற்காகவும் உருவாக்கிய கல்லூரிகளில் யா/ஞானசாரியார் கல்லூரி சிறப்பிடம் பெறுகின்றது.

துன்னாலை என்ற இயற்கை எழில் நிறைந்த அழகிய கிராமத்தின் மத்தியில் 1935ஆம் ஆண்டு மகாதேவா சுவாமிகளால் அடிக்கல் நாட்டப்பட்டு உருவாகிய கலைக்கோயில் இன்று 80 ஆண்டுகளைக் கடந்து சாதனைகள் படைத்து "கற்றுணர்ந்து தொழுகு" என்ற மகுடவாசகத்தை அடியொற்றி நூற்றாண்டை நோக்கி வளர்ந்து வரும் இக் கல்விக்கூடத்திற்கு எனது வாழ்த்துக்கள்.

கிராமிய நறுமணத்துடன் கலை, வர்த்தக, விஞ்ஞான, கணித துறை களில் சிறந்த மாணவர்களை உருவாக்கி சைவப் பாரம்பரியத்தையும் தமிழ் பற்றையும் மண்பற்றையும் என்றும் மறவாத சமூகம் ஒன்றை உருவாக்கி அறிவொளி பரப்பிவரும் கல்லூரித் தாய்க்கு எனது வாழ்த்துக்கள்.

இக் கல்லூரி தனது கல்விப் பணியை பல் நூற்றாண்டுகள் சாதனைகளுடன் தொடர வாழ்த்துகின்றேன்.

# வாழ்த்து செய்தி



**யோ.ரவீந்திரன்**
**பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்)**
**வடமராட்சி**

"எம்மை யுலகத்தும் யாங் காணோம் கல்வி போல்
மம்ம றறுக்கு மருந்து"

"கற்றுணர்ந் தொழுகு" என்ற மகுட வாசகந்தாங்கி எட்டுத் தசாப்த காலமாய் கல்விப் பணியாற்றிவரும் யா/ஞானசாரியர் கல்லூரியின் அமுத விழா மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

சைவமும் தமிழும் தழைக்க முன்னின்றுழைத்த ஆறுமுக நாவலரின் வழிப்படுத்தலில், இந்து போர்ட் இராசரத்தினத்தினம் குழுமத்தனரின் ஒன்றிணைந்த முயற்சியினால் 1935ல் மகாதேவ சுவாமிகளால் அடிக்கல நாட்டப்பெற்று, இக் கலைக்கோவில். இன்று 80வது ஆண்டில் காலடித்தடம் பதித்து கல்விப் பணியில் தனித்துவம் மிக்க சாதனைகளை இக் கல்விக் கூடம் படைத்து வருகின்றது என்றால் அது மிகையில்லை.

வயலும் வயல் சார்ந்த மருதநிலப் பிரதேசத்தில் கல்வித் தேவையினை உணர்ந்த ஏழைச்சிறார்களுக்கு கல்வியினை வழங்குவதில் ஞானசாரியார் கல்லூரியின் பங்கு அளப்பரியது. இன்று எழுச்சி பெற்றிருக்கும் "அனைவருக்கும் கல்வியில் சம வாய்ப்பு" கொள்கையினை கல்லூரியின் ஆரம்ப காலத்தில் இருந்தே செயலுருப் பெறச் செய்த பெருமை இக் கல்லூரிக்கே உரித்தானது. இன்று இம் மண்ணின் பெருமை யினை உலகலாகிய ரீதியில் எடுத்தியம்பும் கற்றறிந்தோர் சமூகமொன்றினை உருவாக்கி அறிவொளிபரப்பி வருகின்றாள் இக் கல்லூரித்தாய்.

கல்லூரியின் தோற்றமும் வளர்ச்சியும் அதன் நோக்கத்திலிருந்து வழுவாது எதிர்காலத்திலும் சமூகம் பயன்பெறும் வகையில் தனது கல்விப் பணியினைச் சாதனையுடன் தொடர வாழ்த்துகின்றேன்.

"கல்வி யாலிங்கு மேனிலை சேர்வோம்"

# கோட்டக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி



**திரு க. பொன்னையா,**
கோட்டக் கல்விப் பணிப்பாளர்,
கோட்டக் கல்வி அலுவலகம்,
கரவெட்டி.

இயற்கை எழில் கொஞ்சும் சங்ககால மருதநிலத்தின் பாங்காய் குளிர்ச்சி பொங்கும் சோலையாய் விளங்கும் கரவைப்பதியின் துன்னாலைக்கிராமத்தில் தன்னிகரில்லாக் கல்விக் கூடமாய்க்காட்சி தரும் யா/ஞானசாரியார் கல்லூரியின் அமுதவிழாவுக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இப்பாடசாலையானது கல்வித்தரத்திலும் இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் முன்னணி வகிப்பது பெருமைக்குரிய விடயமாகும். சென்ற வருடம் க.பொ.த (உ/த) பரீட்சையில் 3A பெறுபேற்றைப் பெற்றுக் கொண்டது சிறப்புக்குரியதாகும். அதுமட்டுமல்லாது தமிழ்மொழித்திறன் தமிழறிவு வினாடிவினாப் போட்டியில் 1997 இல் தேசியமட்டத்தில் 1ஆம் இடத்தைப் பெற்று சாதனையினை நிலைநாட்டியுள்ளது. மேலும் 1998, 1999 இல் மாவட்ட மட்டத்திலும் முதலாம் இடத்தைப் பெற்றுத்தந்ததற்கு உதவிய அக்காலத்தில் சேவையாற்றிய அதிபரான திரு.ஏ.சிவசிதம்பரத்தினையும் பாராட்டுகின்றேன்.

கரவெட்டிக் கோட்டத்தில் 1C தரப்பாடசாலையாக மிளிருவதுடன் இணைபாடவிதான ஆங்கில தினப்போட்டி ,விளையாட்டுப் போட்டிகளில் கோட்ட , வலய மட்டங்களிலும் வெற்றி பெற்றுப் பெருமையைத் தேடித்தந்துள்ளது.

இப்பாடசாலையானது பல சிந்தனை ஆற்றல் உள்ள புகழ் பூத்த அதிபர்களை உருவாக்கியதில் பெருமை அடைகிறது. அந்த வகையில் அதிபர்களுள் அமரர்களான திரு.நாகராசா, திரு.சிவப்பிரகாசம், திரு.V.K. நடராசா போன்றவர்களை இந்நாளில் நினைவுகூற வேண்டும். அவர்களோடு அதிபர்கள், ஆசிரியர்களின் அற்பணிப்பான சேவையோடு இப்பாடசாலை பரிணாமம் பெற்று மிளிர்கின்றது.

கிராமத்துக்குரிய சைவப்பாரம்பரியங்கள், பண்பாடுகள், கலாச்சாரங்கள் என்பவற்றைப் பேணும் இப்பாடசாலையானது கலை, வர்த்தக துறைகளில் பல திறமையான மாணவர்களை உயர்பட்டப்படிப்புக்காக அனுப்பியுள்ளது. அத்தோடு சீரிய ஆற்றல் மிளிருகின்ற கல்விமான்கள், அதிபர்கள், ஆசிரியர்களை உருவாக்கியதிலும் முன்னணி வகிக்கின்றது. அவர்களுள் இப்பாடசாலையின் பழைய மாணவர்களான கல்விப்பணிப்பாளர்களான திரு.S.சிவநாதன், திரு.V.செல்வராஜா அவர்களோடு கணக்காளர் திரு. செல்லத்துரை போன்றோர்களை உருவாக்கியதில் பெருமையடைகின்றது.

இப்பாடசாலையின் கல்விச்சமுகம் பல ஆண்டுகள், எமது துன்னாலைக் கிராமத்திற்கு சிந்தனையும், ஒழுக்கமும், பண்பாடும் நிறைந்த சமுதாயத்தை உருவாக்க உந்துசக்தியாக திகழ வேண்டுமென உளமார வாழ்த்துகிறேன்.

# வாழ்த்துச் செய்தி



**செ.உதயகுமார்**
மாகாண கல்விப் பணிப்பாளர்,
வடமாகாணம்.

1935ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட யா/ஞானசாரியர் கல்லூரி 2015ம் ஆண்டளவில் 8ம் ஆண்டு நிறைவில் அமுதவிழாவையும் ஞானதீபம் சஞ்சிகை வெளியிடுவதையும் வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

துன்னாலை எனும் இயற்கை எழில் நிறைந்த கிராமத்தில் இப்பாடசாலை அமைந்துள்ளது. கிராமிய நறுமணத்துடன் கலை விஞ்ஞான வர்த்தக துறைகளில் சிறந்த நல் மாணவர்கள் இப்பாடசாலையில் கல்வி கற்கின்றனர்.

கற்றுணர்ந்தொழுகு என்ற மகுடவாசகத்துடன் இயங்கும் இப்பாடசாலை மேலும் வளர வாழ்த்துகிறேன்.



# வாழ்த்துரை

**ச.ஸ்ரீராமச்சந்திரன்**
**கோட்டக் கல்வி அதிகாரி,**
**பருத்தித்துறை.**

வடமராட்சியிலே துன்னைப் பதியின் நடுவினில் அமைந்து அறிவொளி பரப்புகின்ற ஞானசாரியர் கல்லூரி அமுதவிழா காணுகின்றது. அதனை யொட்டி வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துரை வழங்குவதிலும் கல்லூரி அன்னையை வாழ்த்தி வணங்குவதிலும் பெருமிதமும், மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

1935ஆம் ஆண்டு சைவப் பாரம்பரியத்தையும் தமிழையும் வளர்க்கவென ஆரம்பமான பாடசாலை பல தடைகளையும் இடர்களையும் கடந்து வளர்ந்து நிற்கின்றது. ஆரம்பித்த காலம் முதல் கிராமத்தில் பொருளாதார ரீதியாகவும், அறிவு ரீதியாகவும் நலிவுற்ற மாணவர்களுக்கு உரமூட்டி உறுதுணையாக நின்று உயர்வான வளர்ச்சியை ஏற்படுத்திய நிலையம். இங்கு பயின்று உயர் பதவிகளை வகித்தோர் பலர். அடிப்படை அரம்பக் கல்வியை உறுதியாகப் பெற்று உயர்வடைந்தோரே மிகப்பலர். கற்கவெனச் சென்றவர்களையும் கற்பிக்கச் சென்றவர்களையம் உயர்த்திய பெருமையுடையது. அக் கலைக்கோயில் ஞானசாரியார் கல்லூரியில் பிரதி அதிபராக, அதிபராகப் பணியாற்றி கோட்டக்கல்வி அதிகாரியாகும் சிறப்பைத் தந்த கல்விக்கூடம். “கற்றுணர்ந்தொழுகு” என்ற மகுட வாசகத்தின் கீழ் இயங்கும் கல்லூரி மேன் மேலும் கற்றோரை உருவாக்கி வளர ஞான வைரவரை இறைஞ்சுகின்றேன். கல்லூரிக் கோயில் என்றும் உயர் பணியாற்றிச் சிறப்பு பெற வாழ்த்துகின்றேன்.

# வாழ்த்துச் செய்தி



**வை.ஸ்ரீரங்கநாதன்,**
**கிராம அலுவலர்,**
**துன்னாலை மேற்கு.**

ஒரு கிராமத்தின் அடையாளமாக விளங்குபவை ஆலயம், பாடசாலை சனசமூக நிலையம். இந்த வகையில் இக் கிராமத்தில் அடையாளமாக மட்டுமின்றி அயற் கிராமங்களிற்கும் சிறந்ததோர் அடையாளமாக விளங்குவது யா/ ஞானசாரியர் கல்லூரியாகும். இக் கல்லூரியானது ஆரம்பகாலம் தொட்டே கல்வி, சமூக மேம்பாடு, ஒழுக்கம் ஆகியவற்றுக்கு முன்னோடியாகவும் சிறந்த வழிகாட்டியாகவும் தன்னை வெளிப்படுத்திவரும் நிறுவனமாகும் இப் பகுதி கிராமஅலுவலர் என்ற வகையில் இக் கல்லூரியை வளர்த்து முன்னிலைப்படுத்திய அறிஞர்கள், பழைய மாணவர்கள் அன்பர்கள் அனைவரையும் நினைவு கூர்ந்து இக் கல்லூரியானது மேலும் பல சிறப்புக்கள் பெற்று மேலோங்க வாழ்த்துகின்றேன்.

*நன்றி*

# அமுதவிழா வாழ்த்து



**மக்கள் சேவையிலுள்ள,**
**ஐயாத்துரை ஶ்ரீரங்கேஸ்வரன்**
எதிர்க்கட்சித் தலைவர்,
பருத்தித்துறை பிரதேசசபை,
(அமைப்பாளர், ஈபிடிபி, வடமராட்சி)

1935ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட யா/கரவெட்டி ஞானசாரியார் கல்லூரி கல்விப் பணியில் காலடி வைத்து எண்பது ஆண்டுகளாகின்றது. 2015இல் அது தனது அமுதவிழாவை கொண்டாடுகிறது. ஞான தீபம் என்ற சஞ்சிகையை பாடசாலைச் சமூகம் வெளியிட்டு வைப்பது மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது. அதற்கு ஆசியுரை வழங்குவதில் நான் இரட்டிப்பு மகிழ்ச்சியடைகின்றேன்.

ஒரு காலப்பகுதியில் கரவெட்டி பிரதேச கல்வி வளர்ச்சியின் முக்கிய தூணாக இந்து தமிழ் கல்வி பாரம்பரியத்தைக் கட்டிக் காக்கும் முக்கிய அலகாக இப்பாடசாலை திகழ்ந்திருக்கின்றது. இப்பாடசாலையில் கற்றவர்கள் வைத்தியர்களாக, பொறியியலாளர்களாக. கல்வியதிகாரிகளாகப் பல நிலைகளிலும் பணியாற்றிய, பணியாற்றி வருகின்ற செய்தியைப் பலரும் அறிவர்.

நீண்ட வரலாற்றையும் பாரம் பரியத்தையும் கொண்ட இப்பாடசாலை இயற்கை எழில்கொஞ்சும் ரம்மியமான இடத்தில் கோவிலின் அருகில் அமைந்திருப்பது இன்னொரு சிறப்பம்சமாகும். நகர்ப்புறப் பாடசாலைகளை நோக்கிய நகர்வால் இன்று இப் பாடசாலை மாணவர் எண்ணிக்கையில் சற்று வீழ்ச்சி ஏற்பட்டாலும் அது ஆற்றிவரும் அரும்பணியில் எந்தத் தொய்வும் ஏற்படவில்லை என்றே கூறலாம்.

கிராமப்புற மாணவர்களின் கல்வியில் அதிக அக்கறை கொண்ட ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாம் ஞானாசாரியர் கல்லூரியின் வளர்ச்சிக்குப் பல உதவிகளை வழங்கியுள்ளோம். தொடர்ந்தும் வழங்குவோம் என்பதை இவ்வேளையில் தெரிவித்துக்கொள்கின்றேன். இக்கால்லூரி மேலும் சிறக்க பல நூறண்டு கல்விப் பணியாற்ற இறைவனை வேண்டி ஆசியுரையை நிறைவு செய்கின்றேன்.

**நன்றி**



# கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வாழ்த்துச் செய்தி


**வே.சிவசிதம்பரம்,**
தலைவர், பழைய மாணவர் சங்கம்,
ஞானாசாரியர் கல்லூரி, கரவெட்டி.


# கல்லூரித்தாயே நீ நீடுவாழி

கல்லூரியின் பழைய மாணவனாக, முன்னாள் அதிபராக இந்நாள் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் தலைவராக அபிவிருத்தியிலும் நலனிலும் ஈடுபாடு கொண்டவனாக அமுதவிழா காணும் கல்லூரித் தாயை வாழ்த்துவதில் மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றேன்.

சைவம் நலிவுற்றிருந்த காலத்தில் துன்னாலை பெரும்பகுதியின் நடுநாயகமாக ஆரம்பமானது எங்கள் கல்லூரி. மருதமரநிழலில்அமைந்த ஞான வைரவரின் துணையுடன் வளமுடன் வளர்ந்து அமுதவிழா கொண்டாடுவது கண்டு மனம் பூரிப்படைகின்றேன்.

கிராமத்தின் சைவநெறி சார்ந்த பெரியார்களின் பெருமுயற்சியால் உருவாகி அறியாமை அகற்றி அறிவொளி பரப்பும் கலைக்கூடம் தன்னலம் அற்று அர்ப்பணிப்புடன் கடமையாற்றிய அதிபர்களினதும் ஆசிரியர்களினதும் சேவையால் கற்றோர் சமூகத்தை உருவாக்கிய கல்லூரி எங்கள் கல்லூரி.

அறியாமை நிறைந்த குழந்தைகளை புடமிட்டு முழுமையான மனிதனாக சமூகத்துக்கும் நாட்டுக்கும் உகந்த நற்பிரஜைகளாக வளர்த்த அறிவாலயம். இது சமூகத்தின் தேவைக்கேற்ப பொறியியலாளர்களை, வைத்திய நிபுணர்களை , கணக்காளர்களை , கல்விப் புலத்தில் கல்விமான்கள் என பல விற்பன்னர்களை வளர்த்தது எங்கள் கல்லூரி. அவர்கள் தத்தம் திறனுக்கு ஏற்ப வளர்ச்சி பெற பலமான உறுதியான அத்திவாரம் ஒன்றை இட்டது என்றால் மிகையாகாது. அந்த வகையில் அது நிறுவப்பட்டதன் நோக்கில் வெற்றி பெற்றுள்ளது என்றே கூற வேண்டும். எனினும் கல்லூரியின் வளர்ச்சிப் பாதையில் இன்று தளர்வு நிலை தென்பட்டாலும் அதனை வெற்றிகொண்டு மென்மேலும் வளர நாம் எல்லோரும் சேர்ந்து உறுதி பூணுவோமாக.

நீர் நிறைந்த ஊற்றுக் கிணறுபோல் கல்விச் செல்வத்தை பரப்பும்கலைத் தாய் தான் வளர்த்த மக்களால் பௌதிகரீதியாகப் போஷிக்கப்பட்டு பொலிவுற்று பூரித்து நிற்கின்றாள்.



# அதிபரின் அமுதவிழா வாழ்த்து

திரு ப.செல்வவிநாயகம் (அதிபர்)
ஞானாசாரியர் கல்லூரி

"கற்றுணர்ந்தொழுகு" என்பதை மகுடவாசகமாகக் கொண்டு துன்னாலை மேற்கில் அமைந்து கரவெட்டி அடங்கலாக கல்வி ஒளிபாய்ச்சும் சைவப்பாரம் பரியம் மிக்க கல்லூரியாக யா/ஞானசாரியர் கல்லூரி விளங்குகிறது. இக்கல்லூரியில் 18வது அதிபராக இருந்து அமுதவிழா வாழ்த்து வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். "கிராமத்துக்கு போங்கள் " என்று வழிப்படுத்தினார் மகாத்மாகாந்தி ஏனெனில் அங்குதான் சேவை அவசியம் தேவையானவர்கள் உள்ளார்கள்.

மேலும் இக்கல்லூரி அதிசிறந்தவளம் நிறைந்த 1Cதர கல்லூரியாகும். இருந்தும் மாணவர் தொகையில் அண்மைக் காலமாக வீழ்ச்சி காணப்பட்டு வருவது. பிரதேச மக்களின் மனப் போக்கினாலாகும். இன்று இக்கல்லூரியில் பயிலும் 99% மான மாணவர்கள் கல்வி பற்றிய முக்கியத்துவத்தை அறியாத குடும்பங்களைச் சேர்த்தவர்களாவர்,

"கஞ்சி குடிப்பதற்கிலார்,
காரணம் இதுவென்றும்
அறியார் இதன்"

பாரதியின் இந்தவரிகளே என்நினைவுக்கு வருகின்றது. "காரணம் இது வென்றும் அறியார்" என்பது இவர்களின் கல்வி பற்றி எடைபோட சிறந்த குறியீடாகும். இருப்பதும் இவர்களை கல்வியின் செல்நெறியில் வழிபடுத்த வேண்டியது எமது கடமையாகும்.

1990இல் ஜோமிதியன் பிரகடனத்தில் (jomtien declaration) எல்லோருக்குமான கல்வி இலக்குகள் உருவாக்கப்பட்டன. இப்பங்களிப்பானது 2000 ஆண்டு செனகல் நாட்டின் டாகர் என்றுமிடத்தில் டாகர் செயல் சட்டம் ( dakar frame work of action ) என்பதுடன் மீளவும் உறுதி செய்யப்பட்டது. இவ்வாறான கொள்கைக்கேற்ப உட்படுத்தல் கல்வி முறையில் மாணவர்களை பாகுபாடற்ற முறையில் கற்றலில் உட்படுத்தி கல்வியை வழங்குவதே ஒரு கிராமியக் கல்லூரியின் சிறப்பாகும்.

இக்கல்லூரி நூற்றாண்டு விழாவை கொண்டாடும் தருணத்தில் முன்னைய காலங்களைப் போன்று பல்வேறு பிரதேச மாணவர்களை பெருமளவு உள்ளடக்கியதாக "எங்கள் கல்லூரியில் எம் பிள்ளைகள்" என்ற தொனிப்பொருளில் சிறந்த சாதனைகளை நிகழ்த்தி, வடமராட்சியில் சிறந்த கல்லூரிகளில் ஒன்றாக திகழ வேண்டுமென்று எல்லாம் வல்ல இறையருளை வேண்டி வாழ்த்துகின்றேன்.

# உபஅதிபரின் உள்ளத்திலிருந்து...

கடந்த 80 வருடங்களில் துன்னாலை கிராமத்தில் கல்வி வளர்ச்சியிலும் சமூக மேம்பாட்டிலும் ஆக்க பூர்வமான பங்களிப்பை செய்து நிமிர்ந்து நிற்கும் இக் கல்லூரியின் அமுத விழாவில் வாழ்த்துரை வழங்குவதில் பெரு மகிழ்வு அடைகிறேன்.



திரு வே.கருணாநிதி
உபஅதிபர்
யா/ஞானசாரியர் கல்லூரி

நல்ல மனம் படைத்தோரால் ஆரம்பிக்கப்படுகின்ற எந்த செயற்பாடுகளும் நல்ல விளைவுகளையே தரும். 1935ஆம் ஆண்டு இந்தப் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் அக்கறை கொண்ட பெரியோர்களால் ஆரம்பிக்கப்பட்ட இக் கல்லூரி இன்று வடமராட்சியில் 1C தரத்திற்கு உயர்த்தப்பட்டு கல்விச் சாதனைகளையும் (பெறுபேறுகளில்) இணைப்பாட விதான செயற்பாடுகளில் தனக்கென ஒரு முத்திரையையும் பதித்து வருவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

தரம் 5புலமைப் பரிசில், கா.பொ.த. சாதாரண தரம் கா.பொ.த உயர்தர பரீட்சை பெறுபேறுகளிலும் உயர் நிலைகாட்டி நிற்கின்றன.

இயற்கை எழிலோடு அமைந்துள்ள இக்கல்லூரியினை வளர்ப்பதில் அனைத்து தரப்பினரும் சிறப்பாக செயலாற்றி வருவது மனமகிழ்வுக்குரிய தொன்றாகும். இக் கல்லூரியின் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர் கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் ஆகிய அனைவரும் ஒன்றிணைந்து பாடசாலையை முன்னேற்றத்தில் அக்கறை செலுத்துவது வரவேற்கக் கூடியதாகும்.

இவரது காலத்தில் மேலும் பல சிறப்புக் களை இப்பாடசாலை பெற வேண்டும் என வாழ்த்துகிறேன்.

தற்போதைய பாடசாலையின் அதிபராக திரு ப.செல்விநாயகம் அவர்கள் 2012இல் கடமையேற்றதைத் தொடர்ந்து இக்கல்லூரி சகல துறைகளிலும் மேம்பட்டு வருவது சிறப்பான அம்சம் ஆகும். சிறந்த கல்விப் புலமையும் மனித நேயம் மிக்கவரும் ஆகிய இவரின் சிறந்த ஆளுமையின் கீழ் பாடசாலையின் கல்விப் பெறுபேறுகள் உயர்ந்த நிலையை அடைந்துள்ளன. குறுகிய காலத்தில் பாட சாலையின் பௌதிக வளங்கள் அதிகரிக்கப் பட்டுள்ளன.

இப்பாடசாலையின் கல்விப்பெறுபேறுகளை உயர்த்துவதில் இங்கு கற்பிக்கின்ற ஆசிரியர்களின் பணி மகத்தானது. தங்கள் பிள்ளைகளை நம்பிக்கையுடன் இப்பாடசாலையில் சேர்த்து சாதனைகள் படைப்பதற்கு உறு துணையாக இருக்கின்ற பெற்றோர்களும் வாழ்த்துக்குரியவர்களே.

இப் பாடசாலையில் இணைபாடவிதான செயற்பாடுகளில் ஒன்றாகிய விளையாட்டு த்துறையை வளர்க்க வேண்டும் என்ற ஆர்வம் உள்ள கொடையாளர்கள் விளையாட்டு மைதானத்திற்குரிய நிலத்தை வழங்கி முதல்தரமான விளையாட்டு மைதானத்தை உருவாக்கிக் கொடுத்துள்ளார்கள்.

இது அம் மாணவர்களின் உடற் தகமையை வளர்ப்பதில் சிறப்பான பங்கு ஆற்றுகின்றது.

இப் பாடசாலையின் பழைய மாணவர்கள் பாடசாலையின் பௌதிக வளத்தைப் பெருக்கு வதில் காத்திரமான பங்களிப்புச் செய்துள்ளனர். ஆவர்களையும் வாழ்த்து வதில் பெருமகிழ்வு அடைகிறேன்.

மேலும் சிறப்பாக செயற்பட்டு மேலும் பல சாதனைகளைப் படைக்க வேண்டும் என மனமகிழ்வுடன் வாழ்த்துகிறேன்.

# ஞான தீபத்தை வாழ்த்துகிறேன்



திரு எஸ்.ரவிசங்கர்
செயலாளர்
பாடசாலை அபிவிருத்திக் குழு

நீண்ட கால வரலாற்றைக் கொண்ட எமது கல்லூரியின் எண்பதாவது ஆண்டின் நிறைவில் அமுத விழா கொண்டாடும் இவ் வேளையில் வெளிவரும் ஞானதீபம் சஞ்சிகைக்கு எனது வாழ்த்துக் களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்சியடைகின்றேன்.

பல்வேறு துறை அறிஞர்களையும் சாதனையாளர்களையும் உருவாக்கிய எமது கல்லூரித் தாய்க்கு எண்பது வருடங்கள் நிறைவடைந்து விட்டது என்பதை எண்ணி பெருமையடைகிறேன். தொடர்ந்து வரும் காலங்களிலும் மேலும் பல சாதனைகளை எம் கல்லூரி சாதிக்க எனது வாழ்த்துக்களை வழங்குகிறேன்.

# மலராசிரியர்களின் மனதிலிருந்து...



திருமதி சாந்தமலர் குகனேசன்

எண்பது ஆண்டுகளை நிறைவு செய்து கொள்ளும் காலத்தில் அமுத விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் யா/ஞானாசாரியர் கல்லூரியின் அமுதவிழா மலரான ஞான தீபத்தின் நுழைவாயிலில் நாம் நிற்கின்றோம். 1935ம்ஆண்டு துன்னாலை வாழ் பெருமக்களால் சிறுகுடிலாக ஆரம்பிக் கப்பட்ட இக் கல்லூரியின் கம்பீர தோற்றம் அதன் கவின் அழகு எங்கள் எல்லோரையும் பிரமிக்க வைக்கின்றது.

எங்கள் முன்னோர் கொஞ்சம் கொஞ்சமாக சேகரித்த சொத்து இது, என்றென்றும் அழியாத கல்விச் சொத்து இது.எங்கள் சந்ததிகளின் வழிவழியான உயர்வுக்கு வழிகாட்டிய ஆலயம் இது. பசுமையான மருத நிலம் சூழ்ந்து இருக்க பக்கத்திலே ஞானவைரவர் பார்த்திருக்க. இயற்கை எழில் கொஞ்சும் கிராமிய சூழலில் கடந்த 80ஆண்டுகளாக இயங்கிவரும் இக் கல்லூரியின் அமுத விழாமலருக்கு மலராசிரியர்களாக இருந்து முன்னுரை எழுதுவதற்கு எல்லாம் வல்ல ஞானவை ரவரும், அத்துளு அம்பாளும் எங்களை ஆசிர்வதித்துள்ளனர்.

இக் கல்லூரியில் கடந்த காலங்களில் கல்லூரி அமைந்துள்ள சூழல் மட்டுமன்றி கரவெட்டி கிழக்கு, நெல்லியடி, அரசடி, புதுத்தோட்டம் மந்திகை, புலோலி, வல்லிபுர குறிச்சி, வரணி ஆகிய அயல் கிராமங்களில் இருந்தும் மாணவர்கள் வந்தும் கல்வி கற்றனர் ஏறத்தாழ இங்கு 1000 மாணவர் கல்வி கற்றதை நான் நேரடியாக கண்டுள்ளேன்.



க.ஸ்ரீசந்திரன்

எத்தனையோ கல்விமான்களையும் அறிஞர்களையும்சமுதாயத்தில் உயர்ந்த நிலையில் உள்ளவர்களையும் உருவாக்கியது இக்கல்லூரி, மருத்துவர்கள், பொறியியலாளர் கள், ஆசிரியர்கள் சட்டத்தரணிகள், வர்த்தகர் கள், கணக்காளர்கள், உயர்பதவிகளிலுள்ள அதிகாரிகள் என பல்வேறு துறைகளைக் கொண்ட சாதனையாளரின் உருவாக்கத்திற்கு காரணமாய் அமைந்தது ஞானாசாரியர் கல்லூரி என்பதை மறக்கவோ மறுக்கவோ முடியாது. அண்மைக் காலத்தில் நகர்புற பாடசாலைகளினால் கவரப்பட்ட தாய்ப்பற்று தாய்நாட்டுப் பற்று தான் பிறந்த மண்ணின் பற்று என்பவற்றை இழந்து மறந்துவாழும் ஒரு கலாசாரத்தன்மை கொண்ட சமூகம் எம் மத்தியில் வாழ்ந்து கொண்டு இருப்பதனால் இக் கல்லூரியின் மாணவர் தொகையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்பது வேதனைக் குரிய விடயமாகும். இவற்றையெல்லாம் கடந்து வெற்றி கொண்டு மீண்டும் ஒருநாள் நாம் எழுந்து நிற்போம் என்ற நம்பிக்கையுடன் இந்த 80ஆவது ஆண்டுகாலப்பகுதியில் ஞான தீபம் என்னும் இச்சஞ்சிகையை வெளியிட்டு இக்கல்லூரியின் உயர்வுக்கு உழைத்த எமது முன்னோர்களின் பாதார விந்தங்களுக்கு சமர்ப்பணம் செய்து நிறைவு காண்கின்றோம்.

நன்றி

# மலர்க்குழு



திருமதி யசிந்தா விஜயகுமாரன், திருமதி சாந்தினி இராகவன், திருமதி சாந்தமனர் புவனேசன், திரு நாகரத்தினம் கனாதரக் குருக்கள், திரு ஆறுமுகம் சுதர்சன், திரு பரஞ்சோதி செல்வவிநாயகம்(அதிபர்), திரு கந்தசாமி ஸ்ரீசந்திரன், திருமதி ஜெயவாணி நகுலேந்திரன், திருமதி பராநிதி நவரட்ணம்



# ஞானசாரியரின் செவ்வியல் காலங்கள்....
# Classical Ages of Gnanasariyar College

**ப.செல்வவிநாயகம் (அதிபர்)**
**ஞானசாரியர் கல்லூரி**

"ஞானத்தின் திருவுருவே நான் மறையின் தனிக் கொழுந்தே...."

என்ற சிந்தனைக் கிளறலின்சைவப் பாரம்பரியத் தனித்தன்மையோடு நோக்க வேண்டிய கல்லூரியாகும். கிறிஸ்தவ பரம்பலுக்குள் சைவத்தை நிலை நிறுத்திய வரலாறுகளின் ஒருமைக்கல் ஞானாசாரியார் என்றால் அதுமிகையாகாது. ஞானசாரியார் முதன்மையானவராகிய மகாதேவா சுவாமிகளால் அடிக்கல் நாட்டப்பட்டு 1935ல் "இந்துப்போட்" அனுசரணையுடன் இக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. என்பது வரலாறு proud to be a Hindu என்றார் விவேகானந்தர். ஒவ்வொரு மாணவனும் தான் இந்து என்பதில் பெருமை பெற வழிவகுத்தது இக் கல்லூரி. தொடர்ந்தும் சைவப் பாரம்பரியத்தை பேணி வரும் கல்லூரிகளில் இதுவும் ஒன்றாகும்.இக் கல்லூரியின் பதினெட்டாவது அதிபர் என்ற வகையில் நானும் பெருமையடைகிறேன்.

இக் கல்லூரியின் வரலாற்றை நோக்கும் போது, இதன் செவ்வியல் காலம் (classical age) பல்வேறு கட்டங்களில் குறிப்பிடக் கூடியதாகக் காணப்படுகின்றது. இதன் கிராமியபங்கு பற்றல் முகாமைத்துவ நோக்கானது (participatory rural management) பரந்த பிரதேசத்தை உள்ளடக் கியதாக காணப்பட்டதை அவதானிக்கலாம். அதாவது இதன் ஊட்டற் பிரதேசம் பரந்ததாகக் காணப்பட்டது. (catchments area)1945,1950களில் இது துன்னாலைப்பிரதேசம், கலிகை, குடவத்தை, கட்டைவேலி, கிழவிதோட்டம், நெல்லியடி, மந்திகை, புலோலி என்ற பிரதேசங்களில் இருந்து வந்து மாணவர் கல்வி கற்கும் நிலையைக் கொண்டிருந்தது. கிராமிய மண்வாசனை கிராமிய மாணவர்கள் இங்கு கல்வி கற்கும் நிலையை அதிகரித்தது.

அதிபர் சிவப்பிரகாசம் அவர்கள் இருந்த காலமே இக் கல்லூரியின் முதலாவது செவ்வியல் காலம் என வரையறுக்க முடியும். ஏனெனில் இக் காலத்திலேயே பாடசாலைக் கட்டிடம் சிறப்புற அமைக்கப்பட்டது. க.பொ.த. உயர்தரம் கணித, விஞ்ஞானம், கலை, வார்த்தகம் அறிமுகப் படுத்தப்பட்டது. பாடசாலையின் அடிப்படைத் தேவைகளில். ஒன்றான விஞ்ஞான ஆய்வு கூடம் இவர் காலத்திலேயே உருவாக்கப்பட்டது. இதுவே விஞ்ஞானப் பிரிவு தோற்றம் பெற ஏதுவாக இருந்தது.

1957ல் இவருடைய காலத்திலேயே மல்யுத்தப் போட்டியில் மாணவர்கள் தேசிய ரீதியில் முதலிடத்தைப் பெற்றனர். இன்றும் அந்தக் குழுவினர் அடங்கிய படத்தை நாம் ஆவணப்படுத்தி யுள்ளோம். கிராமிய மட்ட மாணவர்கள் தேசிய ரீதியில் வெற்றியடைவது கடினம், எட்டாக்கனி என்ற கருத்துக்களையும் அன்றைய மாணவர்கள் முறியடித்துக் காட்டினர் க.பொ.த (சா.த) உயர்தர வகுப்புகளிலும் மாணவர்களின் கல்வி அடைவு மட்டம் சிறப்புற்று விளங்கியது.

அடுத்து செவ்வியல் காலம் என நோக்கக் கூடியது திரு.வே.க நடராசா அவர்கள் அதிபராக இருந்த காலப்பகுதியாகும். இவர் பண்டைய ஈழம் 1,2 என்ற நூல்களின் ஆசிரியராவார். வரலாற்று நூல்கள் இல்லாத காலத்தில் தமிழ் மாணவர்களின் ஒரே வரலாற்று நூலாக பண்டைய ஈழம் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. அவ்வாறன ஒரு அறிஞர் இக் கல்லூரியின் அதிபராக இருந்தார் என்பது எமக்கெல்லாம் பெருமை தருவதாகும் அவரது காலத்தில் சிறந்த மாணவர் ஒழுக்கமும்,கட்டுப்பாடும் இருந்தது. நிர்வாகத்திறன் மிக்க அதிபராக இவர் திகழ்ந்தமையால் அமைச்சு, திணைக்கள தொடர்புகளை செவ்வனவே ஆற்றி கல்லூரிக்குத் தேவையான வளங்களை இலகுவாகப் பெற்றுக் கொண்டார். அதாவது இவரை ஒரு பன்முக ஆளுமை மிக்க அதிபராகக் காணமுடிகிறது. ஞானசாரியாரின் வளர்ச்சி நிலையில் இவரது பங்கும் முக்கியமானது என்பதில் ஐயமில்லை.

திரு.வை. செல்வராசா (முன்னாள் மாகாணக் கல்விப்பணிப்பாளர்) அவர்களால் "ஞானம்" கையெழுத்து சஞ்சிகையை இக் காலத்திலேயே வெளியிடப்பட்டது. மற்றும் வல்லிபுரம் ஆசிரியர் வெளியிட்ட இளமதி சஞ்சிகை ஆரம்பக்கல்வி மாணவரின் எழுத்தாக்கத்துறையில் கூடிய கவனம் செலுத்தப்பட்டது.

அடுத்து ஞானாசாரியரின் வளர்ச்சி நிலையின் தொடர்ச்சியை அதிபர் சிற்றம்பலம் அவர்களுடைய காலத்திற் காணலாம். இவர் ஒரு சிறந்த விளையாட்டு ஆசிரியராக வே.க. சடராசா காலத்தில் பணிபுரியும் போதே அத்துறையில் மாணவர்களை மிளிரச் செய்தவராவார். எனவே அதே ஆற்றல் அதிபராக இருக்கும் போது செயற்படுத்தப்பட்டது எனலாம். "மாணவன் ஒருவனின் தவறை கண்டால் உடனே தண்டித்தால் தான் அன்றைய நாள் தனக்கு உற்சாகம் நிறைந்தது" என அவரோடு உரையாடும் போது கூறுவார். விளையாட்டுத் துறைகளில் மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கு பற்றி வெற்றியீட்டிய காலம் பகுதியாக இதைக் கொள்ளலாம்.

இக் காலப்பகுதியில் நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சி கல்லூரியின் பொன் விழாவாகும். மலர் வெளியீடு நடைபெற்றதற்கான சான்றுகள் கிடைக்கவில்லை. இருப்பினும் பொன்விழா" பல நிகழ்வுகளோடு சிறப்பாக நடைபெற்றதாக அறிய முடிகிறது. ஒவ்வொரு காலத்தை பிரதிபலிக்கும் நிகழ்வுகளை சமூகம் எதிர்பார்க்கிறது. எனவே அவற்றை அவ்வப்போது நிறைவு செய்வது செவ்வியல் காலத்தின் பண்பாகும். அவ்வகையில் இக்காலமும் வளர்ச்சிப்பாதையில் முக்கியமான கட்டத்தை எட்டியிருக்கிறது எனலாம்.

அடுத்த செவ்வியல் காலமாக நாம் நோக்கவேண்டியது திரு வே.சிவசிதம்பரம் அவர்கள் அதிபராக இருந்த காலப்பகுதியாகும். பல்வேறுபட்ட போராட்ட சூழ்நிலைகள் இருந்த காலப்பகுதியாகும். இது இக்காலப்பகுதியில் பாடசாலையை நிர்வகிப்பது என்பது கடினமான தாகும். தனது ஆளுமையினாலும் சாதுரியத்தாலும் அவர் சிறப்பான ஒரு காலப்பகுதியாக மாற்றியுள்ளார். இக்காலப்பகுதியிலேயே பாடசாலைக்கு பான்ட் வாத்தியக்கருவி கிடைத்தது. லண்டனில் வசிப்பவரும் அறச்சிந்தனை மேலோங்கியவருமான திரு க.சுந்தரமூர்த்தி அவர்களால் இக்கருவி வழங்கப்பட்டது. இவரது காலத்திலேயே கல்லூரிக்கு மைதானம் கிடைத்தது. சமூகத்தின் உதவியுடன் அவர்களின் வயல்க்காணிகளைப் பெற்றதன் மூலம் இது உருவாக்கப் பட்டது. மற்றும் இக்காலப்பகுதியில் இடப்பெயர்வுகளினால் மயிலிட்டி, காங்கேசன்துறை போன்ற இடங்களிலிருந்து இடம்பெயர்ந்த மாணவர்கள் இங்கு கல்வி கற்றனர். எனவே பாடசாலையில் மாணவர் வளம் சிறப்புற்றிருந்தது. மாணவ அடைவு பெறுபேறு என்பனவும் சிறந்து காணப்பட்டது.

இவ்வாறு பல்வேறு வகையில் வளர்ச்சி நிலைகள் மேற்படி காலப்பகுதியில் கல்லூரியில் காணப்பட்டாலும் இவ் வளர்ச்சி நிலையின் தொடர்ச்சியை ஆராய்கின்ற போது தொடர்ச்சி நிலை ஒரு சமூகப் பின்னனியைத் தழுவியது எனலாம். இதில் ஒரு மாற்ற நிலை ஏற்பட்டது. இவற்றுக்கு பல்வேறு காரணங்களைக் கூறமுடியும்.

1. ஞானாசாரியர் கல்லூரியின் பூர்வீகப் பிரதேசத்தினர் வெளிநாடுகளுக்கு புலம் பெயர்ந்தமை.
2. தரம் 1இல் மாணவர்களை அனுமதித்தல் குறிப்பிட்ட பகுதிமக்களால் கைவிடப் பட்டமை. (தரம் 6இல் வேறுபாடசாலைகளுக்கு புலமைப்பரிசில் புள்ளி அடிப்படையில் சேருவதற்கு இருந்த தடை)
3. நகர்ப்புறக் கவர்ச்சி கிராமியத்திலிருந்து விடுபட்டமை.
4. போர் முடிவடைந்தமையினால் இடப்பெயர்வில் வந்தமாணவர்கள் சொந்த இடங்களுக்கு சென்றமை.
5. சமூக ரீதியான அந்தஸ்து வேறுபாடுகள் மக்கள் மனதில் செல்வாக்குச் செலுத்தியமை.

மேல்போன்ற காரண காரியத் தொடர்புடைய ஒரு தளர்வு நிலை தொடர்ச்சியான காலப்பகுதியில் ஏற்பட்டது. திரு.ஸ்ரீராமச்சந்திரன் அவர்கள் அதிபராக இருந்த காலத்தில் முளைவிட்ட இவ் அம்சங்கள் தொடர்ந்து வலுப்பெறத் தொடங்கின. இருப்பினும் பல்வேறு பெறுபேற்று சாதனைகளும் அவருடைய காலத்தில் கிடைத்தது. தொடர்ந்து வந்த

காலப்பகுதிகளில் கல்விச் சாதனைகள் ஏற்பட்ட அதேவேளை மாணவர் வீழ்ச்சியும் காணப் பட்டது. க.பொ.த உயர்தர வகுப்பில் 3A, 2AB சித்திகள் இருந்தன. நான் அதிபராக கடமை யேற்ற காலத்தில் இருந்து நோக்கும் போது வரலாற்று சாதனை ஒன்றை இக்கல்லூரி பெற்றது. அதாவது முதன் முதலாக ஒரு மாணவி (டொ.மதுமிதா) சட்டத்துறைக்கு அனுமதி பெற்று சென்றமையே அதுவாகும். இது ஞானசாரியார் கல்லூரி வரலாற்றில் ஒரு மைல் கல் ஆகும்.

மற்றும் எனது காலத்தில் க.பொ.த.(சா/தர) பரீட்சையில் இரு மாணவர்கள் 8AB எடுத்து சித்தி பெற்றனர் (சஞ்சீவன், சுபிர்ணா) மற்றும் 2014 க.பொ.த.(உ/தர) பரீட்சையில் 3A (சரண்யா) 2AB (மு.சஞ்சிகா) A2B (கீர்த்தனா) ஆகிய மூவரும் வர்த்தகத் துறையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றிருந்தனர். ஜசிந்தா கலைப்பிரிவில் (A2B) பெற்றிருந்தார். எமது கல்லூரியின் நிலைமையை சரியாக சீர்தூக்கிக்கினால் இவை மிகப் பெரும் சாதனைகள் என்பதை மறுக்க முடியாது. மற்றும் 2014 புலமைப்பரிசில் பரீட்சையில் ஐந்து மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தி பெற்றனர். அத்துடன் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்று சிலர் சித்தி எய்தினர். இவற்றை விட பொதுப் போட்டிகள், பிரதேச செயலகம் நடாத்தும் போட்டிகள் என்பவற்றில் வெற்றியீட்டி யுள்ளர்.

ஒருமாணவனின் கல்வி என்பது "வாழுக்கல்" என்பதற்கேற்ப முழுமையை எதிர்பார்த்து நிற்கிறது. மாணவனின் பரம்பரை இயல்பு சூழல் என்பன அவனது விவேக ஆற்றலைத் தீர்மானிக்கிறது. அவனது இயலளவை (capacity) புரிந்து கொண்டே நாம் மதிப்பிட முடியும். எமது கல்லூரியில் ஒரு மாணவனின் தாயிடம் மகனின் நிலையைக் கூறி அடுத்த முறை பரீட்சைக்கு தோற்றினால் நல்லம் என ஆலோசனை கூறினேன். அதற்கு அவர், "ஐயா அடுத்த முறை இங்கு நிற்க மட்டான் கட்டார் அல்லது சவுதிக்குப் போயிடுவார். இந்த முறை தோற்றட்டும் (O/L) எடுத்தவர் என்பது தான் எமக்கு வேண்டும் "என்றார் இக் கூற்று இச் சமூகத்தின்(தற்போதைய கல்லூரிச் சமூகம்) கல்வி எதிர்பார்ப்பை எடுத்துக் காட்டுகிறது.

உண்மையில் இக் காலமும் ஒரு வகையில் செவ்வியல் காலம் (classical ages) எனக் கூறுமளவிற்கு தகுதியுடையது என்றே கூறவேண்டும். ஏனெலில் இக் காலத்திலேயே அலுவலகம் பளிங்குக்கல் பதித்து திருத்தம் செய்யப்பட்டது, ஆசிரிய ஓய்வறை பளிங்குக்கல் கொண்டு அமைக்கப்பட்டது. ஞானசாரியார் கல்லூரி வரலாற்றில் நீண்ட காலம் இடைவெளிக்குப்பின் அலுவலகம் சீரமைத்து நிறைவேற்றப்பட்டது. பழையமாணவர்களின் உதவியுடன் இவை ஆற்றப்பட்டன. அதிபருக்கும் சமூகத்திற்கும் உள்ள உறவை எடுத்துக்காட்டுகிறது. இவ்வாறே கிழக்குப்புறமதில் ஆசிரிய மலசல கூடத்திருத்தம் என்பனவும் செய்யப்பட்டது. புதிய போட்டோ பிரதி இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டது. மேலும் தெற்குப்புறம் மதில் அமைப்பிற்கும் திட்டம் தயார் செய்யப்பட்டது. கிராமிய எழுச்சித்திட்டத்தின் கீழ் ஆண்கள் மலசலகூடம் முறையாகத் திருத்தி வடிவமைப்பட்டது. அமுதவிழா ஆண்டைச் சிறப்பிக்கும் நோக்குடன் விளையாட்டுப்போட்டிக்கு வடக்குமாகாணக் கல்வி அமைச்சரை (கௌரவ த. குருகுலராசா) பிரதம விருந்தினராக அமைத்து மகிழ்ந்தோம்.

இவ்வாறு பல்வேறுபட்ட நிலைகளினூடாக சிந்திக்க வேண்டியது பிரதேச மாணவர்கள் இங்கு கல்வி கற்கும் மனப்பாங்கை வளர்க்க வேண்டும்.

"இனியொரு விதி செய்வோம்
அதை எந்த நாளும் காப்போம்"

என கல்லூரிச் சமூகம், திடசங்கற்பம் பூண்டபோதும் தொடர்ச்சியான வளர்ச் நிலைக்கு கல்லூயே வழிநடத்த வேண்டும்.



# Analyzing the Fundamental Rights in Srilankan constitution

## *Introduction*

This article provides an overview of the fundamental Rights through the srilankan constitution Indeed, All persons in country are presumed to know and endorsed and the fundamental Rights. Thus, Before analyze the FR just have a look at the concept of human rights which has been a part of the religious and cultural heritage of man as evidenced by Buddhist, Hindu and is lamia scriptures, Christy Bibles. when these rights become FR, they are enshrined in a constitution as well as in cooperated in to a constitution. Then they can be altered only in the in the special manner applicable to constitutional amendments.

There fore a Basic idea of the FR is derived from human rights. FR are a group of rights that have been recognized by supreme court as requiring a high degree of protection from government encroachment . If I simply saying that when a person's freedom is restricted by other individuals, he could go before the courts of the land if such interference violates the law .Those rights which a society considers necessary to protect by way of constitutional guarantees are called FR.

A declaration of FR is seen in (1972) 1st republican constitution 2nd republic can constitution The special position of FR in a constitution has been universally recognized previous constitution of Sudbury. Mr DS. senanayake Ceylon Nation congress were keen to have a FR, event Hough did not have comprehensive Bill of rights (FR). Hereafter another constitution was introduced by kelvin R.d.silva as a name of 1st republican constitution which has separate chapter on FR for the first time this constatation gave express constitution gave express constitutional fist time this constitution gave express constitutional recognition in srilankan history Event Hough it also has wide range of restrictions and limitation over the Fr and from this restrictions, 1st republican also failed to ensured FR.

where as A Bill to enact a new constitution in place of the 1972 constitution was presented on the basic of the draft constitution. The new constitution of the Democratic socialist Republic of sl was adopted by national state assembly. FR are declared in chapter of the constitution. Article 10 to 14 are recognized the FR. include.

Art 10- Freedom of Thought, conscience, Religion that means Every one has the right choose the religion change his religion The right to think his own thoughts and the right to make personal judgements of his own beliefs.

Art 11-mandates that no person shall be subjected to torture or to cruel, in human or degrading treat men or punishment It prohibits every person from inflicting torture some cruel or in human treatment on another . It is an absolute FR subject to no restrictions or limitations what so ever.

Art 12- All persons are equal before the law and are entitled to the equal protection of the law.

Art 13-freedom from arbitrary arrest, detention, and punishment and prohibition of retroactive penal legislation. no person can be arrested except according to procedure established by law and Any person arrested shall be informed of the reason for his arrest.

A14- Every citizen is entitled to...

1. freedom of speech and expression
2. freedom of peace ful assembly
3. freedom of association
4. freedom to from join a trade union
5. freedom to engage any business, trade
6. freedom of movement
7. freedom to return to srilanka.

How ever , Article(10) Article(11) are all absolute rights. They can not be restricted under any circumstances All other FR are subject to rostra actions being laid down in Art 15 It's restricted by flowing situations.

1. National unity and integrity
2. National security
3. National Economy
4. public safety
5. public order protection.

It is necessary to say that How can get the remedy for infringement of FR by executive action.

Where a person alleges that any such FR Or language right has been in fringed he may himself or by an attorney -at -law on his be half within one month thereof, in accordance with such rules of court as may be in force, apply to the supreme court which have sole and exclusive jurisdiction to hear and determine any question relating to the eminent infringement of FR by way of petition .

Eventually, current position in srilanka with regard FR .srilanka had a monarchy system from the beguiling of its written history which has weak democracy a weak judiciary centralized state power a strong bureaucracy infringements of constitutional guarantees. Infant FR have no meaning for most people in srilanka . A common complaint specially regarding the prevention of Terrorism Act which has been condemned as an ugly blot on the statute books of any civilized country violates some of articles of the fundamentals rights.

There can be no doubt that the prevention of Terrorism Act has bee violated the FR which is permit the torture and in human treatment for obtaining the clothesless from the accused. But our constriction of A articles states that No person shall be subjected or in human treatments as well as Tamils in that is land are subject to arbitrary searches arrest unauthorized places of detention torture sexual abuse under this act.

At present over three thousand Tamil political prisoners are languishing in srilankan jails for prolonged periods without charges or trick under the prevention Terrorism A ct . there by PTA is not only under mine The teems in the constitution but also undoubtedly contravene both domestic and international legislation

An another complaint that our current constitution officially declared that Buddhist current constitution officially declared that Buddhist has the fore most place in srilanka and the state to protect and foster the Buddhism from this provision the of equality is violated by this factor in relation to equality heed not be emphasized Now a days also basic fights of human being have been harshly violated. by the public officer and govern men It is important to be referred that FR are only guaranteed the constitution Nitto practical plausibility

## conclusion

srilanka has emerged success fully with then concept of written- ness and entrench men of FR and extends to other important provisions of the constitution The issue of rule of law in its inability to set the rostra actions imposed upon the freedoms and rights of individuals under a common law mechanism is remedied by srilankan constitution by clearly enumerating article 15 restriction of funds mental rights.

It is also imperative that any and all srilankan nationals who care a bout fundamental rights to commit the human rights and repeal of the prevention of Terrorism Act.

***D.Mathumitha***
*Facalty of Law,*
*University of Jaffna.*



# "யாரொடு நோவேன் யார்க்கு எடுத்துரைக்கேன்"

ஞானாசாரியார் கல்லூரி, வெறும் கால்கள் எமது கிராமிய சூழல் வீட்டிலிருந்து அம்மா துரத்த பனைவெளியூடாக மிரள மிரள பாடசாலையினுள் சென்றது எமது மனதில் நிழலாடுகிறது. பாலர் வகுப்புத் தொடக்கம் தரம் 11 வரை அதாவது பிள்ளைப்பருவம் முதல் விடலைப்பருவம் வரை எவ்வளவோ மாற்றங்களை எவ்வளவோ விடயங்களை எமக்குத் தெரியாமல் தெரியச் செய்து எம்மை உருவாக்கிய கோயில். முன்னால் ஞானவைரவர், பரந்த வயல்வெளி, அருகில் உயர்ந்த பனைகள் நடுவே எழுந்து நிற்கும் கல்லூரியின் வனப்பு. ஆயிரக்கணக்கானோரின் அறிவுக் கண்ணைத் திறந்து அமைதியாகத் தன் பணியை ஆற்றுகிறது. காலமாற்றம், காலவோட்டம் இவை இயற்கையின் நியதி. இதன் சூழலில் தப்புவது மிகக்கடினம்.


கல்வியே மனிதனை மானிடனாக்குகின்றது. இதை அறிந்தவர் ஒழுங்குநிலை கல்வியில் தம் சந்ததியை உருவாக்குகின்றார். இதை அறியாதோர் தடம் மாறுகின்றார்கள். இன்றைய கல்வியின் நோக்கம் என்பது தனிப்பட்ட நிறைவேற்றல், அபிவிருத்தி, பாதுகாப்பு, சமாதானம், மற்றும் நல்வாழ்வு ஆகியவற்றின் திறவுகோலாக விளங்குகிறது. கல்வியூடாக இளம்சிறார்கள் எமது கலாச்சார மற்றும் இயற்கையான பாரம்பரியம், மற்றும் எமது உள்ளூர், உலக பாரம்பரியங்களை முறையாகப் பாதுகாத்தல் புதிய வழிமுறைகளைக் கையாளுதல், கட்டி எழுப்புதல், செமுமைப்படுத்தி வருங்காலச் சந்ததிக்கு வழிகாட்டுதல், ஒப்படைத்தல் ஆகியவற்றைக் கல்வியினூடாகப் படிமம் பெறச் செய்வது மாணவச்செழுமைக்கு வழிப்படுத்தும்.

கல்வி என்பது விருப்புக்குரிய ஒன்றல்ல என்பது உண்மை. இதை விருப்புக்குரியதாக மாற்றுவதாயின் பல வளங்கள் ஒழுங்குபடுத்தப்படல் வேண்டும். ஒழுங்கின்றிச் சீர்கெட்டுச்செல்லும் ஒருசில சிறார்களால் விருப்புடன் கல்வி கற்கும் மாணவர்கள் பாதிக்கப்படுவது தவிர்க்கப்படல் வேண்டும். இவ்வாறான தடம் மாறும் மாணவர்களை எடுத்து நோக்கின் அவர்களது குடும்பச்சூழல் பரிதாபத்திற்குரியது. சிறார்கள் தடம் மாறுவதற்கு அச்சிறார் சூழலிலுள்ள பெரியார்களே வழிகாட்டிகளாக அல்லது வழிப்படுத்தாதவர்களாக காணப்படுகின்றார்கள். பல்வேறு சட்ட விரோத நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படும் சிறார்கள் வரன்முறையற்ற பணத்தேடலை மேற்கொள்ளும் ஓர்சிலரால் பாதிக்கப்படுகிறார்கள். இவ்வாறான சிறார்கள் இனங்காணப்படல் வேண்டும், இனங்காணப்படும் சிறார்கள் சீர்மியப்படுத்தப்பட வேண்டும். தொடர் கண்காணிப்புக்குட்படுத்தப்படல் வேண்டும். இவ்வொழுங்கு நிலையில் கட்டுப்படாத சிறார்கள் சீர்திருத்தப்பள்ளிக்கு அனுப்பப்படல் வேண்டும். இச்செயற்பாட்டிற்கு அரச கட்டமைப்புக்குள் அரசவேதனம் பெறும் பல்நிலைப்பட்ட ஊழியர்களும் அக்கறையுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்பட்டுச் சரியானதும் நேர்த்தியானதுமான பரிகார நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில் மாணவர்வரவு அதிகரிக்கும். அமைதியான கற்றல்ச்சூழல் உருவாகும். கவனச்சிதைவற்ற கல்வி வாய்ப்பு ஏற்படும்.

மாணவ கல்வியில் அதிபர் ஆசிரியர்களுக்கு பெரும் பொறுப்பு உள்ளது. ஆனால் அவர்களால் மட்டும் தடம்மாறும் சிறார்களை தடத்தில் கொண்டுவருவது கடினமான பணியாகும். பாடசாலை என்பது அச்சமூகத்திற்கு உரியது. சமூகமதிப்பும் சமூக நாகரிகமும் பாடசாலைச் சமூகத்தாலேயே கட்டியெழுப்பப்பட வேண்டும்.

காலத்திற்கு காலம் மாறுகின்ற பாடசாலைப்பகுப்புகள், வழங்கப் படும் வளங்கள், இவையும் மாணவர் ஒதுக்கத்திற்கு காரணமாகிறது. இதன் காரணமாக ஒரே சூழல், ஒரே குழுமம், ஒரே தரமுடைய மாணவர்களைக் கொண்ட பல நூற்றுக்கணக்கான பாடசாலைகள் உருவாக்கம் பெற்றுள்ளன. ஒரே சூழல், ஒரே குழும மாணவர்கள் ஒரே பாடசாலையில் கற்பதால் அச்சூழல் பாடசாலையிலும் ஆதிக்கத்தைச் செலுத்துவதுடன் தேசிய கல்விக் கொள்கையில் கூறப்படும் நடத்தை கோலங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவது மிகக் கடினமான பணியாக காணப்படுகின்றது. எதை எழுதியும் எதை வலியுறுத்தியும் பயன் கிடைக்குமோ?, எந்தச் சவாலையும் மேற்கொண்டு மேற்கிளம்பும் மாணவர் சமூகத்தை உருவாக்குவது ஊழியம் செய்து ஊதியம் பெறும் ஒவ்வொருவரினதும் கடமை. தன்னலமற்ற குற்றம் காணாத குறைநீக்கி உயர்வு கொள்ளச் செய்து மனநிறைவு காணும் எமது ஆசிரியத்தொழில் மகத்துவம் அடையவும், நிறைவான கல்வியைப் பெறவும் கல்லூரியின் கீர்த்தியும் புகழும் ஓங்கவும் ஞான வைரவப் பெருமான் பாதம் பணிந்து எனது ஆதங்கத்தை நிறைவு செய்கின்றேன்.

**திருமதி.சாந்தகுமாரி ராகவன்,**
ஆசிரியை,
யா ஞானாசாரியார் கல்லூரி.



# பாடசாலையும் பழையமாணவர் சங்கமும்

ஐரோப்பியர் ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட சைவசமய மறுமலர்ச்சியின் பின்னர் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் எமது நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சைவசமயத்தினையும் கல்வியறிவினையும் வளர்க்கும் நோக்கில் பல பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. அவ்வாறான நேக்கத்தில் கட்டைவேலிப்பிரதேச மக்களின் நன்மை கருதியே எமது பாடசாலை ஆரம்பித்து வைக்கப்பட்டது. இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்தது இவ்வாறு வளர்ச்சியடைந்து வந்த பாடசாலை 1960 களின் முற்பகுதியில் இலங்கை அரசாங்கத்தின் உடைமையாக்கப்பட்ட பின்னர் மேலும் துரிதமாக வளர்ச்சி கண்டது.

இப் பாடசாலையின் கல்விகற்று பலரும் பல்வேறு துறைகளில் விற்பன்னர்களாக திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறு இப் பாடசாலையில் கல்விகற்ற பலரும் இணைந்து 1970களில் ஒரு பழையமாணவர் சங்கம் ஒன்றினை அமைத்து நடாத்தி வந்தமைக்கான பல்வேறு சான்றுகள் காணப்படுகின்றன இருந்தபோதிலும் தொடர்ந்து நாட்டின் ஏற்பட்ட அசாதாரன சூழ்நிலைகள் காரனமாக அது செயலிழந்து போயிற்று.

மீண்டும் 1990 களின் ஆரம்பத்தில் பல்வேறு பாடசாலைகளிலும் பழைய மாணவர் சங்கங்களை அமைத்து பழைய மாணவர்களிடமிருந்து நிதியுதவிகளைப் பெற்று பல அபிவிருத்திகளை மேற்கொண்டபொழுது எமது பாடசாலையில் அதிபராக இருந்த எமது பழையமாணவரான திரு.வி.அருளானந்தம் அவர்கள்எமது பிரதேசத்தில் வசித்து வந்த பழைய மாணவர்களை ஒன்றுதிரட்டி மீண்டும் பழையமாணவர் சங்கத்தினை ஸ்தாபித்தார் இதன் பின்னர் பழையமாணவர் சங்கத்திற்கென ஒரு யாப்பு தயாரிக்கப்பட்டு பருத்தித்துறை தேசியசேமிப்பு வங்கியில் ஒரு கணக்கு ஆரம்பிக்கப்பட்டு இதன் செயற்பாடுகள் வினைத்திறனான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பழைய மாணவர் சங்கத்தின் பிரதான செயற்பாடு உள்ளூரிலும் புலம்பெயர் தேசங்களிலும் வாழும் பழைய மாணவர்களிடம் நிதியினை சேகரித்து பாடசாலையின் கல்வி மற்றும் பௌதீக வள அபிவிருத்திகளுக்கும் பங்களிப்பு வழங்குவதாகும்.எமது பழைய மாணவர் சங்கத்தின் வளர்ச்சியின் முக்கிய கட்டமாக பிரித்தானியாவின் வசிக்கும் எமது பழைய மாணவர்கள் ஒன்றிணைந்து எமது சங்கத்தின் கிளை ஒன்றினை பிரித்தானியாவில் ஸ்தாபித்தமையை குறிப்பிடலாம். இக்கிளை எமது பழைய மாணவர் சங்கத்தின் செயற்பாடுகளின் முதுகெலும்பாக செயற்படுவது மறக்கமுடியாத உண்மையாகும். இதை விட கனடாவில் வாழும் எமது பழைய மாணவர்களின் கிளை ஒன்றினை அமைக்காது விடினும் பலர் இணைந்து காலத்திற்கு காலம் பல உதவிகளினை வழங்கி வருகின்றமையும் குறிப்பிடத் தக்கதாகும். காலத்திற்கு காலம் பாடசாலையினால் விடுவிக்கப்படும் கோரிக்கைக ளுக்கமைய பழைய மாணவர் சங்கம் பல்வேறு செயற்பாடுகளையும் ஆற்றி வருகின்றது. பாடசாலைக்கு மைதானம் ஒன்று இல்லாமை தொடர்பாக நீண்ட காலக் குறையினை போக்கும் முகமாக புலம் பெயர் பழைய மாணவர்களிடம் இருந்து பெருந் தொகை நிதியினை சேகரித்து மைதானம் ஒன்றினை அமைத்துக் கொடுத்தமை மிகச் சிறப்பான செயற்பாடாகும். இதனை விட பாடசைலையின் வடக்கு புற மதில் மற்றும் கிழக்கு புற மதில் அமைத்துக் கொடுக்கப்பட்டமை, தெற்கு புரத்தில் ஒரு பகுதி காணியினை வாங்கிக்கொடுத்தமை, துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் அமைத்துக் கொடுத்தமை போன்றவற்றையும் குறிப்பிடலாம். இதேபோல காலத்திற்கு காலம் பாடசாலையில் பல்வேறு திருத்த வேலைகள்,நவீன வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் வர்ணம் பூசுதல் போன்ற பல்வேறு இன்னோரன்ன பௌதீகவள அபிவிருத்தி நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதனை விட கல்வி அபிவிருத்தி நோக்கத்திற்காக பாடசாலை இல்ல மெய்வன்மைப்போட்டி பரிசில்தின விழா போன்றவற்றிற்கு வருடாந்தம் உதவி புரிந்து வருவதுடன் வேறு பல மாணவர் ஊக்குவிப்புத் திட்டங்களையும் செயற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதனைவிட கடந்த இருபது வருடமாக பதில்காவலாளி மற்றும் அலுவலக உதவியாளர் ஆகியவர்களுக்கான மாதாந்த ஊக்குவிப்பு தொகையினை பழைய மாணவர் சங்கமே வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும் மேலும் எமது பழைய மாணவர் சங்கத்தின் வளர்ச்சிப் பாதையினை எடுத்து நோக்கும் போது காலத்திற்கு காலம் தலைவர்களாக திரு வி.அருளானந்தம் திரு வே.சுப்பிரமணியம் திரு சி.சிற்றம்பலம் திரு வே.சிவசிதம்பரம் ஆகியோர் அரும்பணியாற்றியுள்ளமை நன்றியுடையதாகும். இதேபோல கடந்த இரு தசாப்தம் காலமாக எமது சங்கத்தின் முதுகெழும்பாக திரு.சி.க.மகாதேவன் அவர்கள் தனது சேவையினை வழங்கி வருகின்றமை சிறப்பானதாகும் இவர்கள் அனைவருக்கும் பக்கபலமாக நீண்ட காலமாக செயற்பட்டு வரும் திரு.இ.செல்வவிநாயகம் அவர்களின் பங்களிப்பும் மறக்கமுடியாததாகும்.மேலும் சங்கத்தின் ஆரம்ப காலங்களில் சங்கத்தின் வளர்ச்சிக்காக சிறப்பாக செயற்பட்ட திரு.ஆ.தெய்வேந்திரன் மற்றும் திரு.வ.வல்லிபுரம் ஆகியோரின் பங்களிப்பு போற்றுதற்குரியதாகும். இன்னும் பல பழையமாணவர்களின் கடின உழைப்பின் மூலம் இச்சங்கம் தொடர்ந்தும் வெற்றிகரமாக இயங்கி வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

தொடர்ந்து பாடசாலையின் பௌதீக வளர்ச்சிக்கும் விசேடமாக கல்வி அபிவிருத்தி செயற்பாட்டுக்கும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றுவதற்கு தாய்ச்சங்கமும் பிரித்தானியக்கிளையும் மேலும் கனடாவிலும் ஏனைய உலகெங்கும் பரவி வாழும் பழைய மாணவர்களும் தயாராக இருப்பது மகிழ்ச்சியானதும் பாடசாலைக்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதமுமாகும்.

**க.மகிந்தன்**
செயளாளர் பழைய மாணவர் சங்கம்
யா/ஞானசாரியார் கல்லூரி



# அறிவாலய தரிசனம்

"செல்வம் என்பது சிந்தையின் நிறைவே" என்றான், ஓர் சிந்தனைச்சிற்பி ஆம் அது எவ்வளவு உண்மை, அப்படியான ஓர் உயர்ந்த எண்ணம், சிந்தனச் செயல் என்பவற்றின் வெளிப்பாடே நல்ல செயற்பாடு களாகும். இதனை நாம் எமது யா/ஞானசாரியர் கல்லூரியை உருவாக்க வேண்டுமெனச் சிந்தித்த பெரியாரின் உயர்ந்த உள்ள எண்ணத்தினூடே காண்கின்றோம். அன்று அப்பெரியாரால் உருவாக்கப்பட்ட யா/ஞானசாரியார்க் கல்லூரி வாழையடியாக வளர்ந்து சாதனை படைத்து தனது வரலாற்றைச் சரித்திரமாக்கி அமுதவிழாக்கண்டு புகழ்பூத்துக் குலுங்க நிற்கின்றது.

இயற்கை எழில் கொஞ்சும் மருத நன் நிலம் யா/ஞானசாரியர் கல்லூரி ஞான வைரவர் ஆசியுடன் பொலிவுற்று விளங்குகின்றது.இயற்கையே மிஞ்சும் அளவிற்கு ஒரு புறம் பனை மரங்கள் உயர்ந்தும் வளர்ந்தும் மறுபுறம் வயல்களும் பச்சைக்கம்பளம் விரித்தாற்போன்று அழகுற்று திகழும் வளங்களைக் கொண்டமைந்த இப் பாடசாலைக்கு 2006ம் ஆண்டு இடை நிலைக் கல்வியைக் கற்பதற்காக வந்து சேர்ந்தேன் .அதற்கு முன் ஆரம்பக் கல்வியை யா/ கட்டைவேலி மெதடிஸ்தமிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் கற்று புலமைப்பரீட்சையில் சித்தியடைந்து அப்பாடசாலையின் கடைக்கண்பார்வையுடனேயே இப்பாடசாலைக்கு வந்து சேர்ந்தது குறிப்பிடத்தக்கது.

நான் சேர்ந்த காலப்பகுதியில் இப்பாடசாலையின் அதிபராக திரு.ச.ஸ்ரீராமச்சந்திரன் அவர்களும் உப அதிபராக திரு.நேசரத்தினம் அவர்களுக்கும் பதவில் இருந்தனர். அதிபரின் கம்பீரமான தோற்றமும் கண்டிப்பானபார்வையும் எமக்கு மிகவும் பிடித்திருந்தது. எமக்கு வகுப்பாசிரியராக திருமதி ப.நவரட்ணம் ஆசிரியர் அவர்கள் நியமிக்கப்பட்டிருந்தார் சைவத்தையும் தமிழையும் இரு கண்களாகக் கொண்ட அன்னையவள் தம் மாணாக்களுக்கு அமுதாக ஊட்டி வருகிறாள். எமது பாடசாலையில் காயத்திரி மந்திரம் ஓதும்போது மனதைச் சுண்டி ஈர்க்கும் ரம்மியமாகவும் அற்புதமான ஓசையாகவும் இருக்கும். எமது வகுப்பில் அனைவரும் திருநீற்றுப் பூச்சுடன் சைவப் பயமாக பாடசாலை வருவது இன்றும் மனக்கண்நிற்கின்றது. இதற்கு எமது வகுப்பாசிரியரும் சமயபாட ஆசிரியருமான திருமதி ப.நவரட்ணம் அவர்களின் வழிகாட்டலே காரணமாகும்.

எம்மிடம் இலைமறைகாய் போல உள்ள திறமைகளை வெளிக் கொணர்ந்து இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபட வைத்துஅவற்றில் முன்னிலைகளை பெற வைத்த பெருமை அன்னையவளையே சாரும். எமது வாழ்க்கையில் ஏற்பட்ட இழப்பு மற்றும் நோய்வு நிலைகளின் போது எமக்கு ஆதரவு, ஒத்துழைப்பு நல்கிய பாடசாலைச் சமூகத்தை இத்தருணத்தில் மனக்கண்முன் நிறுத்துவது மிகையாகாது.

நான் க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெறுவதற்கு எமதுபாடசாலை ஆசிரியர்களின் கண்டிப்பும், ஒத்துழைப்பும் அரவணைப்பும் பலமாக

அமைந்தது. தேவைக்கேற்றாற் போன்று சிலபாட ஆசிரியர்கள் மாலை வேளைகளிலும் வகுப்புக்கள் நடத்தி சிறந்த பெறுபேற்றைப் பெற உதவினர்.

க.பொ.த உயர்தரத்தில் நான் கணிதத்துறையைத்தெரிவு செய்த போது எனக்குப் பொருத்தமான துறை வணிகத்துறை எனக் கூறி வழிகாட்டி க. பொ.த உயர்தரத்தில் சிறந்த பெறுபேற்றைப் பெற வைத்த பெருமை இப்பாடசாலைச் சமூகத்தையே சாரும் உயர்தரத்தில் எமக்கு வகுப்பாசிரியராக இருந்த திருமதி கௌ.சிவசிதம்பரம் ஆசிரியர் அவர்கள் எமக்கு ஒரு தாய் போன்றவர். அன்னையாக மாறி அன்பு சொரிந்து நல்ல பழக்க வழக்கங்கள், ஒழுக்கப்பண்புகள் கூறி எம்மை வழிப்படுத்தியவர்களில் முக்கியமானவர் க.பொ.த உயர்தரத்தில் கல்விகற்கும் போது திரு.ப.செல்வவிநாயகம் அவர்கள் பதவிக்கு வந்தார்இவர் மாணவர்களின் கருத்திற்கு முக்கியத்துவம் அளித்து செயற்படுவராக இருந்தார் மாணவர்கள் தமது பிரச்சினைகளை நேரடியாகவே சென்று அதிபரிடம் கூறக்கூடிய ஒரு நிலை காணப்படுகிறது.

இடம் பெயர்ந்து வந்தும் பல இன்னல்களின் மத்தியினும் கல்வியை இடை நிறுத்தாது உயர்தரம் வரை படித்து பல்கலைக்கழகம் வரை செல்வதற்கு வழிகாட்டியாக அமைந்தது எம்மன்னையவளே என்றால் அது மிகையாகாது. ஒரு சில பாடசாலைகளில் இடம் பெயர்ந்த மாணவர்களிற்கு ஒரு சில வாய்ப்புக்கள் இல்லாமல் போவதுண்டு ஆனால் இப்பாடசாலையில் ஏனைய மாணவர்களிற்குக் கிடைப்பதைப் போன்று சகல வாய்ப்புக்களும் எனக்கும் கிடைத்தது.

எமது பாடசாலையில் தேவைக் கேற்றாற் போன்று கணனிவசதி, ஆய்வுகூட வசதி, நூல்நிலைய வசதி போன்ற நடத்தி அனைத்து வசதிகளும் காணப்படுகின்றது எனினும் தமது பிரதேச பாடசாலையை புறந்தள்ளி விட்டு நகர்ப்பகுதிகளில் இருக்கும் பெரிய பாடசாலைகளிற்குச் செல்வது பல மாணவர்களின் நாகரிகமாக மாறி விட்டது. அவர்கள் தமது பாடசாலையின் பெயரைக் கூறுவதில் தமக்குப் பெருமையைத் தேடிக் கொள்கின்றனர். எனினும் தமது பிரதேச பாடசாலையில் படித்து நற்பெறுபேற்றைப் பெற்றுத் தனது பெயர் மூலம் பாடசாலைக்குப் பெருமையைத் தேடிக் கொடுக்கும் ஒரு சிலரும் இருக்கத்தான் செய்கிறார்கள் அன்னையின் சந்நிதியில் இன்று நின்று முன்னோக்கிப் பார்க்கிறோம் நாம் அன்னையின் அருந்தவப் புதல்வர் பலரைக் காண்கின் றோம். யா/ஞானசாரியார் கல்லூரியை உருவாக்கியவரின் கின்னஸ் பதிவேடுகள் அவர்கள். எமது பாடசாலையில் படித்தவர்களில் பலர் கல்வித்துறையிலும் ஏனைய துறைகளிலும் பெரியவர்களாக இருப்பதைக் காண முடிகின்றது எமது பாடசாலையில் ஆரம்பக் கல்வியையும், இடைநிலைக்கல்வியையும் கற்று உயர்தரத்தில் கணிதத்துறை, விஞ்ஞானத்துறை என்பவற்றில் கற்பதற்காக வேறுபாடசாலைக்குச் சென்றவர்கள் பொறியியலாளராக, ஆசிரியராக, வைத்தியராக பல மேடைகளில் எம் பாடசாலையும், ஆசிரியர்களையும் நன்றியுடன் புகழ்ந்து பேசுவதைக் கேட்கும் போது இறும்பூது எய்தி நிற்கிறோம். இவ்வாறு பல சான்றோர்களை உருவாக்கிய பின்பும் பாரதி கூறியது போல எம் அன்னையானவள் கன்னியாகவே விளங்குகிறாள்.

இவ்வாறு எத்தனையோ மலர்க்கிரீடங்களை அன்னையவள் அணிந்து கலைமகளாக, வாணியாக வீணை மீட்டுகிறாள். இத்தகைய ஞானச்சுடர்கள் காட்டும் வெளிச் சத்தில் அவள் குழந்தைகளான நாமும் அவள் குழந்தைகளான நாமும் அவள் கலைக்கோயிலின் முன் நின்று அறிவாலய தரிசனம் காண்போம் வாரீர்.

நன்றி.

**மு.சன்ஜிகா**
*A/L (2014)*

# A RAINY DAY

It was a day in November when I was reading in Grade 5 I could remember that rainy day as it was yesterday All right there was heavy role of thunder followed by flash of lightening. I experienced a bad feeling as if our roof was going to fall.

I never thought I would go to school that day. The rain ceased in the morning and there was fine Weather. I went to school with my friends at 9 .00 clock in the morning. As rain the clouds became together in the sky it was getting dark. we could hear the role of thunder far away. Gradually the clouds had covered the sun completed iarkness slowly covered classroom. As we couldn't read any thing teachers looked puzzle. There was the heavy role of thunder just above our school. It seemed to us as the dooms day.

There was a heavy fall it continued for two hours. the principal looked worried from its gesture he had decided to close the school as soon as the rain stoped there was flood every where running beside our classroom. We made paper boats and floated them Our teachers too enjoyed the fun. The rain became to the cease by 10.00 clock. The bell rang for closing our school We Shouted sed with joy there was a crowd at the gator most of them are parents Eargent waiting of us to take us to home my father too was waiting with a back torch and umbrella. when I went to him we returned I show the feels on our way seemed to be a big lake all the paddy and other crops inundated they were hardly vehicles on the road.

most of them put the lights. when we return home .I saw a knee deep of food infront of our house. my mother .was waiting for aniniously at the door. I have to wade though the flood enter the house. our father took me in the lang and he cross the flood by waging though it Indeed it was a day that cannot he forgotten easy that is a memorable day

**Miss. S.Sherin**
***810A***



# கல்லூரிக் காலம்

அடி வாங்கி அடம் பிடித்து
அழுது புரண்டு
அம்மாவின் கால்களைக்
கட்டிக் கொண்டு
கதற கதற பிரிக்கப்பட்டு
கண்டிப்புடன் உட்கார்ந்த
வகுப்பு (ஒண்ணாம் வகுப்பு)

சிலேட்டு குச்சி தின்று
பென்சிலை தொலைத்து
சட்டையை சாக்காக்கி
வெள்ளைச் சட்டையை புழுதியால்
புரட்டி எடுத்து
வீட்டுப்பாடம் படிக்க அடம் பிடித்த
வகுப்பு (2ம் வகுப்பு)

இரட்டைத் தோடு போட்டு
வாசல் கடை கிழவியிடம்
ஜவ்வு மிட்டாய்
"தொட்டுப் பிடித்த" விளையாட்டு
விளையாட்டோடு பாடம் படித்த
வகுப்பு (3ம் வகுப்பு)

சிலேட்டுக்கு டாட்டா
நோட்டுக்கு வரவேற்பு
சேட்டைக்கு உதாரணம்
அம்புலிமாமாவின் சிநேகிதம்
டீச்சரிடம் டியூசன் படித்த
வகுப்பு(4ம் வகுப்பு)

நண்பனின் டிபன் பொக்ஸ் உணவு
தோழியின் அழிறப்பர்
டீச்சரிடம் எதிர் கேள்வி
வால் இருக்குமோ என்று
பெயர் வாங்கிய
வகுப்பு(5ம் வகுப்பு)

பேனாவின் அறிமுகம்
பி.ரி.ஆசிரியரின் செல்லம்
புளியங்கொட்டை விளையாட்டு
படிப்பில் படு சுட்டியென்று
பெயர் எடுத்த
வகுப்பு(6ம் வகுப்பு)

புதுப்பள்ளி தோழிகள்
நான்கடி உயர்ப்பிரம்பு
கண்டிப்பும்,கனிவும் கலந்த
ஆசிரியர்கள்
பயத்துடன் பள்ளி சென்ற
வகுப்பு(7ம் வகுப்பு)

கிந்தல்,நெற்போல்
சைக்கிள் பயணம்
கன்டீன் சமோசா
புத்தகத்தினுள் பாட்டுப் புத்தகம்
மறைத்து படித்த
வகுப்பு(8ம் வகுப்பு)

வகுப்புத் தலைவி
சுற்றுலாப் பொறுப்பாளர்
ஓரளவு பக்குவம்
உலகம் புரியத் தொடங்கிய
வகுப்பு (9ம் வகுப்பு)

நட்பு முளைக்கும் வயது
ஆசை வளர்க்கும் வயது
எதிர் பாலரிடம் புரியாத
ஈர்ப்பு வளர ஆரம்பித்த
வகுப்பு (10ம் வகுப்பு)

ஸ்பெசல் கிளாஸ்
வாரம் தோறும் பரீட்சை
பள்ளிக்கு பெருமை
சேர்க்க படிப்புடன்
போராடிய பவித்திர
வகுப்பு(11ம் வகுப்பு)

"A" பிரிவு சிறந்ததா
"B" பிரிவு சிறந்ததா
என்று மரத்தடிப்பட்டிமன்றங்கள்
மாநிலத் தேர்வு அடுத்த
வருடம் தானே என
அலட்சியமாய் கழித்த
வகுப்பு (12ம் வகுப்பு)

தினம் தினம் பரீட்சை
கணிப்பொறி முதல் ஐன்ஸ்டீன் வரை
அக்கறையாய் படித்து கடைசி நாளில்
நட்புக்காக கண்ணீர் ஒழுக
வீடு நோக்கி நெஞ்சில் கல்லூரிக் கனவுடன்
நடந்த வகுப்பு(13ம் வகுப்பு)

புரியாத புதிராக புகுந்த என்னை-உலகை
புரிய வைக்கும். புதுப்பெண்ணாக வழியனுப்பிய
கல்லூரி அன்னையே -என்றென்றும்
கலங்கரை விளக்காய் ஒளிர்ந்திடுக.

**செல்வி S.விமலஞகினி**
*A/L 2016*

# காலம் பொன் போன்றது

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் கவனிக்க வேண்டியது காலம் தான் காலம் பொன் போன்றது அதனை நன்கு மதித்துவாழ்வதே மக்கள் தம் கடமையாகும். இதனையே முன்னோர் "காலம்பொன்போன்றது கடமை கண் போன்றது" என்கின்றனர். மக்களுடைய வாழ்வுக் காலமானது ஒரு எல்லையுடையதாகும். அதனை நாம் வரைய றையிட்டுக் கூற முடியாது. மனிதனாகப் பிறந்தவன் தன்னுடைய இளமைப் பருவத்திலும் முதுமைப் பருவத்திலும் வாழ்வின் பெரும் பகுதியினை இழந்து வருகின்றான் எஞ்சிய சிறுகாலமே அவன்தன் அறிவை விருத்தி செய்யவும் தன்னுடைய ஆளுமையை வளர்க்கவும்,பணி புரிந்திடவும் வாய்ப்பு கிடைக்கின்றது.எனவே மனிதனானவன் அவனுக்கு கிடைத்த அந்த சிறு காலத்தைப் பொன் போல போற்றிமதித்து வாழ வேண்டியது ஒவ்வொருவரினதும் கட்டுப்பாடுடையவனாகின்றான்.

"பருவத்தே பயிர் செய்","இளமையில் கல்"

என்ற முதுமொழிகள் ஆழ்ந்த கருத்துடையனவாகும். இவை நம் முன்னோர்கள் மொழிந்த அனுபவம் வாய்ந்த மொழிகளாகும்.பயிர் செய்ய வேண்டிய காலத்தில் தான் பயிர் பயிரிட வேண்டும். ஒரு வயலை விவசாயி உழ வேண்டிய வேளையில் உழுது விதை விதைத்து பயிர் செய்ய வேண்டியவன் உழவன்.அவன் பயிர் செய்ய வேண்டிய காலத்தை விட்டு விட்டு பின்னர் அறுவடை நிகழ வேண்டிய காலத்தில் பயிர் செய்ய முற்பட்டால் என்ன விளையும்? எதுவுமே இல்லை. பயிர் செய்ய வேண்டிய பருவத்தில் தான் இந்த உண்மையை நாம் ஒரு போதும் மறக்கக் கூடாது. "பருவத்திலே பயிர் செய்" என்னும் பழமொழி இதனையே உணர்த்துவதோடு காலத்தின் அருமையினையும் புலப்படுத்துவதனை நாம் அறிந்து கொள்ளலாம்.

"இளமையில் கல்"

என்னும் முது மொழியும் இக் கருத்தினையே வலியுறுத்துகின்றது. அதாவது இளமைக் காலம்தான் கற்றலுக்கு உகந்தகாலமாகும் அக் காலத்தினை நாம் தக்க வகையில் பயன்படுத்த தவறுவோமேயானால் பின்னர் அக் காலத்தினை நினைத்து வருந்த நேரிடும்.

"ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா"

என்னும் மற்றுமொரு பழமொழியும் இதனையே நமக்கு வலியுறுத்துகின்றது.எனவே ஒருவன் இளமைப்பருவத்தில் தனது கல்வியை தவறாமல் கற்றுத்தேற வேண்டும் இளமையில் கற்கும் கல்வி உரிய காலத்தில் செய்யும் பயிரினைப் போன்றது. இளமைப் பருவத்தில் கல்வியைக் கற்றவர் தம் வாழ்வின் பெரும் பயனடைவது திண்ணம். காலமென்பது கறங்கு போற் சுழல்வது ஆகும் அதன் வேகத்தை நாம் ஒவ்வொருவரும் நன்கு அறிந்து எமக்கென ஒதுக்கப்பட்ட ஒவ்வொரு பணிகளிலும் வெற்றி பெற ஒவ்வொரு மனிதனும் அயராது உழைக்க வேண்டும். "முயற்சி திருவினையாக்கும்" என்பதை நாம் ஒவ்வொருவரும் மறந்து விடக் கூடாது காலத்தை நன்கு பயன்படுத்திக் நமக்குரிய கடமையைச் செய்ய வேண்டும் ஆற்றலோடு காலமும் அறிந்து செய்வோமேயானால் செய்வதற்கு அரிய செயல் என எதுவும் இல்லை என்பது முன்னோருடைய கூற்றாகும்.

"ஞாலங் கருதினும் கைகூடும் காலம் கருதி இடத்தாற் கையின்"

என்பது திருக்குறள் ஆகும். உரிய காலத்தையும் இடத்தையும் ஆராய்ந்து. செயற் பட்டால் உலகம் கூடக் கைக்குள் வந்துவிடும் என்கின்றார். வள்ளுவர். இதன்மூலம் காலமறிந்துசெயற்படுவதன் அவசியத்தை வலியுறுத்தினார். ஆதலால் காலத்தின் அருமையை உணர்ந்து நாம் கடமையாற்ற முனைய வேண்டும்.

காலத்தை பொன் என மதித்து வரையறை செய்து வாழும் வாழ்வே உன்னத வாழ்வாகும். வையத்துள் வாழ்வாங்கு வாழும் வழியும் இதுவே ஆகும் உலகின் பெரும்பாலான நிகழ்ச்சிகள் யாவும் வரையறுத்தே செய்யப்படுகின்றன அந்த நிகழ்வையும் குறிப்பிட்டபடி குறித்த காலத்தில் நடாத்தாது விட்டால் நடத்துவோர்க்கு பொன்னான பொழுதும் வீணாகும் அதனால் மற்றவர்க்கும் தொல்லை ஏற்படும் காலத்தை பொன்னாக கருதி செயற்பட்டவர்களே வாழ்வில் உயர்வடைவாராகும் இதற்குச் சான்றாக பலர் உள்ளனர். அவர்களுள் பகுத்தறிவுத் தந்தை ஈ.வே.ரா. குறிப்பிடத்தக்கவராவார் அவர் எந்த விடயம் எடுத்தாலும் அதில் காலம் தவறாது செயற்படுகிறார்.

சிலர் காலத்தினை வீணாக்கிக் கொண்டு பொழுதே போகவில்லை என்று கூறுவார்கள். கிடைக்கும் நல்ல பொழுதை தீய வழியில் சூதாடுதல்,மது அருந்தல் களவெடுத்தல் போன்ற பயனற்ற தீய செயல்களில் ஈடுபட்டு தமது காலத்தினை செலவிடுகின்றனர் இவர்கள் தமக்கு கிடைக்கும் பொன்னான நேரத்தை வீணாக்குவதுடன் பொருட்களையும் பொறுப்பற்ற நிலையில் வீணாக்குகின்றனர். பயனற்ற பேச்சுக்களை பேசி காலம் கழிந்துபோகும் இன்பக் களியாட்டங்களில் ஈடுபட்டு காலத்தை வீணாக்குவோரும் தமக்கு தம்முடைய குடும்பத்திற்கும் தாம் வாழும் சமூகத்திற்கும் தீங்குவிளைவிக்க கூடிய வகையில் அவற்றினைப் பாழாக்குகின்றனர் இங்ஙனம் பொன்னான நேரத்தை வீணடிப்போரே அதிகமானோர்களாவர் முயற்சியோடு உழைப்பவர்கள் காலத்தை பொன் போன்று நினைத்து செயற்படுவார்கள் எக்காலத்திலும் எந் நேரத்திலும் அவ் இடங்களிலும் வறுமையடைவதில்லை "முயற்சி உடையோர் இகழ்ச்சி அடையார்" என்னும் சான்றோர் வாக்கை நாம் நினைவிற் கொண்டு வந்து உயர்ச்சியடைய வேண்டும்.

காலத்தின் அருமை அறிந்து கடமைகளை சரிவரச் செய்பவரே ஞாலத்தில் சிறந்து விளங்குவார். .உரிமையோடு வாழ விரும்பும் நாம் கடமையை சரிவர செவ்வன ஆற்ற வேண்டும்.இதனைக் கருத்திற் கொண்டு செயற்படின் அவற்றின் பாதையில் வீறு நடை போட்டு வெற்றி பெற முடியும்.

பயன்மிக்க செயல்களைக் காலம் அறிந்து செய்வோர்க்கும் செல்லும் பாதை செவ்வனே அமைந்து செல்லவும் நன் மதிப்பும் வாழ்வில் செழித்து விளங்கும் அவர் தம் செயல்கள் யாவும் எவ்வித தடையுமின்றி சிறப்புற நடைபெறும் என்றும் அழியாப் புகழுடன் வாழ்வாரெனவே காலத்தை பொன் போல போற்ற வேண்டும். காலத்தை மதித்து நடக்க மனிதராகப் பிறந்த யாவரும் முற்பட வேண்டும். காலத்தின் அருமையை உணர்ந்து தம் செயல்களை செய்திட வேண்டும் காலத்தை பொன் எனக் கருதி செயற்பட்டு பெறுமதிமிக்க வாழ்க்கையை வாழ்ந்து வாழ்வில் நற்பிரஜையாக செயற்படு வோமாக

நன்றி

**உ.தினேஸ்**

*A/L 2016*



## ஏன் என்னை மாணவியாய் படைக்கவில்லை

அழுகிறது முட்செடி ஒன்று
தன் நிலை எண்ணி
வெறுக்கிறது பள்ளி என்னை
வேண்டாம் என்று
சிரிக்கிறது பூக்கள் கூட
என் நிலை கண்டு
எனக்கு ஆசை தான்
பள்ளி சென்று படிக்க
எனக்கும் ஆசை தான்
மாண்பு மிகு மாணவியாக
என்ன செய்ய
இறைவனின் சாபம்
விட்டு விட்டான் வேண்டாத ஒன்றாய்
சிரித்த பூக்களிடம்
சினம் கொள்ள மனமில்லை
பழித்த பறவைகளை
பழிவாங்க எண்ணமில்லை
வெறுத்த மனிதரையெல்லாம்
நொந்து கொள்ள
-நினைக்கவில்லை
படைத்த இறைவனையே
பகலிரவாய் கேட்கிறேன்
ஏன் என்னை மாணவியாய்
படைக்க வில்லை என்று.......

***Piriyanka***
*A/L 2016*



## கல்லூரித் தாயின் இனிய நினைவுகள்

பனி பொழியும் காலத்தில்
வெப்பம் ஒரு சுகம்
கோடை காயும் காலத்தில்
தென்றல் ஒரு சுகம்
அன்பு கூடும் காலத்தில்
அழுகை ஒரு சுகம்
எல்லா பருவ காலத்திலும்
கல்லூரித் தாயின் இனிய நினைவு தனி சுகம்

கல்வியின் அருமை உணர வைப்பதும் கல்லூரி
நம்மை உயர்த்துவதும் கல்லூரி
நகைச் சுவை செய்து சிரிக்க
வைக்கும் நட்பினைத் தருவதும் கல்லூரி
தவறு செய்தால் கண்டித்து
வழிப்படுத்தும் ஆசிரியர்களைத் தருவதும் கல்லூரி
குறும்புகள் செய்து இரசிக்கும்
இடமாய் அமைவதும் கல்லூரி

ஆசைக்கு அணை போட்டு
கல்வியினை குறிக்கோளாய்க் கொண்டு
கடமைக்காக வாழும் ஒரு
இலட்சியப் பெண்-எங்கள்
கல்லூரித் தாய்

இரவுகள் தேடும் நிலவுகளாய்
நானும் என் நண்பர்களும்
ஒரே இலட்சியப் பாதையில்
பயணிக்கும் பறவைகள் ஆனோம்.

தொடு வானம் தொடும் வரை
நம் நட்பின் பயணம் தொடர
நினைத்தாலும் சிறகுகள் ஒடிந்த
குருவிகளாய் பிரிகின்றோம்
நம் கல்லூரித் தாயை விட்டு
காற்றின் பெருமை
சுவாசிக்கும் போது தான் தெரியும்
கல்வியின் அருமை
எம் கல்லூரித்தாயை விட்டு
பிரியும் போது தான் புரியும்

கண் உள்ள வரை பார்த்திருப்பேன்
காலம் உள்ளவரை நினைத்திருப்பேன்
என்றோ ஒரு நாள் மறந்திருப்பேன்
அன்றைய நாள் நான் இறந்திருப்பேன்
என் கல்லூரி நினைவுகளோடு.

***Sarmila***
*A/L 2016*



# கல்லூரி நாட்கள்

எமது கல்லூரி நாட்கள் பதின்மூன்று வருடங்கள்
கற்றுத் தந்த பாடங்களும்
பெற்றுக் கொண்ட அனுபவங்களும்
நாம் அனுபவித்த இன்பங்களும்
ஏதேனும் ஒரு வகையில்
அர்த்தத்துடனேயே நிறைவுற்றது
கூடுதலான நாட்களினை
நட்பென்ற ஓர் உணர்வே
தன்னுள் நிறைத்துக் கொண்டது.
சின்னதாய் அரும்பிய நேசம்
புன்னகைப் பூக்களைப் பகிர்ந்து
புதியவளாய் என்னை புடம் போட்டு
புரிய வைத்த அந்த நாட்கள்!

எம் கல்லூரிப் பயணத்திலே
இறுதி நாட்களில் எனக்காக எழுதிய
கல்லூரித் தாயின் பக்கங்களை
பரிவுடன் நான் பகிர்ந்த போது
அழகிய நினைவுகளை எனக்கு
அன்பாகப் பரிசளித்திருந்தாள் -அந்தத் தாய்
இதழோரம் மலரும் புன்னகையும்
இமையோரக் கண்ணீர்த் துளியும்
கல்லூரி வாழ்க்கையின் அடையாளங்கள்
பக்கங்களை படித்து முடித்ததும்
கல்லூரி வாழ்க்கையின் இனிமையை உணர்கின்றேன்-நான்!

**செ.சிந்தூரி**
*A/L (2016)*

# பனை வளம் காப்போம் பயன்பல பெறுவோம்

1. பூமியில் உள்ள அபூர்வ மரங்களில் பனை மரமும் ஒன்றாகும். ஆது மக்களுக்கு பலநூறு பயன்களைக் கொடுத்து பூலோக கற்பகம் தருவாக விளங்குகின்றது.

2. பனையின் குருத்தோலை சித்திர வேலைப்பாடுள்ள பெட்டி, பாய், கடகம், கூடை, தொப்பி, அலங்காரப் பொருட்கள் என்பன இழைப்பதற்குப் பயன்படுகின்றன.

3. பச்சை ஓலை கோடையிலே மாடுகளுக்கு நல்ல உணவாகிறது, வேலி அடைக்கவும், வீடு வேயவும், மண்ணுக்குப் பசுந்தழை உரமாகவும் உபயோகப்படுகிறது.

4. ஓலையின் அடிமட்டை அழகிய வேலி அமைக்கவும், விறகாகவும் பயன்படுகின்றது. அந்த மட்டையின் நாரைக் கொண்டு கயிறு திரிக்கலாம். பல வகை தூரிகைகள் செய்யலாம். கங்குமட்டை, பன்னாடை என்பனவும் வீணாவது இல்லை விறகாகின்றன.

5. பனையின் இளம் பிஞ்சு, நுங்கு எனப்படும். நுங்கு சுவையான பானம் மட்டுமல்லாது வெப்பகால தோல் வியாதிகளுக்கும் நிவாரணம் அளிக்கின்றது.

6. நுங்கு முற்றி பனம்பழம் ஆகின்றது. பனம் பழத்தில் பனங்களி கறந்து உணவாக உட்கொள்வதுடன், அதிக அளவு களியை எடுத்து பாயில் எடுத்து பரவி வெயிலில் காய வைத்து பனாட்டுத் தயாரிக்கலாம்.

7. ஆவணி மாதத்திலே பனங்கொட்டைகளைப் பாத்தியிலே பரப்பி மண்ணால் மூடி மார்கழி, தை மாதங்களில் அப்பாத்தியைக் கிண்டினால் வரிசை வரிசையாகக் கிழங்குகள் தென்படும்.

8. பனங்கிழங்கைச் சுட்டும் அவித்தும் உணவாக பயன்படுத்தலாம் அவித்த கிழங்கைக் கிழித்து வெயிலில் காய வைத்துப் புழுக்கொடியல் தயாரிக்கலாம். பச்சைக்கிழங்கைக் கிழித்து வெயிலில் காய வைத்து ஒடியல் ஆக்கலாம் ஒடியலை இடித்து மாவாக்கிப் பிட்டு, கூழ் முதலிய உணவுகள் சமைக்கலாம்.

9. ஒடியல் மாவிலிருந்து தயாரிக்கும் உணவுகள் புரதச்சத்து நிறைந்தவை, சுவையானவை நீண்ட நாள் பேணி வைத்து பயன்படுத்தலாம், பனம்பழத்தில் பனங்காய்ப் பணியாரம் தயாரிக்கலாம் உறவினர்களுக்கும் கொடுத்து மகிழலாம்.

10. பனம் பாளையைச்சீவி கள்ளும், பதநீரும் இறக்கலாம்.கள்ளில் இருந்து பனஞ்சாராயம் வடிக்கிறார்கள், பதநீரைக் காய்ச்சி பனங்கட்டி, பனஞ்சீனி, பனம்பாணி, பனை வெல்லம் என்பன செய்யலாம், பதநீரில்க் கஞ்சி இனிப்புக்கூழ் என்பனவும் தயாரிக்கலாம்.

11. பனைமரத்தைப் பிளந்து சீவி வீட்டுக்கு வளையாகவும், துலாவாகவும் செய்வர். துண்டு துணுக்குகளும் வீணாவது இல்லை நல்ல விறகாகப் பயன்படுகின்றது.

12. இன்று ஆராய்ச்சிகள் மூலம் பனையிலிருந்து நவீனமான பல பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றது. ஒப்பனைப் பொருட்கள் நீரிழிவு நோயாளிகளுக்கு ஏற்ற உணவுவகைகள் என்பனவும். தயாரிக்கப்படுகின்றன.

13. பல பொருட்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. அதனால் பெருந் தொகைப் பணத்தைப் பெறுகின்றோம். பனைமரம் ஏழைகளின் குடிசைக் கைத்தொழி லுக்குக்கை கொடுக்கின்றது.

14. வெளிநாட்டு உல்லாசப் பயணிகளைக் கவரும் பொருட்களில் பனைமரத் தயாரிப்புக்கள் முன்னிலை வகிக்கின்றன. வெளிநாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் அரிய பொருட்களாகவும்விளங்குகின்றன.

15. ஆகவே நாம் பனைமரங்களைப் பாதுகாப்பதோடு புதிய பனை மரங்களை உருவாக்குவதன் மூலம் நாட்டின் அபிவிருத்தியைச் சிறப்படையச் செய்வோம். “பூலோக கற்பகதரு பூமியிலே பூத்துக் குலுங்கட்டும்”

**– கு.மதுசன் –**



# My College

The friends came to my college
have come in to my dreams.
writing this poetry as my tears
and without any reason.

I started to love my friendship.
we gathered in our joys and
shared our tears among us
we are living in a dream world
with full of imagination.

But my only belief is my college
as it will give us a good path -so
I'm remembering my memories
To continue my journey

***V.Nanthiny***
*A/L(2016)*

---



# My School

The name of my school is Gnanasariyar college. It is in Jaffna District. It is a mixed school. There are classes from Grade 01 to Grade 13 Nearly 350 students are studying in our school. There are 34staff in our school. My school principal is Mr P.Selvavinayagam. Every year our school gets good results in Grade 5 scholarship O/Level and A/Level Examinations. I am very proud of our school which encourages the students to Education and successful life.

***Miss R.ARANI***
*Grad-05 (2015)*

# கல்வியின் சிறப்பு

"கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே"
என்றார்,

அதி வீரராம பாண்டியரின் இவ்வரிகள் கல்வியின் அருமையை நமக்கு நன்குணர்த்து கின்றன. "கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவருக்கு மாடல்ல மற்றயவை" என்கிறார் வள்ளுவர். கேடில் விழுச் செல்வம் என்று போற்றப்படும் கல்வியின் சிறப்பை சிறிது நோக்குவோம்.

எண்ணும் எழுத்தும். "கண்ணுடையர் என்போர் மற்றோர் முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்" என்கிறார் வள்ளுவர்.

கல்வி அறிவு இல்லாதவர் விலங்குகளுக்கு ஒப்பாவார் என்றும் கூறுகிறார்.மனித வாழ்க்கைக்கு கல்வி ஆனது கண்போல இன்றியமையாதது என்பதை இதனால் நாம் உணர்ந்து கொள்ளலாம். மண்ணும் எழுத்தும் கண்ணெனைத் தகும்"என்பது ஔவையார் வாக்கு நூல்களைக் கற்பதற்குக் கருவியாக விளங்குவது எண்ணும் எழுத்து மாகும் எண் என்பது கணிதத்தையும் எழுத்து என்பது இலக்கிய இலக்கணத்தையும் குறிக்கும். இந்த உண்மையை நாம் கருத்திற் கொள்ள வேண்டும். கல்வியானது நமது அகத்தில் உள்ள அறியாமை ஆகிய இருளைப் போக்கி அறிவு எண்ணும் ஒளியைத் தருவதால் கண் எனப் போற்றப்படுகிறது. அக்கல்விக்கு அடிப்படையாக அமைவது எண்ணும் எழுத்தும் ஆகும். கல்வி அறிவில்லாதவர் கண் இல்லாதவரே"அவர் பெற்றுள்ள கண்கள் புண்களே ஆகும்.

கல்வியின் சிறப்பு. கல்வி அழியாத செல்வமாகும் ஏனைய செல்வங்கள் யாவும் பிறருக்கு கொடுக்குந்தோறும் குறைந்து கொண்டே செல்லும். இதனாற்றான் கல்விச் செல்வத்தை அழியாச் செல்வம் என்று கூறுகின்றனர்.

கல்வியின் சிறப்பைப்பற்றி புலவர்கள் பலர் போற்றிப் பாடியுள்ளனர். கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு மன்னர்க்குத் தன் தேசமல்லால் சிறப்பில்லை. எனவே மன்னனிற் கற்றோன் சிறப்புடையவன் என்கிறார் ஔவையார் கல்வியின் ஊங்கில்லை சிற்றுயிர்க்கு உற்றதுணை என்று சிறப்பித்து கூறுகிறது.

நீதிநெறி விளக்கம். கல்வி அறியாமையைப் போக்கும் அருமருந்தாகும் என்கிறது நாலடியார். கல்வி போல் மம்மர் அறுக்கும் மருந்து உலகில் வேறெதுவுத் இல்லை,என்பது நாலடியர் தரும் நற்கருத்தாகும்.

கல்விகற்றவனையே உலகம் மதிக்கும். கல்லாதான் நெடு மரம் போன்றவனாவான். அவனால் குடும்பத்துக்கோ, சமுதாயத்துக்கோ, நாட்டுக்கோ எவ்வித பயனும் ஏற்படாது. எனவே கல்வி ஒன்றே நம்மைக் கடைத்தேற்றும் கலம் என்பதை உணர வேண்டும் எனவே ஊர் தோறும் உள்ள பிள்ளைகளுக்குக் கல்வி அறிவு ஊட்டுதலே மாபெரும் தருமம் ஆகும்.

இந்த உண்மையை நன்கு உணர்ந்து வீட்டிலும் நாட்டிலும் கல்விப் பயிர் வளர்ந்திடப் பணி செய்வதே கற்றறிந்தோர் கடனாகும் "சீனாவுக்குச் சென்றேனும் கல்வியைக் கற்றுக் கொள்" என்றார் முகம்மதுநபி. அவர் வாக்குக்கேற்ப பள்ளத்தை நாடி ஓடும் வெள்ளத்தைப் போலக் கல்வியைப் பெற்றிட முனைய வேண்டும்.

அழியாச் செல்வமான கல்வியை நமதாக்கிட முயல்வோமாக

கல்வியே வெல்லும்!

**சி. சயேக்கா**
**தரம்–06**

# செய்யும் தொழிலே தெய்வம்



"செய்யும் தொழிலே தெய்வம் அந்த சிந்தனை நமது செல்வம்"

என்பது பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் பாட்டு வரிகளாகும். நாம் எந்தத் தொழில் செய்கிறோம். என்பது முக்கியமில்லை. எப்படி செய்கிறோம் என்பது தான் முக்கியம். தொழில் உயர்வு, தாழ்வு என்ற பேதம் எதுவுமில்லை. பேதம் பேசுவது தவறு. செய்யும் தொழிலே தெய்வம் என நாம் கருதவேண்டும். செய்யும் தொழிலில் எம் திறமை பளிச்சிட வேண்டும்.என நாம் நினைக்க வேண்டும்.

மனித குலத்திற்கு அடிப்படையாக அமைவது உழைப்பு உழைப்பால் மாத்திரமே மனிதன் உயர்வடைய முடியும். நவீன பொருளாதார உலகில் உழைப்பின் மூலமே உயர்வு பெறமுடியும். நவீன பொருளாதார உலகில் உற்பத்திக் காரணியுள் உழைப்பும் ஒன்றாகக் கருதப்படுகின்றது. எனவே மானிட சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கும், நாட்டின் வளத்திற்கும், உலகின் இயக்கத்திற்கும் தொழில் இன்றியமையாததாக விளங்குகிறது. தொழில்கள் எல்லாம் சிறப்புக்குரியன அவை மனித வாழ்க்கை முன்னேற்றத்திற்கு வளமளிப்பன. அவற்றை நாம் தெய்வமாகக் கருதி போற்றப்பட வேண்டும். இதனையே மகாகவி பாரதியாரும்.

"இரும்பை காய்ச்சி உருக்கிடுவீரே!
இயந்திரங்கள் வகித்திடுவீரே!
கரும்பைச்சாறு பிளிந்திடுவீரே!
கடலில் மூழ்கிநன்முத்தெடுப்பீரே!
அரும்பும் வேர்வை உதித்துபுவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடுவீரே!
பெரும் புகழ் நமக்கேயிசைக்கின்றேன்
பிரம தேவன் கலையிங்கு நீரே!

என்று, தொழிலையும் அத்தொழிலை மேற்கொள்ளும் தொழிலாளர்களையும் மிக உயர்வாகப் பாடியுள்ளார். "கைவருந்தி உழைப்பவர் தெய்வம்" என வியந்து போற்றுகிறார். தொழிலாளர்களைப் பிரம தேவனாகவும் தெய்வமாகவும் உருவகித்துக் காட்டுவதன் மூலம் தொழில் செய்வோரின் சிறப்பினை இவ் உலகுக்கு உயர்த்திக் காட்டுகிறார் பாரதியார்,

"ஆயிரம் தொழில் செய்திடுவீரே!
அரும்பும் வேர்வை உதிர்த்துப்புவிமேல்"

எனத் தொழில் செய்ய முன்வாரீர் எனப்பாடுகிறார். இதன் மூலம் தொழில் செய்வோரைப் போற்றுகின்ற பாரதி தொழில் செய்யாது வீணில் உண்டு களித்திருப்போரைக் கண்டிக்கவும் தவறவில்லை. தொழில்களிலெல்லாம் சிறந்த தொழில் உழவுத்தொழிலே அதுவே உலக மக்கள் யாவருக்கும் உணவளிக்கும் தொழிலாகும். எல்லா செயற்பாடுகளுக்கும் அச்சாணி யாகத் தொழிற்படுவது உழவுத் தொழிலாகும். எனவே தான் பாரதியாரும் உழவுத் தொழிலிற்கு முதன்மை அளித்து போற்றுகிறார்."உழவுக்கும் தொழிற்கும் வந்தனை செய்வோம்-வீணில் உண்டு களித்திருப் போரை நிந்தனை செய்வோம். எனத் தொழிலின் பெருமையினை இமயத்தின் உச்சியினில் ஏற்றி வைக்கிறார்.

பாரதி வழிவந்த பாரதிதாசரும், "சித்திரச் சோலைகளே உமை அன்று திருத்த இப்பாரினிலே அன்று எத்தனை தோழர் தம் இரத்தம் சிந்தினரோ உங்கள் வேரினிலே. என்று பாரதி தாசரும் தொழிலாளரின் சிறப்பை எடுத்து நோக்கிப் போற்றுகிறார். கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையும் பாடுபடும் பாட்டாளி மக்களைப் பாராட்டத் தவறவில்லை "பாடு படுபவர்க்கே-இந்தப் பாரிடம் சொந்தமையா! காடு திருத்தி நல்ல -நாடு காண்பவரல்லவோ?" என்கிறார்.

தொழில் மகத்துவத்தைத், தொழிலாளர்களின் உழைப்பை மதித்துப் போற்றாத சமூகம் ஒரு போதும் எழுச்சி பெற முடியாது என்பதனை இன்றைய உலகில் நாம் நிதர்சனமாகக் காணமுடிகிறது. இதனால் தான் செய்யும் தொழிலினைத் தெய்வமாக நினைத்துச் செயற்பட வேண்டும். அவற்றில் பேதம் காட்டக்கூடாது என வலியுறுத்தப்படுகிறது. இதனையே நற்றமிழ் நூலான நாலடியாரும், "அறிவினால் காற்றொழில் என கருதற்க, கையினால் மேற்றொழிலும் ஆங்கே மிகும் "என்றுரைக்கின்றது.

"அறிவினால் ஆராய்ந்து செய்யும் எந்தச் சிறிய தொழிலையும் அற்பமான தொழில் என்று எண்ணவேண்டாம். அந்த அற்பமான தொழிலே முயற்சியால் உயர்ந்த தொழிலாக மேம்படும்" "என்பது நாலடியார் தரும் நற் கருத்தாகும். தொழில் சிறியதாயினும் அக்கறையுடன் செய்தால் உயர்வும் வெற்றியும் நிச்சயம் கிடைக்கும் என்ற உண்மையை இது உணர்த்துகிறது.

இன்றைய உலகில் ஆண்களும் பெண்களும் பல்வேறு வகையான தொழில்களைச் செய்து வருகின்றனர். முழுநேரம், பகுதிநேரம் எனப் பல தொழிலில் ஈடுபடுகின்றனர். அத்தொழில்க ளுக்கிடையே பேதம் காண்பதில்லை.

"வையகம் காப்பவ ரேனும்-சிறு
வாழைப்பழக்கடைவைப்பவரேனும்
பொய்ய கலத்தொழில் செய்து - பிறர்
போற்றிட வாழ்பவர் எங்ஙனும் மேலோர்

என்னும் பாரதியின் கூற்றையும் நாம் நினைவில் கொள்ளுதல் வேண்டும் .நியூயோர்க் மருத்துவக் கல்லூரியில் பணிபுரியும் டாக்டர் ஸாம் ஜேம்ஸ் என்பவர் இருநூறு கோடீஸ்வரர் களை நேர்கண்டு உரையாடினார் "உழைப்பினால் முன்னிலைக்கு வந்த கோடீஸ்வரர்கள் எல்லோருமே தங்கள் அந்தஸ்த்திற்கு குறைவு என எந்த வேலையையும் குறைத்து மதிப்பிடுவதில்லை எந்த வேலையும் செய்ய இவர்கள் தயாராக இருக்கிறார்கள் என்கிறார்.

இந்த மனப்பான்மை உள்ளதாற்றான் அவர்கள் உலக அரங்கில் முடிசூடா மன்னர்களாகத் திகழ்கின்றார்கள் இவர்களோடு நம்மவர்களை ஒப்பிட்டுப் பார்போமாயின் நமது தாழ்வு நிலைக்கான காரணம் நன்கு விளங்கும் உழைப்பே தெய்வம் என்பதை நாம் நன்குணர்தல் வேண்டும்.

"கைகளினை கொண்டு உழைப்பவன் பாட்டாளி" கைகளோடு, மூளையினையும் பயன் படுத்தி உழைப்பவன் தொழில் வினைஞன் கைகள், மூளை இவற்றுடன் இதயத்தையும் சேர்த்து உழைப்பவன் கலைஞன் என்றார்.

ஹாயினிலர் இக் கருத்தினை நம்ம நெஞ்சில் இறுக பற்றிக் கொண்டால் எத்தொழிலையும் கேவலமாக எண்ணிப் பரிந்துரைக்கும் எண்ணம் எம்இதயத்தினுள் எழா "ஒரு கவிதை எழுதுவதில் உள்ள பெருமை ஒரு நிலத்தை உசுவதில் உண்டு" என்றார் ஜோர்ஜ் வாஷிங்டன் உழவுத் தொழில் மாத்திரமல்ல அனைத்து தொழிலுமே வந்தனைக் குரியன "தாழாதே!எவரையும் தாழ்த்தாதே!" என்றார் எமிலி ஜோலா அதனையே எமது குறிக்கோளாகக் கொள்ள வேண்டும். எத்தொழில் செய்பவராயினும் என்ன? எல்லோரும் மனிதர்களே இந்த எண்ணம் இருந்தால் நாம் வாழ்வோம் எந்நாளும் புகழ் வந்து சேரும். உழவுத் தொழில், உன்னதமான தொழில். உழவன் சேற்றில் கால் வைத்தால் தான் நாம் சோற்றிலை கை வைக்கலாம். என்ற உண்மையை மனதில் கொள்ள வேண்டும்.

சுருக்கக்கூறின், உலகில் உள்ள அனைத்து தொழிலும் உயர்ந்ததுதான் உன்னதமான தொழில்களை நாம் புறக்கணித்து விட்டு ஆடை நலுங்காமல் நாற்காலிகளில் அமர்ந்திருக்கும் பதவிகளைத் தேடிக் காலத்தை வீணடிக்கின்றோம். இந்நிலை மாற வேண்டும். எத்தொழிலையும் ஏற்று செய்திடும் மனநிலையை நாம் பெற வேண்டும். அத் தகு மனநிலை உண்டானால் செய்யும் தொழிலே தெய்வம் எனக் கருதி நாம் வாழ்ந்து வாழ்வில் வளம் பெறுவோமாக.

**செல்வி சி.லக்ஷிகா**

*10A(2015)*

# ஆசிரியர் குழாம் – 2015



இடமிருந்து வலமாக இருப்பவர்கள் :-

திருமதி ஜெ.விஜயகுமார், திருமதி இ.செல்வநாயகம், திருமதி சா.புவனேசன், திரு நா.கலாதரன், திரு ஆ.சுதர்சன், திரு வே.கருணாநிதி (பிரதி அதிபர்), திரு ப.செல்வவிநாயகம்(அதிபர்), திரு அ. ஸ்ரீசந்திரன், திரு வ.விக்கினேஸ்வரன், திருமதி ம.கோபிநாத், திருமதி ரா.சுஜீவன்குலாஸ், திருமதி சா.ராகுலன்.

இடமிருந்து வலமாக நிற்பவர்கள் 1ம் வரிசை :

திருமதி சு.குலேந்திரம், திருமதி ஜெ.நகுலேந்திரன், செல்வி ஷைலானி, திருமதி ப.தவேந்திரன்,

# இனியொரு விதி செய்வோம்

ஐவகை நிலத்தில்
மருதத்தை அயலாய்க்
கொண்ட அன்னை!
மருதடிப் பாடசாலையென
மக்கள் அழைத்தனர்
மாறிலா சிந்தை அருளும்
மா ஞான வைரவர் துணை
என்றும் கிடைக்கும்
எம் அன்னை!
சீர் புகழ் கல்வியாளர்கள்
சிறப்புடன் கற்று
சிந்தை யகலா
நிலைய மாய் மிளிர்ந்து
ஞானத் தேடல்கள் பலப்பல
ஞாலம் புகழக் கற்றவர் பலர்
ஞாலத்தில் எங்கும்
நிறைந்துள்ளனர் நிறைவாய்
நியாயமற்ற கொள்கைகள்
நிதர்சனத்தை மறைந்தன
அன்னையைத் தவிக்கவிட்டு
அயல்நிலைய மோகம் கொண்டனர்
அருகி அருகி பிள்ளைகள் இலாது
அன்னை அழுதாள்!
தெவிட்டும் கொள்கைகள்
தெரிவிப்பார் யார்?
இல்லையேல் இதுவே கதியாய்விடும்
இனி ஒருவிதி செய்வோம்
அதை எந்த நாளும் காப்போம்
என்ற கொள்கையின்பால்
காத்திடுவோம் எம்
கலைக் கூடத்தை...

**ப.செல்வவிநாயகம் (அதிபர்)**



# கற்றுணர்ந்தொழுகு

"இன்னறுங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த் தண்சுனைகள் இயற்றல்
அன்னசத்திரம் அயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னர் உள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

என்ற உன்னத நோக்குடன் 1935 ஆம் ஆண்டு கரவெட்டியிலும் அதன் சூழலிலுமுள்ள மாணவர்களுக்கு கல்வியை ஊட்டவும் சைவக் கலாசாரத்தையும் பண்பாட்டையும் பேணவுமென நிறுவப்பட்டதே ஞானசாரியர் கல்லூரியாகும் எம் கல்லூரித்தாய் இவ்வாண்டு அமுத விழாவை உற்சாகத்துடன் கொண்டாடுகின்றாள் பெற்றோரைப் பிள்ளைகள் நினைப்பதைப்போல எம்மை உருவாக்கிய, வளப்படுத்திய, நெறிப்படுத்திய கல்லூரித்தாயை நினைத்துப்பார்க்கிறேன் வறுமை நிறைந்த குடும்பங்களைக் கல்விப் பேறு காரணமாக பொருளாதார சமூக மட்டங்களில் உயர்த்தி விட்ட எம் கல்லூரிக்கு நிகரான நிறுவனம் வேறெதுவும் இருக்க முடியாது என்றே கூறலாம்

"கற்றுணர்ந்து ஒழுகு" என்ற மகுட வாசகத்தின் மூலம் தாய் தன் குழந்தைகளுக்கு தனது எதிர்பார்ப்பைத் துல்லியமாக உணர வைத்திருப்பதை எண்ணுகின்றேன் தாயின் கட்டளையை ஏற்று தடம் பதித்துத் தலைநிமிர்ந்து நிற்கின்ற பிள்ளைகள் அவளின் பெருமையைப் பேணி நிற்கின்றனர்

மனித வாழ்க்கைக்கு அறிவு இன்றியமையாதது. அறிவையும் உணர்வையும் அடிப்படையாகக்கொண்டு அமைந்ததே வாழ்வு என்கின்றோம் புலன்களால் அறிவும் பொறிகளால் உணர்ச்சியும் பெறப்படும் இந்த வகையில் அறிவையும் உணர்வையும் வளர்த்திடும் கருவியாகக் கல்வி அமைகின்றது மனித இனத்தின் வளர்ச்சியில் வரலாற்றின் புதுப்புது அனுபவங்களுக்கூடாக மனிதன் பெற்ற புதிய அறிவு அவனை ஒவ்வொரு கட்டத்திலும் முன்னரிலும் பார்க்க ஒருபடி முன்னெடுத் துச் சென்றுள்ளது. அந்த அனுபவமும் அறிவும் அன்றுதொட்டு சுயமாகவோ அல்லது பிறருடைய உதவியுடனோ பெறப்பட்டன. அத்தகைய செயற்பாடே கல்வி என்றும் அதன் பயனே கற்றல் என்றும் கணிக்கப்பட்டது. கற்றல் என்பது பண்டைநாள் முதல் மக்கள் கடைப்பிடித்து வரும் பெருமைக்குரிய செயற் பாடாகும். கற்றல் மூலம் அறிவை, சூழலை, சமூகத்தை, நமது பண்பாட்டுப்பேரவை நாம் ஆராய்ந்து அறிந்து கொள்ளலாம். ஆய்தலுக்கு கல்வியே ஏற்ற கருவியாகும் ஆங்கிலப் பெரும் புலவரான வில்லியம் வோட்ஸ் வர்த் அவர்கள் "மனிதத் தன்மையினை மனிதன் பெற உறுதுணையாய் விளங்குவது கல்வி" என்கின்றார். கல்வி மனிதனிடத்து உள்ள அறியாமையை நீக்கி பூரணத்துவத்தை வெளிக் கொணருகின்றது. ஆதலால் மனிதன் என்றும் கற்க வேண்டியவனாகின்றான். "கற்க மறுப்பவன் வாழ மறுக்கின்றான் " என்பது அறிஞர் வாக்கு மனிதன் மனிதனாக வாழ இலக்கண இலக்கிய அறிவு அவசியமாகும்.

இலக்கியங்கள் மக்கள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுகின்றன. எனவே அவற்றைக் கற்று உணர்ந்து வாழ்வில் கடைப்பிடிக்கும் கடப்பாடு ஒவ்வொருவருக்கும் உண்டு இத்தகைய கல்வி பற்றி கூறவந்த நாலடியார்

“கல்வி கரையில் கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கின் பிணிபல - தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகிற் றெரிந்து”

என்கின்றது.

இவ்வாறு கல்வியைக் கற்றால் மட்டும் போதாது உலகம் மதித்துப் போற்றும் வகையில் நாம் வாழவேண்டும். மற்றவர்கள் பழிக்கும் வகையில் நம்வாழ்வு அமைந்து விடக் கூடாது இறந்தும் வாழ்வதே நம் வாழ்வின் இலட்சியமாக அமைய வேண்டும். இறந்தும் நாம் வாழ வோண்டுமாயின் வாழும்போதோ மேன்மையான வாழ்வு வாழ வேண்டும். அந்த மேன்மை ஒழுக்கத்தின் வாயிலாகவே அமையும் என்பதில் ஐயமேதுமில்லை. ஒழுக்கம் என்ற சொல்லுக்கு ஒழுகுதல்,நடத்தல் என்பது பொருளாகும். செயலில் தூய்மை, உலகத்தோடு ஒட்ட ஒழுகல், இன்னா செய்யாமை, தன்னுயிர்போல் மண்ணுயிர்களையும் நேசித்தல் போன்றவற்றை கைக்கொண்டு ஒழுகுவதே ஒழுக்கம் என்கின்றோம். மக்களுக்குரிய ஆறாவது அறிவினால் உண்டாவதே ஒழுக்கம் மாக்களுக்கும் மக்களுக்கும் இடையேயான வேறுபாடாக இருப்பது பகுத்தறிவு என்பதால் மனிதனானவன் எதை? எந்தஇடத்தில்? எப்படிச் செய்யவேண்டும் என்று உணர்ந்தே செய்வான். இவ்வாறு அவன் சிந்தித்துச் செயற்படக் கல்வி அவசியம் ஆதலால் கற்று உணர்ந்து ஒழுகி உன்னத வாழ்வை வாழ்வதுடன் மற்றவர்களுக்கும் வழிகாட்டியாய் வாழ வேண்டும். இதனையே,

“கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்கு தக”

என்கின்றார் பொய்யாமொழிப் புலவர் அவர்கள்.

ஒருவனிடம் எத்தனை செல்வங்கள் வசதி வாய்ப்புகள் இருந்தாலும் அவனிடம் ஒழுக்கம் இல்லை யென்றால் அவனை உலகம் மதிக்காது ஒழுக்கம் கல்வியினால் வருமாயின் அதற்கு நிகரேது? மனிதவாழ்வு பெறப் பொருள் அவசியம் ஆதலால் பொருளீட்டுவது வாழ்வின் நோக்கமாக அமையும் போது அதன்மூலம் புகழீட்டுவதும் குறிக்கோளாக அமைய வேண்டும். பொருள் வழியே புகழ் வேண்டுமாயின் ஒழுக்கத்தின் ஒல்காமை அவசியமாகிறது. ஏட்டுக்கல்வி என்பது வாழ்வின் ஒரு பகுதியே அது மட்டும் வளர்ந்து விட்டால் வாழ்வில் முழுமையான வெற்றியை நாம் பெறமுடியாது கல்வி அறிவொடு ஒழுக்கமும் பண்பாடும் வளரவேண்டும். அதன் மூலமே மனிதவாழ்வு முழுமையடைய முடியும். இந்த உண்மையை ஒவ்வொருவரும் உணர்ந்து செயற்பட வேண்டும் என்பதையே கருத்திற் கொண்டு எம் கல்லூரி அன்னை தன்னை நாடிவரும் குழந்தைகளை நோக்கி “கற்றுணர்ந்தொழுகு” என்கின்ற மகுட வாசகத்தின் மூலம் வழிப்படுத்தி வளமான வாழ்வுக்குத் தயார்படுத்துகின்றாள். எனவே மாணாக்கள் ஒவ்வொருவரும் அன்னையின் வழிகாட்டலில் வளம்பெறவேண்டும் என்பதே எனது பேரவாவாகும்.

**திருமதி சாந்தமலர் புகநேசன் (பழைய மாணவி)**
**ஆசிரியர்**



# வேதங்கள் கூறும் வாழ்வியல் அம்சங்கள்

வேதம் என்பது வித் எனும் வினை அடியில் இருந்து தோன்றியது. அது அறிவு எனும் பொருள் தரும். இதனால் வேதங்களை அறிவு நூல் எனக் கொள்வர். இவ் வேத இலக்கியங்கள் கிறிஸ்த்துவிற்கு முன்1500-கி.பி.1600 வரையிலான காலப்பகுதியில் தோற்றம் பெற்றன எனக் கூறப்படுகின்றது.

இவ் வேதங்கள் கூறுகின்றன வாழ்வியல் அம்சங்களை நோக்கும் போது அப்யாரோஹ மந்திரம், ஜபிப்பவனின் உயர் நிலைக்கு உயர்த்துகின்றது அதாவது,

**"ஓம் அஸதோ மா ஸத்கமய!**
**தமஸோ மாஜியோதிர் கமய!**
**ம்ருத்யோர் மா ஸம்ருதம் கமய!! ஓம்!!"** என்கின்றது

இதன் கருத்து உண்மையற்ற நிலையிலிருந்து என்னை உண்மை நிலைக்கு அழைத்துச் செல்வாயாக! அறியாமை இருளிலிருந்து என்னை அறிவுப் பேரொளிக்கு அழைத்துச் செல்வாயாக மரணத்திலிருந்து என்னை மரணமில்லா பெருநிலைக்கு அழைத்துச் செல்வாயாக! என்பதாகும். மேலும் மாணவன் ஆசிரியனிடம் சென்று கல்வியைத் தொடங்குங்காலத்தில் குறைகளும் தடைகளும் இல்லாமல் கல்வி நிறை வேற ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து பின்வருமாறு பிரார்த்திக்கின்றனர் "ஓம் ஸஹ நாவவது! ஸஹ நௌபுனத்து, ஸஹவீர்யம் கரவாவஹை! தேஜஸ்வி நாவதீத மஸ்து மா வித்விஷாவஹை!!

அதாவது ஆசாரியர் சீடர் ஆகியோர் இருவரையும் இறைவன் காப்பாராக! அறிவின் ஆற்றலை நாம் இருவரும் அனுபவிக்குமாறு ஊக்குவிப்பாராக! நாம் இருவரும் ஈடுபாடு மிக்க ஆற்றலுடன் உழைப்போமாக! கற்றது நமக்குப் பயனுள்ளதாக விளங்கட்டும், அதற்காகவும் நாம் ஒருவரையொருவர் வெறுக்காமல் இருப்போமாக! இக்கருத்து வாழ்வியலில் குருவிற்கும் மாணவனிற்கும் இடையில் உள்ள அன்னியோன்யத்தை எடுத்துக் காட்டுகின்றது.

எல்லாவற்றையும் உயர்ந்தவற்றையும் தேர்ந்தெடுப்பதற்கு நாம் முயல வேண்டும். அதற்கு உறுதுணையாக பின்வரும் சாந்தி மந்திரம் உதவுகின்றது.

"ஓம் பத்ரம் கர்ணேஷு" சருணுயாம் தேவா! பத்ரம் ப்ச்யோமா ஷபிர் யள்த்ரா! ஸ்திரைரங்கைஸ் துஷ்ட்டு வாக்ம்ஸ்ஸ்தனூபி! வயசேம தே வஹிதம் தாய்:!

இதன் கருத்து காதுகளால் நாங்கள் நல்ல விஷயங்களைக் கேட்க வேண்டும். கண்களால் நாங்கள் நல்ல விஷயங்களையும் காண வேண்டும். என்பதாகும். இதுவேதம் கூறுகின்ற வாழ்வியல் அம்சங்களில் மனிதனை மனிதனாக வாழவழியமைத்துக் கொடுக்கின்றது.

வேதம் கூறுகின்ற வாழ்வியலில் ஜீவகாரண்யம் முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

**"ஊர்த்வம் ஜிகாது பேஷஜம்! சன்னோ**
**அஸ்து த்விபதே! சம்சதுஷ்பதே!!**

இதன் கருத்து செடி கொடிகள் மேலோங்கி வளரட்டும்,எம்மோடு உள்ள இரண்டு கால் ஜீவன்களுக்கும் நான்கு கால் பிராணிகளுக்கும் மேன்மை உண்டாகட்டும் என்பதாகும்.

உயர் வாழ்க்கையை நாடுபவர்களுக்கு மனமும் பேச்சும் ஒன்றாக இருப்பது மிக அவசியமாகும். இதனை ஐதரேய உபநிடதம் "எனது பேச்சு மனத்தில் நிலை பெறட்டும் மனம்

பேச்சில் நிலை பெறட்டும்" என கூறுகின்றது. இருக்கு வேதம் 10.151 சிரத்தா ஸீக்கும் சிரத்தை என்றால் இறைவன் இருக்கின்றார் என்பதை மனதில் தெளிவாக வைக்கின்ற நம்பிக்கை இது வாழ்வில் இறைநம்பிக்கையை நமக்கு எற்படுத்துகின்றது.

வேதங்கள் கூறுகின்ற வாழ்வியலில் முக்கியமான பண்பு நல்ல சிந்தனைகள் எங்கிருந்து வந்தாலும் அவற்றை ஏற்றுக்கொள்ளுகின்ற தன்மை முக்கியமாகும் இதற்குச் சான்றாக

**"ஆரோ பத்ரா சூக்தம் இருக்குவேதம் 1.89" பின்வருமாறு கூறுகின்றது.**

**"ஆரோபத்ரா க்ரத்வோ யந்து**
**விச்வ தோஎ தப்தாஸோ அபரீதாஸ உத்பித்"**

அதாவது தீமை கலவாத தடை அற்ற தடைகளை உடைக்க வல்ல மங்கலமான எண்ணங்கள் எல்லாத் திசைகளிருந்தும் எம்மை வந்து சேரட்டும் என்பதாகும்.

வேதங்கள் நல்லொழுக்கம் நல் வாழ்க்கைக்கு முக்கியத்துவம் கொடுத்தன. பாவம் கொடுமை போன்ற எதுவும்சகிக்கப்படவில்லை. பாவம் செய்வோரிடம் இருந்து சமுதாயமே முகத்தை திருப்பி கொண்டது. பாவத்தைப் போக்குமாறு வேண்டுகின்ற ஒரு பாடல் பின்வருமாறு

அளவுக்கு அதிகமாக உண்ணுதல், அளவுக்கு அதிகமாக பருகுதல், தீயவர்களிடமிருந்து பரிசுகளை ஏற்றுக் கொள்ளல் இவை மூலமாக எந்தப் பாவங்கள் எனதாக உள்ளனவோ அவற்றை அரசனாகிய வருணன் சொந்த கைகளாலேயே துடைத்து விடுவாராக!" என இருக்கு வேத அக மர்ஷண சூக்தம் கூறுகின்றது. மேலும் வேதங்கள் கூறுகின்ற வாழ்வியல் சிந்தனை களில் மற்றவர்கள் பார்த்துக் கொண்டிருக்க உண்ணக் கூடாது. கொடுத்து உண்ணுதல் வேண்டும்.

என்பதை இருக்கு வேதம்10.111 பின்வருமாறு கூறுகின்றது.

**"உதோ ரயிட் ரண தோ ரோப் தஸ் யத்யு**
**தாட்ருணன் மர்டிதாரம் ர விந்ததே!!**

இது கொடுத்தார்க்கு செல்வம் குறைவில்லை என்பதை எடுத்துக் காட்டுகின்றது தனியே உண்பவன் பாவியாவான். அதாவது,

**"கேவலாகோ பவதி கேவலாதீ"6"** என்கின்றது இருக்கு வேதம்பிச்சு சூத்திரம்.

மனிதர்களிடத்தில் ஒற்றுமையும் அன்பையும் "ஸம்மனஸ்யகத்தம்" வலியுறுத் துகின்றது.

**"ஸஹ்ருதயம் ஸாம் மனஸியமவித்வேஷம் க்ருனோமி" வ:** அதாவது ஒரே உள்ளத்தினராக ஒரே மனத்தினராக வெறுப்பு அற்றவர்களாக உங்களை ஆக்குங்கள் புதிதாக பிறந்த கன்றினை தாய்ப்பசு நேசிப்பது போல ஒருவரை ஒருவர் நேசியுங்கள்-என்பதாகும் மேலும் மகள் தந்தையை பின் தொடரட்டும் சகோதர சகோதரிகள் ஒருவரை ஒருவர் நேசியுங்கள்-என்பதாகும் மேலும் மகன் தந்தையை பின் தொடரட்டும் சகோதர சகோதரிகள் ஒருவரை யொருவர் வெறுக்கக் கூடாது அனைவரும் நன்மை பயக்கும் வார்த்தைகளை பேசுங்கள் ஒருபோதும் ஒற்றுமை குலையாதீர்கள் கிணறும் சமையல் அறையும் உங்கள் அனைவருக்கும் பொது இடமாக இருக்கிற அளவிற்கு உங்களிடையே ஒற்றுமை வளரட்டும் இவ்வாறு ஒற்றுமை வலியுறுத்தி இருக்கும் வேதம் கூறுகிறது வாழ்வியலில் முக்கிய அம்சமாகும்.

இறுதியாக பிரபஞ்சத்தில் உள்ள பொருட்களெல்லாம்பரம்பொருளுடையதுஎனவே ஒருவன் தன் தேவைக்கு அதிகமான பொருட்களை பெற முயற்சிக்கக் கூடாது என்பதை "மாக்ருத!கஸ்ய ஸீவித் தனம்" வேதங்கள் கூறுகின்றன இவற்றை வாழ்வில் கடைப்பிடித்து வாழ்வோமாக! இவையே வேதங்களால் கூறுகின்றன வாழ்வியல் அம்சங்களாகும்.

**வித்வான் நா.கலாதரன் (MA)**
**ஆசிரியர்-யா/ஞானசாரியர் கல்லூரி**



# அமுதத்துக்கு சில துளிகள்

காலத்தின் நியதியை கருத்தில் கொண்டு
கவிதையொன்றை வடிக்கிறேன் யான்
மாற்றம் என்பது மாறாததொன்று
அவ்வகையில் எம் பாடசாலையும் ஒன்று
தனித்துவத்தில் மாறாமல் தன்னை பேணி நிற்கும் சிறப்பு இன்று
சில வாழ்கை வாழும்போது வலியானது வாழ்ந்து முடிந்து
அசை போடும்போது வரமானது
பாடசாலைக் காலம் வாழும்போது வாழ்ந்து முடிந்த போதும் வரம்தான்

சின்னஞ் சிறுவயது வண்ணக் கனவுகளை
வசந்த மலர்ச் சோலையாக்குவது பாடசாலை
எம் பாடசாலையும் அவ்வாறே.
நகர்ப்புற பாடசாலையில் கல்வி கற்பதுதான் நாகரிகமென
வித்தாய் விழுந்ததால் அதற்கு விடிவில்லை
நாம் படிக்கும் காலத்திலும் நகரப் பாடசாலை மோகம்.
என்றாலும் எமது பாடசாலை பல வைத்தியர்கள் பொறியியலாளர்கள்
கணக்காளர்களுக்கு ஆரம்ப வித்து.
உள்நாடு வெளிநாடு எந்நாட்டிலும் எம்மவரின் சிறப்பான வெளிப்பாடு

விரும்பியோ விரும்பாமலோ இங்கு வந்தோர்
சேர்ந்த இடம் உயர்ந்த இடமே.
பாடசாலையென்பது ஒரு தனிக் கட்டடமல்ல,
பாடசாலை கதைக்குமென்றால் அது பல கதைகள் கூறும்
மனதினில் ஒரு ஏக்கம், அக்காலம் மீண்டும் வருமா என்று?
சக நண்பர்களும் கற்பித்த ஆசிரியர்கள் நினைவில் நிற்பவர்கள் தனித்து
யாரையும் நினைவு கூர முடியவில்லை.
என்றாலும் நான் இப் பாடசாலையின் பழைய மாணவி ஒரு பங்காளி. என்பதில்
மட்டற்ற மகிழ்ச்சி

காலத்தின் கணங்கள் காற்றாய் பறக்கும் தருணத்தில்
என் கண்களில், இதயத்தில் மயிலிறகால் வருடும்
சில நிமிட நினைவுகள் அமுதமாய், துளிகளாய்
இங்கு சிந்துகின்றனவே.

**திருமதி. வனிதா**
**(முன்னாள் ஆசிரியர் )**

# இந்துமாமன்றம்





1988ம் ஆண்டு விளையாட்டுப் போட்டி பிரதமவிருந்தினர்
திரு ஆ.வ.தங்கராசா அவர்கள் கலந்து கொண்டார்.



# சமூக வாழ்வியலில் தொடர்பாடல்

இன்றைய தகவல் தொழில்நுட்பத்துடன் கூடிய அறிவு யுகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அறிவு யுகத்திலே நவீன ஊடகங்கள் மக்களுடைய வாழ்க்கையிலே பின்னிப்பிணைந்து காணப்படுகிறது.

மனிதன் ஒரு சமூக விலங்கு சமூகத்துடன் உரையடுவதன் காரணமாகவே தன் தேவைகளையும் நிறைவேற்றிக் கொள்கின்றான் சமூக உறவிற்குள் கண்டுணர் வாழும் மனிதன் ஏனைய மனிதர்களோடு தொடர்பு கொள்ளல் அத்தியாவசியமாகின்றது.

ஆரம்ப காலத்தில் தொடர்பு கொள்வதற்கு ஒலியெழுப்புதல், புறாவைப் பயன்படுத்தல், நெருப்பு மூட்டிச் செய்தி சொல்லல், பறை, முரசு, சங்கு, கோயில்மணி ஒலிகள் எழுப்புதல், பேன்றன பயன்படுத்தப்பட்டன. காலப்போக்கில் கடிதம், தந்தி, தொலைக்காட்சி, என்ற வகையில் மனித வாழ்வில் ஊடகங்கள் இன்றியமையாதவாகிவிட்டன.

இன்று உலகமயமாக்கலின் விளைவாக உலகம் கிராமமாக சுருங்கி உள்ளங்கையில் வந்த நிலையில் நவீன தொழிநுட்ப வளர்ச்சியின் பேறாக கணணி, கையடக்கத்தொலைபேசி, பேஸ்புக், இன்ரநெற், ஈமெயில் இணையத் தளங்கள் ருவிற்றர் என நவீன ஊடகங்களின் சேவையையும் செயற்பாடுகளும் அளப்பரியன.

நவீன தொடர்பாடல் ஊடகங்கள் மக்களின் தொடர்பாடலுக்கு மட்டுமல்ல சமூக மாற்றத்திற்கும் அளப்பரிய பங்காற்றுகின்றன. இன்றைய தகவல் தொழிநுட்பத்துடன் கூடிய அறிவு யுகத்திலே பல புதிய கோட்பாடுகள் அணுகு முறைகள் கண்டுபிடிப்புக்கள் என்ற வழியில் நவீன தொடர்பாடல் ஊடகங்கள் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன.

அனைத்து சமூக உறவுகளையும் தன்னகத்தே கொண்ட ஒருபிணைப்பு சமூகம் எனக் குறிப்பிடலாம். பொதுவாக ஒவ்வொரு சமூகத்திலும் குடும்பக் குழு, கல்விக்குழு, சமயக்குழு, அரசியல் குழு, பொருளாதாரக் குழு என ஆறவகையான குழுக்கள் காணப்படுகின்றன.

தேவைகளை நிறைவேற்றும் இக்குழுக்கள் இணைந்து செயற்படும் போதே சமூகம் ஒரு அமைப்பாக பயனுறு வகையில் உருவாகின்றது. ஒவ்வொரு சமூகமும் தனயலகாக காணப்படுகின்றது. அச் சமூகத்தினின் பண்பாடும் எல்லைகளையு டைய அதன் இயப்பகுதியும் அச் சமூகத்தின் ஒற்றுமையுணர்வையும் கூட்டு வாழ்க்கையையும் பிற சமூகங்களிலிருந்து பிரித்துக் காட்டுகின்றன.

அந்த வகையில் பண்பாட்டுப் பாரம்பரியங்களின் பொக்கி'மாக திகழும் சமூகங்களில் இன்று நவீன தொடர்பு சாதனங்களில் பங்களிப்பு அதிகமாக காணப்படுகிறது. மனிதனின் சமூக உறவுகளில் இருந்து தேற்றம் பெறும் சமூகமானது உறவுகளை நிலைப்படுத்தி முறைப்படுத்தி தங்களுக்குள் ஓர் அமைப்பாக உருவாக்கம் பெற தொடர்பாடல் மிகவும் இன்றியமையாதது.

தொடர்பாடல் மனிதனின் இயக்கத்திற்கான உந்து விசையாக அமைகின்றது. சமூக நிலைப்பட்டின் அத்திவசிய அங்கமாகவும் ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு மூலதனமாகவும் தொடர்பாடல் பெரும் பங்காற்றுகின்றது.

கற்றல் - கற்பித்தலின் நவீன ஊடகங்களின் பயன்பாடு கற்பித்தலில் இருந்து பிரிக்க முடியாத ஒன்றாகிவிட்டது. தகவல் தொழிநுட்ப வளர்ச்சி தொடர்பு சாதனங்களில் வருகையை அபரிதமாக்கியதுடன் மாணவர்கின் கற்றலையும் வினைத்திறனாக்கி உள்ளன.

"கேட்கின்றேன் மறந்துவிடுகின்றேன்
பார்க்கின்றேன் ஞாபகத்தில் வைத்திருக்கின்றேன்
செய்கின்றேன் அனுபவம் பெறுகின்றேன்"

என்பதற்கிணங்க தகவல் தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்தி கற்பிக்கும் போது அவ்விடயம் மாணவர்கின் உள்ளத்தில் ஆழப் பதிந்து கற்றலை வினைத்திறனாக்குகின்றது.

ஒரு சமூகத்தின் உயர்விற்கு நவீன ஊடகங்களின் வருகையும் பங்களிப்பும் உந்து சக்தியாக விளங்குகின்றன தக்கவற்றை ஏற்றும் தகாதவற்றை தவிர்த்தும் செயற்படும் போது மாணவரின் கற்றல் பயன்மிக்கதாக அமையும்.

பிரசாதமாக அமைகிறது. மற்றவர்களுக்கு எந்தவித இடையூறுமின்றி தகவல் அனுப்ப முடிகின்றது. பல்வேறு வசதிகள் கொண்டமைந்த தொலை பேசிகள் மாணவர்களின் பொது அறிவினை விரித்து உடனுக்குடன் உலக நடைமுறைகள் அறிதல் - ஆளுமை வளர்ச்சி என்பவற்றிற்கு இன்றியமையாதன இவற்றை நல்வழியில் பயன்படுத்துவதே இதன் வெற்றிக்குக் காரணம்.

*** இணையத்தளம்**

இன்று கல்விசார் செயற்பாடுகளில் கரு ஆழமாக இனையத்தளம் மிளிர்கின்றது. பண்டைய தகவில் முதல் நவீன செல் நெறிவரை தகவல்களை உடனுக்குடன் பெற்று மாணவர்கள் பயன்படுத்துகின்றனர். அதிக விலை கொடுத்து வாங்க முடியாத புத்தகங்களை கூட இணையத்தளங்களினூடாக வாசித்து கவ்விப் பயனைப் பெறுகின்றனர். மாணவர்கள தமக்குப் பொருத்தமான கற்கை நெறிகளை தெரிவு செய்யும் இவை வழிகாட்டுகின்றன. இணையத தளத்தின் மூலம் சமூகத்தில் தலைவிரித்தாடும் சமூக சீர்கேடுகளை அறிய முடிகின்றது.

*** மின்னஞ்சல் (ஈமெயில்)**

செலவில்லாதமும் அதிக வேகமாக ஏனையோருடன் தொடர்பு கொள்ள கூடியதுமான ஒரு தகவல் பரிமாற்ற சாதனம் மாணவர்கள் மின்னஞ்சலை பயன் படுத்தி கல்வி தொடர்பான தகவல்களை பரிமாறிக் கொள்ளமுடியும். இன்று மின்னஞ்லக்கு செல்லாமலே சமூகத தளங்களுக்கு கொண்டு செல்லும் அளவிற்கு வளர்ச்சி வேகம் அதிமாகிவிடும்.

*** முகப்புத்தகம் (பேஸ்புக்)**

தமது எண்ணங்களையும் கருத்துக்களையும் பகிர்ந்து கொள் வதற்கு அதிக பாவணையாளர்களினால் பயன்படுத்தப்படும் சமூக வலைத்தளம் இதுவாகும். அதிகளவு சொற்களைப் பயன்படுத்தி தகவல் பரிமாற்றப்படுவதால் சொற் களஞ்சிய விருத்தி ஏற்படுகிறது. இதனால் கல்வி தொடர்பான ஊக்குவிப்புக்களும் கிடைக்கின்றன.

**கற்றலில் நவீன ஊடகங்களின் நன்மைகள்**

* சிறந்த கற்றல் வாய்ப்பை வழங்குதல்
* மாணவர்களின் தேடியறியும் ஆற்றலும் சிந்தனைத் திறனும் விரிவடையும்
* விடயங்களை பதிவிறக்கம் செய்யலாம்
* தகவல்களை உடனுக்குடன் அறிந்து இற்றைப்படுத்த முடியும்
* நேரில் நின்று உரையாடுவது போல் உரையாடும் சந்தர்ப்பம்
* மொழிக்களஞ்சிய வளர்ச்சி
* சமூக மாற்றத்தை ஏற்படுத்தலாம்.
* உறவுப்பிணைப்பு அதிகமாகும்
* பல்லின சமூகத்தில் ஒற்றுமையும் விழுமியமும் பேணல்
* மொழித்திறன் விருத்தி / பிறமொழிகளில் பரீட்சயம்
* மன அமைதியும் வளர்த்தல்
* சிறந்த பொழுது போக்கு
* சமநிலை ஆளமை அதிகரிக்கும்

நவீன ஊடகங்களின் பயன்பாடு தேர்ச்சிமிக்க நாட்டிற்கும் வீட்டிற்கும் பொருத் தப்பாடுடைய சமநிலை ஆளமையுடைய மாணவனின் உருவாக்கத்திற்கு உதவு கின்றன அதுமட்டுமல்ல சமூக மாற்றத்திற்கும் முக்கிய காரணியாக உள்ளன.

**நவீன ஊடகங்களின் பயன்பாடு**

*** கையடக்கத்தொலைபேசி**

அதிக செலவில்லாமல் குறுந்தகவல்களை அனுப்ப பயன்படுகின்றது. கல்விசார் நோக்கத்திற்காக அனுப்பப்படும் தகவல்கள் மிகப் பெறுமதியானவை. குறுந்தகவல் மாணவனின் சொற்களஞ்சிய விருத்திக்குத் தடையாக உள்ளதாகக் கருத்தப்பட்டாலும் அந்தக் குறுந்தகல்களை பிள்ளை சிந்தனை கற்பனைத்திறன் ஆக்கத்திறன் வெளிப்பாட்டிற்குப் பயன்படுத்த முடியும். அந்தக் குறுந்தகவலின் சுருக்கத்தை நீண்ட வசனத்தில் எழுத முடியும் அத்துடன் சர்வதேச மொழியும் வளர்ச்சிக்கும் வரும்.

* ருவிற்றர்

சிறந்த நவீன ஊடகங்களின் ஒன்றாகும். மாணவர் தமது நண்பர்களுடன் இலகுவாக கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் நட்பினை பரிமாறிக் கொள்ளவும் உதவுகிறது எவ்வளவு முக்கியமான கருத்தாக இருந்தாலும் மிகவும் குறுகிய சொற்களுக்குள் எழுதிவிட வேண்டும் என்கின்ற நிலையை கொண்டுள்ள தளம் ருவிற்றர் ஆகும்.

தொடர்பூடங்கள் சாதகமான அம்சங்களை கொண்டிருந்தாலும் பாதகமான நிலமைகளும் இருக்கத்தான் செய்கின்றன. பிள்ளைகள் இணையத்தளத்தில் இணைந்திருக்கும் போது பெற்றோரின் இதயத்தளங்கள் சுக்கு நூறகின்றன. என்பது பல பெற்றோரின் ஆதங்கமாக காணப்படுகின்றது. ஊடகங்களை தவறாக பயன்படுத்துவதன் மூலம் பிள்ளைகளின் தேவையற்ற உணச்சிகள் தூண்டப்படு வதன் மூலம் சிறுவர்களின் தேவையற்ற விதத்தில் பிரயோகங்களிற்கும் ஆளாகின்றனர்.

**நவீன ஊடகங்களினால் ஏற்படும் பாதக விளைவுகள்**

* சமூக விழுமியங்கள் கலாசார அம்சங்கள் சிதைக்கப்படல்
* ஊடகங்களுக்கு அடிமைப்பட்ட சமூகம் உருவாதல்
* பூகோள தொடர்புகள் கலாசார ஆக்கிரமிப்புக்கள் ஏற்படல்
* வன்முறைகள் தூண்டப்படல்
* சுயமாக சிந்திக்கும் ஆற்றல் குறைவடையும்
* உறவுப் பிணைப்புக்கள் குறைந்து செல்லல்
* தரக்குறைவான உணச்சிகளுக்குள்ளாதால்
* கல்வி அடைவுமட்டம் குறைதல்
* வயதிற்குப் பொருத்தமற்ற நடத்தைகள்
* தொடச்சியான பாவணையில் நோய்களிற்கு ஆளாதல்
* வாழ்க்கை செலவு அதிகரித்தல்
* உடல்உளரீதியானபாதிப்பு

ஊடகங்களின் சமூக நோக்கை கொண்டிருந்தாலும் இன்றைய இளைஞர் தலைமுறையினரின் கண்மூடித்தனமான செயற்பாடுகளினாலும் பொருத்தமற்ற நடத்தை பாங்குகளினாலும் பாரிய பிரச்சினைகள் ஏற்படுவது நாம் அறிந்ததே இன்று சமூக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

மனித இயந்திரங்களிடம் மூளையை ஒப்படைத்து விட்டு மிருகமாக மாறிக் கொண்டிருக்கின்றான். எனவே நாம் ஊடகங்களை எமது தேவைக்கேற்ப ஆக்க பூர்வமாக செயற்பாடுகளிற்கு திட்டமிட்டு செயற்படுத்து வோமானால் மனித சமூகம் மாணவ சமூகம் முன்னேற்றமான பாதையை நோக்கி வீறு நடை போடும் என்பதில் எந்த ஐயமுமில்லை.

**திரு க.கி அம்பிக்குமார் [ஆசிரியர்]**
யா/ஞானசாரியார் கல்லூரி
கரவெட்டி.

# பாடசாலை அபிவிருத்திக்குழு 2014 - 2015



# நுண்கலை மன்றம்





# ஏப்ரல் 29. உலக நடன தினமாகும்

இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் நடனக்கலை பெற்ற ஒரு கலையாகவும், சில சந்தர்ப்பங்களில் தெய்வீகத் தன்மை கொண்ட ஒரு கலையாகவும் விளங்குகின்ற போதிலும் கூட உலக நடனதினம் என்ற அடிப்படையில் ஏனைய உலக தினங்களைப் போல இத்தினம் ஒரு முக்கியத்துவம் பெற்ற தினமாக அனுட்டிக்கப்படுவதில்லை. உலக தினம் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் 29ஆம் தேதி சர்வதேசரீதியில் கொண்டாடப் படுகிறது.

நடனம் எனும் போது நாட்டுக்கு நாடு, பிரதேசத்துக்கு பிரதேசம் வேறுபடுவதை அவதானிக்கலாம். உதாரணமாக பரதம் தென்னிந்தியாவுக்குரிய, குறிப்பாக தமிழ்நாட்டுக்குரிய நடனமாகக் கருதப்படுகின்றது. பரத முனிவரால் உண்டாக்கப்பட்டதனால் "பரதம்" என்ற பெயர் வந்ததாகக் கூறுவர். இதில் பாவம் உணர்ச்சியையும்,ராகம் இசையையும் குறிக்கும்.இவற்றுடன் தாளம் சேர்ந்த நடனம் தான் பரத நாட்டியம்.

பொது மக்களிடையே நடனத்தின் முக்கியத்துவம் பற்றிய அறிவினை அதிகரிக்கச் செய்வதுடன் ஒவ்வொரு நாடுகளிலுமுள்ள அரசாங்கங்கள் நடனத்திற்குரிய முக்கியத்துவத்தை உணர்ந்து செயற்பட வேண்டும். என்பதுடன் முறையான நடனக்கல்வியை நாடுகளின் ஆரம்பக்கல்வியிலிருந்து உயர்கல்வி வரை வழங்குவதற்குத் தூண்டுவதும் அவற்றின் அவசியத்தை வலியுறுத்தவும் சர்வதேச நடன தினத்தின் முக்கிய இலக்காகும்.

1982ஆம் ஆண்டு யுனெஸ்கோ நிறுவனத்தின் கலாசார ஊக்குவிப்பின் கீழ் சர்வதேச நடன சபை ஏற்படுத்தப்பட்டது. இச் சபையின் மூலமாகவே உலக நடன தின ஏற்பாடுகள் 2003 ஆம் ஆண்டிலிருந்து முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. 2003 ஆம் ஆண்டு நடன தினம் பற்றிய செய்தியை வெளியிட்ட சர்வதேச நடன சபையின் தலைவர் பேராசிரியர் அல்கீஸ் ராப்டிஸ் அவர்கள் "உலகிலுள்ள இருநூறு நாடுகளில்நடனத்திற்கு சட்டரீதியான அந்தஸ்து வழங்கப்பட்டிருப்பதாக தெரியவில்லை. பொதுவாக அரசாங் கங்கள் வரவு செலவு திட்டத்தில் நடனக்கலையை ஊக்குவிக்கும் வகையில் எத்தகைய நிதி ஒதுக்கீடுகளையும் செய்யப்படுவதுமில்லை. மேலும் தனிப்பட்ட அல்லது நிறுவன ரீதியான நடனக்கல்விக்கு அரச நிதி உதவிகள் கிடைப்பதில்லை என்றார்.

2005 ஆம்ஆண்டில் நடன தினத்தின் கவனம் ஆரம்பக் கல்வியின் ஊடாக நடனத்தைப் போதிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது. தனிப்பட்ட

நடனப்பயிற்சியாளர்கள்,நடன நிறுவனங்கள் தமது பிரேரணைகளுடன் தத்தமது நாடுகளின் கல்வி கலாசார அமைச்சுகளை தொடர்பு கொண்டு பாடசாலைகளில் நடன தின விழாவைக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்றும் நடனம் பற்றிய கட்டுரைகள் எழுதுதல், நடனம் பற்றிய புகைப்படங்களை காட்சிப்படுத்தல், வீதி நடனங்கள்போன்றவற்றை ஏற்பாடு செய்தல். நடனம் பற்றிய கருத்தரங்குகள் சொற்பொழிவுகளை ஏற்பாடு செய்தல் போன்றன இத்தினத்தில் எதிர்பார்க்கப்பட்டது.

2006ம் ஆண்டில் சர்வதேச நடன சபையின் தலைவர் தனது நடன தின உரையில் குறிப்பிட்ட விடயம் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. அதாவது நடனக் கலையில் ஈடுபட்டுள்ள கலைஞர்கள் நிறுவன ரீதியில் ஒன்றுபடாமையும் இது விடயமாக அக்கறை செலுத்தாமல் இருப்பதுமே சர்வதேச ரீதியில் நடனக் கலை அங்கிகரிக்கப்படாமைக்கான காரணங்கள் என்றும் இதற்காக நடனக்கலைஞர்கள் அனைவரும் ஒன்று பட வேண்டுமென அழைப்பு விடுத்திருந்தார். 2007ம் ஆண்டில் நடன தினம் பிள்ளைகளுக்காக அர்ப்பணிக்கப் பட்டது. 2008ம் ஆண்டில் நடன தினத்தின் போது மேற்குறித்த விடயங்களை சுட்டிக்கட்டி அரசாங்கங்களும், அனுசரனையாளர்களும், ஊடகங்களும் இது விடயமாக ஈடுபட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

நடனதினத்துடன் இணைந்த வகையில் இது விடயமாக விழிப்புணர்ச்சியை ஏற்படுத்து முகமாக ஐக்கிய அமெரிக்காவில் தேசிய நடன நிகழ்ச்சிகளை நடத்தி நடனத்திற்கு முறையான அங்கிகாரத்தப் பெறுவதற்காக வேண்டி நடனங்கள் தொடர்பான ஒரு நிறுவனம் தேசிய நடன வாரத்திற்கான கூட்டு ஒன்றிய மொன்றினை உருவாக்கியுள்ளனர். இந்திய இலங்கை போன்ற நாடுகளில் வாழும் நடனக் கலைஞர்கள், நடன அமைப்புகள் இவ்விடயத்தை கவனத்தில் கொள் வார்கள் என எதிர்பார்க்கலாம்.

**திருமதி. மகாசாந்தி திரிபுவனநாதன்**
**ஆசிரியர் (நடனம்)**

* ஒருவனுக்கு நீ செய்த உதவிகளை அவனிடம் அடிக்கடி நினைவூட்டிக் கொண்டிருப்பது அவனைப் பழிப்பது போலாகும்.
* சோம்பலும் சோர்வு கொண்டு நூறு ஆண்டு வாழ்வதை விட ஒரு நாள் பெருமுயற்சியோடு வாழ்வது மேலானது.
* பண்பில்லாத நண்பனை விட பண்புள்ள பகைவன் மேலானவன்.
* துன்பம் இல்லாமல் இன்பத்தை அடைந்தவனுக்கு அவனடைந்த இன்பமே ஒரு நாள் துன்பமாகும்.

# ஆரம்பக்கல்வி பற்றிய நோக்கு

"இளமையில் கல்வி சிலையில் எழுத்து"

என்பதற்கு இணங்கநாட்டினுடைய வளமான எதிர்காலம் மாணவர்களுக்கு அளிக்கப்படும் ஆரம்பக் கல்வியிலேயே தங்கியுள்ளது. ஆரம்பக் கல்வியானது அறிவுத் தேடலை மட்டும் கொள்ளாது சிறந்த விழுமியங்களை மாணவர் மத்தியில் வளர்ப்பதாக அமையவேண்டும். இன்றையஆரம்பக்கல்வி அமைப்பிலே மனித விழுமியங்கள். பற்றிய சிந்தனைகள் பல்வேறு மட்டத்திலும் பல்வேறு சிந்தனையாளர்களால் முன் வைக்கப் பட்டுள்ளன.

மாணவர்களின் அடிப்படைத் திறமையை வளர்க்கவும் அவர்கள்சிறந்த முறையில் கற்பதற்கும்ஆரம்பகல்விஅத்திவாரமிடுகின்றது. மேலும் மாணவர்களின் திறமைகளை வளர்ப்பதில் ஆரம்பக்கல்விஆசிரியர்களின் பங்கு முக்கிய இடத்தைப் பெறுகின்றது. இத்தகைய ஆரம்பக்கல்வியானதுமாணவர்களைநன்கு ஊக்குவித்து அவர்களிடம் இருக்கும் எல்லாத்திறமைகளையும் வெளிக் கொணர்ந்து அவர்களைக் கல்வித்து துறையில் சிறந்தவொரு மாணவர்களாக ஆக்குவதற்கு ஆரம்பக் கல்வி ஆசிரியர்களின் பங்கு முக்கியமானதாகும்.

ஆரம்பக் கல்வி மாணவர்களுக்குப் பாடசாலையானது வீடு மாதிரியும் பாதுகாப்பாக வீட்டில் இருப்பது போன்ற உணர்வையும் ஏற்படுத்த வேண்டும் மேலும் பாடசாலை என்றாலே பயம் மற்றும் கவலை இல்லாத இடம் என்பதை மாணவர் மனதில் உருவாக்க வேண்டும். மாணவர்கள் சூழ்நிலையைப் புரிந்து கொண்டு வீட்டிலிருப்பது போன்ற பாதுகாப்பான உணர்வை உணரும் போது கற்பதில் சிறந்து விளங்குகின்றனர்.

இன்றைய சிறுவர் நாளைய தலைவர் என்பதற்கிணங்க ஆரம்பத்திலேயே மாணவர்களை சிறந்த ஆற்றலுடையவராக்கும் பொறுப்பு ஆரம்பக் கல்வி ஆசிரியர்க ளையே சாரும் அவர்களுக்கு வகுப்பில் பயிலும் ஒவ்வொரு மாணவர்களினதும் சொந்த விடயங்கள், பாடசாலையில் அவர்கள் எவ்வாறு கற்கின்றனர் என்பன பற்றியும் அறிந்திருத்தல் அவசியமாகும்.

மாணவர்களுக்கு இளமையிலேயே நல்ல முறையில் வழிகாட்டி தெளிவாக விளக்கினால் புதிய சூழ்நிலையில் ஏதேனும் பிரச்சனைகள் ஏற்பட்டால் அவர்கள் தாங்களாகவே புரிந்து கொண்டு செயற்பட முடியும் "வருமுன் காப்பது நன்று என்பது போல மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்கு ஏற்ப சூழ்நிலை இருந்தால் மாணவர்களின் உடலும் நலமும் நல்ல ஆரோக்கியத்துடன் இருந்து செயற்பட உதவியாக இருக்கும்.

ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கு "தொட்டில் பழக்கம் சுடு காடுமட்டும் " என்ற பழமொழிக்கேற்ப சிறு வயதிலிருந்தே நல்லபழக்கவழக்கங்களைப் போதிக்க வேண்டும். மனித வாழ்க்கைக்கு உறுதுணையாக அமைவது தூய நற் கல்வியே" என்று திருமூலர் கூறியுள்ளார். ஆகவே ஆரம்பக் கல்விசிறப்பாக அமைகின்றபோது பலவிடயங்கள் மாணவர் மனதில் பசுமரத்தாணி போல இலகுவில் பதிந்துவிடுகின்றன இதன்மூலம் நற்குணங்கள் ஏற்படுகின்றது.

ஆரம்பக்கல்வி கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஆசிரியர்களின் நடிபாங்கு முக்கிய இடத்தைப் பெறுகின்றது. தற்போதைய புதிய கல்விச்சீர் திருத்த நடைமுறையின் படி

ஆசிரியர்கள் கற்பித்தலின் போது பாடச் செயல் முறைக்கு அமைவாக தன்னை உருவாக்குதல் வேண்டும் என்பது கட்டாயமாகின்றது இதனால் ஆசிரியர்கள் தங்கள் நடிப்புத் திறனைச் சீராக அமைந்தது ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கு வழிகாட்டியாக செயற்பட வேண்டும். ஆரம்பக்கல்வி மாணவர்கள் மகிழ்ச்சியான முறையில் கற்றலில் ஈடுபட நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும் இத் திறமை ஆசிரியருக்கு பாட சாலையிலோ வகுப்பறையிலோ மிகவும் முக்கியம் ஆகும். இதற்கமைய ஆசிரியர்களின் முகத்தின் வெளிப்பாடு இயற்கையாகவும் சிரித்த முகத்துடனும் இருத்தல் நன்று.

பொருத்தமான முகபாவனையைப் போணுவோமானால் மாணவர் மனங்களைக் கவர்ந்து கற்றலைமிகவும் இலகுபடுத்திக் கொள்ளலாம்.

கற்பித்தலில் மொழித் தொடர் பாடல் முக்கிய இடத்தைப் பெறுகின்றது மொழித் தொடர்பாடலானதுபொருத்தமாகவும்தெளிவாகவும் இருக்க வேண்டும் பல்வேறு வகைப் பட்ட சூழலில் இருந்தும் மனநெருக்கடிகளுடனும் பாடசாலைக்கு வரும் மாணவர்களை இனிமையான சொற்களை பேசிக் கவருதல் வேண்டும்.

ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் கற்பித்தலில் ஈடு படும் போது நடித்துக் காட்டுதல், செய்து காட்டுதல்,மாதிரிகளைக் காட்டுதல் போன்ற உத்திகளைக் கையாலுதல் வேண்டும் சிந்தனையாற்றலைத் தூண்டக்கூடிய வினாக்களைக் கேட்க வேண்டும் மன்றங்களை அமைத்து நிகழ்வுகளை வழங்க ஆர்வமூட்டவேண்டும் இச்செயற்பாடு மூலம் மாணவர்களின் கலைத்திறமையை வளர்க்ககூடியதாக இருக்கிறது.

ஆரம்பக்கல்வி மாணவர்களை விளையாட்டுக்களில் ஈடுபடுவதன் மூலம் சிறந்த உடல் நலம் உள்ளவராகின்றனர். விளையாட்டுக்களில் ஈடுபடுவதன் மூலம் பொறுப்புக் களைப் பகிர்தல், சமத்துவம், சகோதரத்துவம்,வெற்றி தோல்விகளைச் சமமாக மதிக்கும் தன்மை போன்ற பண்புகள் ஏற்படுகின்றன.

ஆரம்பத்திலேயே மாணவர்கள் விளையாட்டுக்களில் ஈடுபடுவதால் உடல்வலு அதிகரிக்கப்படுகின்றது. அதோடு உளவளத்தையும் மாணவர் பெறுகின்றனர்.சிறந்தொரு பொழுதுபோக்காகவும் விளையாட்டுக்கள் அமைந்து விடுகின்றன. சிறந்தொரு பொழுதுபோக்காகவும் விளையாட்டுக்கள் அமைத்து விடுகின்றன.

ஆரம்பக்கல்வி மாணவர்களிடையே வாசிப்புத் திறனை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் சிறுவர் பாடல்கள், கதைகள் என்பவற்றை வாசிக்க ஊக்குவிக்க வேண்டும் இதன் மூலம் மாணவர்கள் எதிர்காலத்தில் சிறந்த எழுத்தாளர்களாக உருவாக வழி வகுக்கின்றது. அதனால் ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கு நூலகப் பயன்பாட்டை ஏற்படுத்திக் கொடுத்தல் ஆசிரியர்களின் தலையாய கடமையாகும்.

காலத்தின் தேவைக்கேற்ப மாணவர்களுக்கு கணினிக்கல்வி, ஆங்கில அறிவு என்பனவும் அவசியமாகின்றது. இவற்றை ஆரம்பத்திலே வழங்க வேண்டும் இதன் மூலம் மாணவர்களின் எதிர்காலத்தில் வேலை வாய்ப்பை இலகுவாகப் பெற முடியும்.

மேற்கூறப்பட்ட விடயங்களை ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் பின்பற்றினால் மாணவர் மனங்களைக் கவர்ந்து கற்றலில் முழுமையாக ஈடுபடவைக்கலாம். கற்பித்தல் செயல் முறையை வெற்றியுடன் இட்டுச் செல்வதுடன் மாணவர்களாலும் பாடசாலைச் சமூகத்தாலும் விரும்பக் கூடிய ஒருவராக தன்னை ஆக்கிக் கொள்ளலாம் என்பது உறுதி ஆகும்.

**செல்வி விமலாதேவி வல்லிபுரம்**
**ஆசிரியர்**



# பள்ளிச் சுவடுகளின் மறக்கவொண்ணா நினைவலைகள்

வடமாராட்சிப் பதி தனிலே
வளம் நிறைந்த ஊர் நடுவே
வயல் வெளியின் சூழலிலே
வணங்கி நிற்கும் ஆலயமாம்

ஆலயத்தின் அருகினிலே
அரும் பெரும் பொக்கிஷமாய்
அறிவொளிகளை அள்ளித் தந்திடும்
அருட்பேராலயம் எம் கல்லூரி

ஞானவைரவர் ஆசியுடன்
ஞானத்தை அள்ளித்தந்திடும்
ஞானாசாரியர் எனும் பெயருடன்
ஞாலம் போற்றிடும் கல்லூரி

எம் கல்லூரியில் நான் பெற்ற
என் இனிய நினைவுகளை
எண்ணிப் பார்க்கையிலே மனது
எனை மறந்து மகிழ்கின்றது

ஆண்டு ஒன்று தொடக்கம்
ஆண்டு பதின்மூன்றுவரை
ஆட்சி செய்து நாம் கல்லூரியில்
ஆண்டு வந்த காலமது

பள்ளிப் படிப்பினைப்
பக்குவமாய் எமக்களித்து
பாரினிலே உயரச் செய்த
பண்பில் உயர் ஆசான்கள்

கல்விச் செயற்பாடுகளில்
கண்ணும் கருத்துமாய்
கல்வி கற்கும் மாணவர்க்கு
கருத்துரைகள் வழங்கிடுவார்

கண்டிப்புடன் அன்பும்
கலந்தே எமக்களித்த
கண்கண்ட ஆசான்கள்
கண்முன்னே நின்றுலாவ

கல்விக் கூட மதில்
கல்வி மட்டு மல்லாது
கலைகள் பலவும் தந்ததுவே
கலைமகள் மகிழ்ந்திடவே

நவராத்திரி காலமெனில்
நயப்புடனே நாமெல்லாம்
நாடி நிற்போம் கலைத்தாயை
நனி கூர்ந்து அக மகிழ்வோம்

இணைப் பாடமாம் விளையாட்டு
இணைந்திடுவோம் நாமெல்லாம்
இல்லங்கள் முன்வர வேண்டி
இங்கிதமாய் ஆடிடுவோம்

விளையாட்டுப் போட்டியென்றால்
வீட்டினை மறந்திடுவோம்
விடியல் மாலைப் பொழுதினிலே
விரைந்திடுவோம் பயிற்சிக்காய்

ஆசிரியர் வீட்டினிலே
அணி திரண்டு நாமெல்லாம்
ஆர்வத்துடன் பயிற்சி பெற்று
அள்ளிடுவோம் புள்ளிகளை

குழுக்கள் ஒன்று சேர்ந்து
கும்மாளமிட்டு குழறுபடி செய்த
குறும்புச் செயல்களால் நாம்
குறுகி நின்ற வேளையுண்டு

பள்ளிக் காலம் முடிந்து -எம்
பாடசாலை சென்ற நாள்
பயிற்சிக் காலமானது இங்கே
பதவி வாய்ப்பும் வந்தது

ஆசிரிய பதவி தனை
அகமகிழ்ந்து ஏற்றும் எம்
ஆசான்கள் அணி சூழ்ந்த
அரும் கூடமதில் கால் பதித்தே

ஆசிரியர்க்கு வேண்டிய
அரும் பெரும் கடமைகளை -எம்
ஆசான்களிடமிருந்தே பெற்று
அவனியிலே நான் மிளிர

மாணவியாய் ஆசானாய்
மாண்புடனே நிமிர்ந்து நிற்க
மாநிலத்தில் வழி சமைத்த
மாண்புக்குரிய கல்லூரி

பல்கலை வல்லுனர்களை
பண்புடனே வளர்த்ததுவே
பண்டு தொட்டு இன்று வரை
பறை சாற்றிப் பகிர்ந்திடவே

என் வாழ்வின் பெரும் பங்கு
என் சுவடு பதிந்த கல்லூரி
என் இனிய கல்லூரி
என்றென்றும் வாழியவே...!

**திருமதி.கலாவதி இளங்கீரன்**



# எனது நினைவில்
# ஞானாசாரியரின் நிழல்கள்

பெற்றோரும் உற்றோரும் கற்று அமுதவிழாக் காணும் அன்னைக்கு வாழ்த்துக்களை உளமாரக் கூறுவதில் பெரும் உவகை அடைகிறேன். தரம் ஒன்று முதல் உயர்தரம் வரை எழுத்தறிவித்தது முதல் ஆசிரியர் பணிக்கு அத்திவாரம் இட்டது.ஈறாக நான் அறிந்த ஒரே கல்லூரி இது மட்டுமே. என்போன்ற எத்தனை ஆயிரம் மாணவர்கள் ஆண்டு ஐந்து வரையோ,க.பொ.த (சா.த) வரையோ இங்கு கற்று நகர்ப்புறக் கல்லூரிகளில் உயர்தரம் பயின்று நாட்டின் வெவ்வேறு பகுதிகளிலும் வெளிநாடுகளிலும் உயர் பதவிகளை அலங்கரித்துக் கொண்டு இருப்பதை அனைவரும் அறிவர்.(1969-1982வரை) நான் கற்ற காலம் எமக்குப் பொற் காலம் எனலாம். கல்வி மட்டுமன்றி அறுபத்து நான்கு கலைகளில் பல கலைகள் பயிற்றப்பட்ட காலம். மரவேலை, கைப்பணி, சித்திரம், பன்னவேலை, நெசவு என்றவாறு பல்வேறு தொழில் முறைப் பாடங்கள் செயல்முறையாகக் கற்பிக்கப்பட்டது. அதன் மூலம் மாணவர்கள் சகல துறைகளிலும் ஆற்றல் மிக்கவர்களாகி சமுதாயத்திற்கும் தமது ஆற்றல்களைப் பகிர்ந்துள்ளமையைக் குறிப்பிடலாம். அந்த வகையில் செல்வி பவாணி ஆள்வாப் பிள்ளை அவர்களின் மும்முக தையற் கலை,சமையற்கலசம் எனும் நூல்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சமையலிலும் தையலிலும் வழிகாட்டியாய் விளங்குகின்றது. அதே போல் சங்கீதம், நடனம், தையல், போன்றவற்றில் மாணவர்களின் திறன்களை வளர்ப்பதிலும். மேடையேற்றுவதிலும் பெரும்பணியாற்றிய திருமதி.சரஸ்வதி முத்துத்தம்பி அவர்களை நாம் என்றும் நினைவு கூர்ந்து போற்றுகின்றோம். பறந்தான். பத்தாயிரம் புகழ் அரியாலையூர் நடராஜா ஆசிரியர் இங்கு குறிப்பிடத்தக்கவர்.

ஆங்கிலம் என்றவுடன் வின்ஸ்லோ ரீச்சர்,ராஜேஸ்ரீச்சர்,இராசையா ரீச்சர், கந்தையா சேர் எனப் பலர் பல விதமான செயற்பாடுகள் மூலம் மனக்கண் முன் தோன்றுவர் ஆங்கிலத்தில் கிராமப்புறப் பாடசாலை மாணவர்கள் சளைத்தவர்கள் அல்லர் என்பதை ஆங்கில தினப் போட்டிகள் மூலம் நிரூபித்துக் காட்டியவர்கள்

வெள்ளியம்பலத்தில் ஆரம்பப்பிரிவு 1-3 வரையான வகுப்புக்களும் நூலகமாக அநுராதபுரம்.சுப்பையா அவர்களின் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட மண்டபத்தில் 4-5ம் வகுப்புக்களும் இரண்டு பிரிவுகளாகக் கற்பிக்கப்பட்டது. தற்போதைய சுவாமி அறையுடன் கூடிய மண்டபம் ஒரே மண்டபமாகக் காணப்பட்டமையால் நிகழ்வுகள் யாவற்றையும் எல்லா மாணவர்களும் அடங்கும் வகையில் அந்த இடத்தில் நடத்தப்பட்டு வந்தது எமது காலத்தில் புதிதாக மேடையுடன் கூடிய மண்டபம் அமைக்கப்பட்டது.

காலையில் வைரவர் கோயில் வாசலில் பாடசாலை மாணவர்களுக்குச் சத்துணவு என்ற ரீதியில் பால் வழங்கப்படும். இடைவேளைக்கு வழங்கும் பிஸ்கட்டைப் பெற்று அதனைக் கொடுத்து நாவற்பழம் வாங்கும் மாணவர்கள் எங்களில் பலர் பெரிய இடைவேளை, மாணவர்கள் பல்வேறு விளையாட்டுக்களில் ஈடுபடுவர். இவ்வாறு பாடசாலையில் கல்வி, விளையாட்டு, உணவு என நானாவித விடயங்களும் அன்று முதல் வழங்கப்பட்டது. எமது காலத்தில் இலவசப் புத்தகம் வழங்கும் திட்டம் காணப்பட்டாமை எம் போன்ற பல மாணவர்களுக்கும் மிகவும் கவலைக் குரிய விடயமாக இருந்தது அன்று காசு கொடுத்துப் புத்தகம் வாங்கிப் படிக்கும் மாணவர் 5% தை விடக் குறைவு ஆசிரியர்கள் கற்பிப்பதை கேட்டுக் கிரகித்து விளக்கிப் பரீட்சை எழுதுவது அந்தக் காலம்.

ஆரம்பப் பிரிவில் சிலேற்றில் எழுதிச் சரி வாங்கி ஒரு பாடம் முடிந்த பின் அடுத்த பாடமும் அதே சிலேற்றில் எழுதுவதும் அழிப்பதுமாகவே எமது கற்றல் நிறைவு பெறும் தற்போது மாணவர்கள் முதுகு வளையப் புத்தக மூட்டையைப் பாலர் வகுப்பிலேயே சுமக்கத் தொடங்கி விட்டனர். எனினும் பாடசாலைக் கல்வி,பரீட்சைகளிற்கு மாணவர்கள் மடிக் கணனிகளைப் பயன்படுத்தும் காலம் நெருங்கி விட்டது.

அக் காலத்து நம் ஆசான்களைப் பற்றிச் சிறிது சிந்தித்தால். உடற்பயிற்சி விளையாட்டுப் போட்டி என்றால் சிற்றம்பலம் சேர், இராஜேஸ் ரீச்சர் ஆகியோர் முழுமையான அர்ப்பணிப்புடன் வழி நடத்தி வந்ததுடன் பல பரிசில்களை பாடசாலை சுவீகரித்துக் கொள்ளும் வகையில் செயற்பட்டனர்.

ஆரம்பப் பிரிவினை உரமிட்டு வளர்க்க ஒரு குழு என்றே கூறக்கூடிய வகையில் பலர் அரும்பாடுபட்டிருந்தனர் சிவகுரு சேர்,சிதம்பரப்பிள்ளை சேர்,பூரணக்கா ரீச்சர்,பத்தின் ரீச்சர், தாமு ரீச்சர், வடிவேலு ரீச்சர் , மனோன்மணி ரீச்சர். ஒவ்வொருவரும் தாம் மற்றவர்களுக்கு சளைத்தவர்கள் இல்லை எனும் வகையில் பாசம், கண்டிப்பு, அர்ப்பணிப்பு, தியாகம் எனும் பண்புகளுடன் கற்பித்தமை இன்று எமது ஆசிரிய வாழ்வில் பின்பற்ற வேண்டிய கட்டாயத்தை எமக்கு உணர்த்துகிறது.

வீ.கே.நடராசா அதிபர் அவர்களை மறக்கமுடியுமா? அவர் இறப்பதற்கு இரண்டு வாரங்களிற்கு முன்பு தான் எழுதிய பண்டைய ஈழம் 1. 2, புத்தகங்களை எனது சகோதரன் மூலம் என்னிடம் கொடுக்கும்படி வழங்கியிருந்தார். அதனை நான் இன்று வரை ஒரு பொக்கிஷமாகவே பாதுகாத்து வைத்திருக்கின்றேன் அவ்வாறு அதிபர், ஆசிரியர்கள் மாணவர் மீது வைக்கும் கரிசனை மாணவர்கள் வாழ்வில் உயர்வு பெற வழி வகுக்கும் என்பதுடன் குருபக்தியையும் வளர்க்கும்

இவ்வாறு மாணவப் பருவத்தைக் கடந்து ஆசிரியர் பணியில் இணைந்து இரண்டாவது பாடசாலையாக எனது பாடசாலையில் ஆசிரியப் பணியாற்றும் வாய்ப்பை 1991.02.11 முதல் 2014.02.15 வரை பெற்றுக் கொண்டேன் . அது எனக்கு கிடைத்த வரப்பிரசாதம் என்றே கருதுகின்றேன் நான் கற்ற கல்லூரியில் தொடர்ந்து இருபத்து மூன்று ஆண்டுகள் ஆசிரியையாக இருந்த போது வைர விழா சிறப்பாக நடை பெற்றது அமுத விழாவின் போது இங்கு இருக்கக் கிடைக்க விட்டாலும் கல்லூரி தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் செல்ல அதிபர்,ஆசிரியர்கள்,பழைய மாணவர்கள், பெற்றோர்கள் நலன் விரும்பிகள் அனைவரையும் ஒன்றுபட்டு பாடுபடுவதன் மூலம் கல்லூரி பல நூறு ஆண்டுகள் பெருமையுடன் வளரும் வளர வேண்டும் எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணிற் பிறக்கையிலே அது நல்லவராவதும் தீயவர் ஆவதும் அன்னை வளர்ப்பினிலே .என்பது போல ஒவ்வொரு பெற்றோரும் பிள்ளைகளை நல்ல கல்லூரிகளில் சேர்த்தால் சரி என்ற நிலையை விட்டு பிள்ளைகளின் அன்றாட செயல் பழக்க வழக்கம் என்பவற்றில் கரிசனை காட்டி ,தாம் கற்ற கல்லூரியை மறந்து விடாது ஒற்றுமையாக செயற்பட்டால் பாடசாலையின் வெளியீடுகளை மிகத் தரமான தாக்க முடியும் என்பது எனது கருத்து

ஆசிரியப் பணியாற்றிய காலத்தில் எம்முடன் பணியாற்றி அமரத்துவம் அடைந்த ஆசிரிய சகோதரர்களின் பணிகளை இந் நாளில் அனைவரும் ஒரு கணம் போற்றுவோம்

வாழ்க எம் கல்லூரி, வளர்க எம் சமூகம் மருதடி வைரவரின் அருள் பெற்றுத் தொடரட்டும் கல்விப்பணி அதற்காக உழைக்கும் அதிபர் ஆசிரியர்களை வாழ்த்துகிறேன். புலம் பெயர் உறவுகளின் அர்ப்பணிப்பான சிந்தனையுடன் செயற்பட்டு வரும் ஒவ்வொரு உதவியும் மாணவர்களது கல்வியடைவுகளை மேம்படுத்தி பாடசாலையை வளப்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

**திருமதி பராநிதி. நவரட்ணம்**

**பழைய மாணவி, முன்னாள் ஆசிரியை,**

**பழைய மாணவர் சங்க, நிர்வாக உறுப்பினர்.**

# ஞானாசாரியர் கல்லூரி பற்றிய சில வரிகள்

கல்வி நிலை பாதிப்பு அடைந்திருந்த இடைக்காலமது. ஆங்காங்கே திண்ணைப் பள்ளிக் கூடங்கள் இலக்கணம் இலக்கியம் ஏனைய பாடங்களைக் கற்பித்துக் கொண்டிருந்தன. மேல் நாட்டவர்கள் ஆங்கிலம், கிறிஸ்தவம் போதிக்கும் நோக்குடன் பாடசாலைகளைக் கட்டி வளர்த்தனர். சைவமும் தமிழும் வளர வேண்டும் என்ற நோக்கில் ஆறுமுக நாவலர் போன்ற சிவநெறியாளர்கள் சைவப்பாடசாலைகளை நிறுவினர். எங்கள் முதாதையர் வல்லியானந்தம் பிள்ளையார் கோயிலடி கிறீஸ்தவப் பாடசாலையிலே கல்வி கற்றிருக்கின்றனர். (அமெரிக்கன் மிஷன்). சிலர் செல்லையா பள்ளிக்கூடம் (இன்றைய மத்திய மகளிர் கல்லூரி) என்னும் பாடசாலையில் கல்வி பயின்றுள்ளனர். இந்தச் சூழலில் உள்ள மாணவர் கல்விக்காகத் தூரம் செல்ல வேண்டிய சூழ்நிலை காணப்பட்டது. துன்னாலை மேற்குகிராமத்திலேயே திரு.வேலுப்பிள்ளை, ஆழ்வாப்பிள்ளை, திருவாளர் கந்தையா, திருமதி. கந்தையா பத்தினிப்பிள்ளை, திருவாளர். ஆறுமுகம் வல்லிபுரம், திருவாளர். இளையகுட்டியார் சின்னையா (பண்டிதர்) போன்ற பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் உருவாகினர். எங்கள் சூழலில் ஒரு பாடசாலை ஏன் அமைக்கக்கூடாது என்ற கேள்வி எல்லோர் மனதிலும் எழுந்தது, காணி நிலங்களும் வசதியாக அமைந்ததால் ஓலைக்கொட்டில்களுடன் 1935ஆம் ஆண்டு பாடசாலை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டது. (Hindu Board) இராசரத்தினமும் இதற்கு ஆதரவாக இருந்தார். ஆழ்வாப்பிள்ளை ஆசிரியர் எங்கள் சூழலிலே வாழ்ந்த காசிநாதர், மகாதேவ சுவாமிகள், இராமநாதன் ஆகிய சான்றோர் முன்னிலையில் அஸ்திவாரம் இடத்தீர்மானிக்கப்பட்டது. எல்லோரும் கல்விகற்க வசதியளிக்கப்படுமாயின் மட்டும்தான் கல்தூக்கி அத்திவரத்திற்கு வைப்பேன் என மகாதேவ சுவாமிகள் அன்று கூறினாரம். அதற்கு அமையவே அவர் அத்திவாரக் கல்தூக்கி வைத்தார். இந்தக் கல்லூரியின் வளர்ச்சி மிக விறுவிறுப்பானது. ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பத்தைந்தாம் அண்டு ஆரம்பித்த பாடசாலையில் 1940 ஆண்டே எஸ்.எஸ்.சி பரீட்சைக்கு ஐந்துபேர் தோற்றி திறமைச் சித்தி பெற்றனர்.


**பெயர் விபரம் வருமாறு**

1. கோனர் ஆழ்வார் குமரேசு
2. பொன்னர் கந்தசாமி
3. தம்பையா பொற்கொடி
4. சிவகாமி
5. பெயர் கிடைக்கவில்லை

இந்தக் கல்லூரி மாணவர்கள் குருபக்தியும் கல்லூரிப் பற்றும் உள்ளவர்கள். நற்பண்பினைக் கடைப்பிடிப்பவர்கள். மக்கள் நாடு விட்டு வெளியேறிய காரணத்தால் இன்று கிட்டத்தட்ட நானூறு மாணவர்களே கல்வி கற்கின்றனர். கல்விக்குரிய வளங்கள், இடவசதிகள் விளையாட்டு மைதானம் எல்லாம் வசதியாக அமைந்துள்ளது. நல்லாசிரியர்கள் போதியளவு கற்பித்துக் கொண்டிருக்கின்றனர். இருந்தும் மாணவர் தொகை குறைவாக யிருத்தல் கவலைக்குரிய விடயமாகும். க.பொ.த. பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் கிடைத்த போதும் மாணவர்கள் வேறு பாடசாலையை நாடுவது விரும்பத்தக்கதன்று. இங்கே கல்வி கற்றுப் பாடசாலைக்குப் பெருமை சேர்க்க வேண்டியது எம் சூழல் மாணவரின் கடமை கல்லூரி அன்று போல் என்றும் விளங்க ஆண்டவனைப் பிரார்த்திப்போம்.

**திருமதி வல்லிபுரம் பத்தினிப்பிள்ளை**
**ஓய்வு நிலை ஆசிரியை**

# உயர்தர மாணவர் மன்றம்



# தமிழ் மன்றம்



# மார்கழி அழகு

சுற்றிய போர்வை விலக
சுருக்கென்று குத்திய குளிர்
என்னைத் தட்டி விட எழுந்தேன்
அதிகாலை
வெளியே வந்த போது
அரவமற்றிருந்தது தெரு
கருப்புச் சேலை விரிப்பாய்
நீண்ட தார் வீதியில்...
என்னைப் போல் ஓரிருவர்
மார்கழி அழகு .......... " மகாலட்சுமி"

உண்மையை ஒப்புக் கொண்டாக வேண்டும்
சும்மா சொல்லக் கூடாது
மார்கழி மாதம் பேரழகு
எட்டு மணிவரை கட்டிலில் கிடப்பவனுக்கு
இந்த எழில் எப்படித் தெரியப்போகுது
கோவில் மணியடிக்கும் நாலரை மணிக்கு
கொள்ளையழகு கொலு வீற்றிருக்கும்
வாசலுக்கு வந்து பார்த்தால்
மார்கழி அழகு மகாலட்சுமி.....

(பார்த்ததில் ரசித்தது எனும் கவிதைத் தொகுப்பில் இருந்து)

**தொகுப்பு – இரத்தினம்**

# ஞானாசாரியர் கல்லூரி: அதன் ஆற்றோட்டம்

பனங்கூடல், நெல்வயல், குளங்கள், மருதமரங்கள் அலங்கரிக்கும் கோவில்கள், ஆகிய மனம் நிறைந்த இயற்கைச் சூழலில் அமைந்துள்ளது தான் "கிராவளை" என்னும் உள்ளூர் பெயர் கொண்ட ஒரு இக்கிராமம். சகலவற்றிலும் மிகவும் பின்தங்கிய நிலையில் வாழ்ந்து கொண்டிருந்தனர். அக் கிராம மக்கள். 1925ஆம் ஆண்டளவில் உள்ள நிலைதான். இப்பரிதாப நிலை இந்நிலையில் தங்கள் சுய முயற்சியால் வேறிடங்களுக்குச் சென்று சில இளைஞர்கள் கல்வி கற்றுத் தமிழ் ஆசிரியர்களானார்கள்.

கல்வியின் மேம்பாட்டையும் கிராமத்தின் தாழ்ந்த நிலையும் நன்கு உணர்ந்ததும் அல்லாமல் தாங்கள் செய்ய வேண்டிய கடமையையும் உணர்ந்தவர்களாகவும் இருந்தார்கள். அதே நேரத்தில் கிறிஸ்தவ சமயம் பரப்பப்பட்டும் அதனால் ஏற்பட்ட தாக்கத்தையும் அவர்கள் நன்கு உணர்ந்தவர்களாகவும் இருந்தனர். இவைகளுள் கிறிஸ்த சமயத்தைத் தழுவிய தமிழ் ஆசிரியர்களும் சிலர் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு செயல்பட முன்வந்த முக்கியமான சில ஆசிரியர்களில், திரு.காசிநாதர், திரு. ஆழ்வாப்பிள்ளை, திரு கந்தையா, திரு.பொன்னுத்துரை, ஆகியோர் முன்னிலை வகித்தனர். இவர்களுடன் கிராமத்திலுள்ள கல்வி கற்று வேலைசெய்பவர்கள் சிலரும் இணைந்து கொண்டனர்.

"கட்டைவேலி ஐக்கிய சங்கம்" தோற்றமும் செயற்பாடும்

மேலே குறிப்பிட்ட ஆசிரியர்களும் மற்றோரும் சேர்ந்து "கட்டைவேலி ஐக்கிய சங்கம்"என்ற கழகம் உருவாக்கப்பட்டு கிராமத்தின் கல்வியை மேம்படுத்துவதற்குரிய வழிவகைகளை ஆராய்ந்தனர். முக்கியமாக ஒரு பாடசாலை உடனே ஆரம்பிப்பதுற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்ட வேண்டும் என்ற முக்கிய தீர்மானம் எடுக்கப்பட்டது. உடனே செயற்பட ஆரம்பித்துள்ளனர். கிராம மக்கள் மிகவும் ஆர்வமாக இருந்தபடியால் பாடசாலை கட்டுவதற்குரிய நிலம் நன்கொடையாகப் பெறப்பட்டுள்ளன. கட்டுவதற்குரிய பனைமரங்கள், பணம் ஆகியன நன்கொடையாகப் பெற்றுள்ளனர்.1930ஆம் ஆண்டளவில் பாடசாலை உருவாக்கம் பெற்றுள்ளது. அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட "இந்து கல்வி மன்றம்" (Hindu Board of Eduction) என்ற அமைப்பின் கீழ் உள்ளூர் முகாமைத்துவத்தின் கீழ் நிர்வாகம் நடாத்தும் முறையாக உருவாக்கப்பட்ட பாடசாலை யாக பதிவு செய்யப்பட்டதுடன்

"கட்டைவேலி ஞானாசாரியர் கலவன் பாடசாலை

என்னும் பெயர் பெற்றுள்ளது.

கிராமத்தில் நிர்வாணமாக ஓடித்திரிந்த பிள்ளைகள் எளிய அங்கிகள் அணிந்து பாடசாலைக்கு ஓடோடி வந்து குவிந்தனர். அயற்கிராமப் பிள்ளைகளும் வந்து கல்வி கற்றனர். முக்கியமாக, இப்பாடசாலையில் வந்து சேர்ந்த சகல தாழ்த்தப்பட்ட மாணவர்களும் ஏனைய மாணவர்களுடன் சமமாக இருந்து கல்வி கற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நடவடிக்கை, இப்பாடசாலையைத் தோற்றுவித்த பெரியோர்கள் செய்த ஓர் அரிய பெரிய சாதனையாகும், பாடசாலை விரைவாக முன்னேற்றம் கண்டது. கிராமத்திலுள்ள மாணவ மாணவிகள் ஆர்வத்துடனும் அக்கறையுடனும் கல்வி கற்று முன்னேற்றம் கண்டுள்ளனர். மேனிலை வகுப்புத் தேர்வில் முதலாம் பிரிவில் பல மாணவர்கள் சித்தியடைந்து தங்களின் கல்வி நிலையை மேன்மைப்படுத்தியதுடன் பாடசாலைக்கும் புகழை ஈட்டிக்கொடுத்துள்ளனர். ஆங்கிலமும் கற்பிக்க வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டு "கட்டைவேலி ஞானாசாரியர் இருமொழிப் பாடசாலையாக முன்னேற்றம் பெற்றுள்ளது.

விஞ்ஞானம், கணிதம், வரலாறு, வணிகம், வீட்டுப்பணி மரவேலை, போன்ற முக்கிய பாடங்கள் கற்பிக்கப்பட்டுள்ளன. பாடசாலை. கல்லூரி நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளது. அழகான விளையாட்டரங்கமும் நிர்மாணிக்கப்பட்டு, மாணவர்கள் அதிகளவில் விளையாட்டுக்கள், போட்டிகள், விழாக்கள் ஆகியவற்றை நடாத்தி, தலைமைத்துவத்தை வளர்க்கத்தக்கதாக இருப்பது அவசியமானதும் பெருமைக்குரியதும் ஆகும்.

கிராமம் புரட்சி மாற்றம் பெற்றுள்ளது இப்பாடசாலையில் கற்ற பல மாணவர்கள் மேற்படிப்பை மேற்கொண்டனர். பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்புகளை மேற்கொண்டு விஞ்ஞானம்.கணிதம், பொறியியலாளர் மருத்துவர், கணக்காளர்கள், தொழில் நுட்பப் படிப்பு பல்வகை ஆசிரியர்கள், காவல்துறை உத்தியோகத்தர்கள், சட்ட வல்லுனர்கள். விரிவுரையாளர்கள், என பல துறைகளிலும் மேம்பட்டு விளங்கினார்கள். எங்கள் கிரமத்திலுள்ள ஒவ்வொரு வீட்டிலும் பட்டப்படிப்புப் பெற்ற ஒருவராகிலும் இருக்கும் நிலையை எட்டியுள்ளது. மக்களின் வாழ்க்கை வளமுடையதாகவும் மேன்மையாகவும் மாற்றம் பெற்றன. இப்பாடசாலையைத் தோற்றுவித்த அன்பும் பண்பும் கொண்ட பெரியோர்களுக்கு நன்றிக்கடன் செலுத்துவதோடு, இப்பாடசாலை மென்மேலும் சீரும் சிறப்புடனும் இளஞ்சிறார்களுக்கு நவீன ஒப்பற்ற கல்வியைக் கொடுக்கும் ஒரு கல்வி நிலையமாக செயற்படுவதற்கு வேண்டிய உதவிகளைச் செய்வதற்கு ஒவ்வொருவரும் முன் வரவேண்டும் என இச் சந்தர்ப்பத்தில் வினையமாக வேண்டுகின்றேன். எண்பதாவது ஆண்டுகள், கல்வி மேம்பாட்டிற்காக, காலத்திற்கேற்ப புதிய "கணனி" போன்ற நவீன கல்வித்துறைகள் உள்ளடங்கிய அரிய கல்விச்சேவைகளைச் செய்து முன்னேற்றம் கண்டுள்ளது. ஞானசாரியர் கல்லூரி நான் இப்பாடசாலையில் எட்டாம் தரம் வரை கல்வி கற்று மேலும் தொடர்ந்து ஆங்கிலத்தில் கல்வி கற்பதற்காக ஹாட்லிக் கல்லூரியில் கற்று இலங்கைப் பல்கலைக் கழகத்தில் இளமானி(விஞ்ஞானம்) பட்டத்தைப் பெற்றுள்ளேன் என்பதைப் பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஞானசாரியர் கல்லூரியில் சேவை செய்த ஆசிரியர்கள். அதிபர்கள் எங்களுக்கு வழங்கிய அறிவும், ஆற்றலும் வழிகாட்டலும் என்னை ஓர் உயர்ந்த நிலைக்கு எடுத்துச் சென்றுள்ளது. அவர்கள் எல்லோருக்கும் எனது தலைசார்ந்த வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மேலும் கல்லூரியின் குறிக்கோள் "மாணவர்கள் எல்லோரும்" "கற்றுணர்ந்து ஒழுகவேண்டும்" என்பதே! இது எவ்வளவு மேன்மையானதென்பதை உணர்து உயர்வடைந்துள்ளேன் என்பதை இச்சந்தர்ப்பத்தில் வலியுறுத்த விரும்புகிறேன்.

"செய்யாமல் செய்த உதவிக்கு
வையகமும் வானகமும் ஆற்றல் அரிது"
- வள்ளுவர் குறள் 101-

"எந்நன்றிகொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு"
- வள்ளுவர் குறள் 110-

**கந்தர் சிவநாதன்**
**(இளைப்பாறிய இணைப்பிராந்திய கல்விப் பணிப்பாளர்)**

# ஞானத்தின் ஆசிரியர்

அன்று கல் ஆலின் கீழிருந்து சொல்வதனைச் சொன்னபடி சொல்லாமல் மௌனகுருவாக இருந்து உணர்த்தினர் தெட்சணாமூர்த்தி. இவர் ஞானாசிரியராக தென்திசை நோக்கி இருந்து எம் அறியாமையைப் போக்குகிறார். இன்றும் இந்தச் செயல் எமது கிராமத்தில் நடந்து கொண்டு தான் இருக்கிறது. மருதமரத்தின் கீழ் ஞானாசாரியராக இருந்து எத்தனையோ மாணவச் செல்வங்களிற்கு எமது பாடசாலை கல்விச் செல்வத்தைப் புகட்டி வருகிறது. கல்வி கற்பதன் நோக்கம் சேவை செய்வதற்கே இது ஆன்றோர் வாக்கு ஞானாசாரியர் கல்லூரி என்றவுடன் எம்கண்முன் தோன்றுவது அதன் இயற்கைச் செழிப்புதான் வயலும் அதனைச் சூழவுள்ள பனந்தோப்புகளும், அண்டிய சுடலையும் எக்காலமும் கொள்ளை அழகுடன் காட்சியளிக்கும்.

மித்தில் வயல் மழைக்காலம் வந்து விட்டால் தடாகம் போல் காட்சியளிக்கும். இரவு முழுவதும் தவளைகளின் கச்சேரி விடிந்து விட்டால் எங்கிருந்தோ வரும் பறவைக் கூட்டங்களின் காட்சி. வெள்ளைக் கொக்குகள் வயல் முழுவதும் பறந்து திரியும் கிளிக் கூட்டங்கள் நெல்தேடிப் பேசும். மைனா ஜோடிகள் தங்கள் உறவுகளுடன் மனம் மகிழ்ந்து உறவாடும் நீர் காகம் கூத்தாடிக் கூத்தாடிக் குளிக்கும். பாடசாலையின் முன்னால்பாயும் வாய்க்காலில் காகிதக்கப்பல் விட்டு மகிழும் ஒரு கூட்டம். இந்த வாய்க்கால் இப்போதும் ஓடாமல் தடைபட்டிருப்பது வேதனையான ஒரு செய்தி. நாம் வயல் வரம்பால் சிலிர்ந்த கூதலுடன் பாடசாலை செல்வோம். போகும் வழியில் பதர் நெல்லு நிமிர்ந்து நிற்கும் முற்றிய நெல்லு தலை சாய்ந்து இருக்கும் இது எமக்கு பல புரியாத தத்துவங்களை இளம் வயதிலேயே புரிய வைக்கும். மழை பெய்தால் பனை ஓலையை குடையாக பிடித்துக் கொண்டு தம் வேலைகளிற்கு செல்லும் உழவர் கூட்டம். இயற்கையோடு வாழப் பழகியவர்கள் இவர்கள். இன்று வெளிநாடுகளில் இப்படியான காட்சிகளை காண பணமும் நேரமும் செலவழித்து அலைகிறோம் என்பது வேறு விடயம்.

கோடை காலத்தில் பசு, ஆடு போன்றன வயல் முழுதும் மேயும் இளைஞர் கூட்டம் கிளித்தட்டு விளையாடுவர். வண்டியில் மாடு பூட்டிசதங்கைச் சத்தத்தோடு தோட்டத்திற்கு செல்லும் கமக்காரர் ஒரு பக்கம் தட்டி வான் கொண்டு கொடிகாமச் செல்லும் கமக்காரர் ஒரு பக்கம் கற்பக தருவாம் பனையின் பயனால் வாழும் ஒரு கூட்டம், வியாபாரம் செய்ய கோவில் சந்தை, நெல்லியடிச் சந்தை செல்லும் இன்னொரு கூட்டம் அன்றாடம் சீவிப்பதற்காக வயல்களிலும், தோட்டங்களிற்கும் வேலைக்கு செல்வோர் ஒரு பக்கம் அரசாங்க உத்தியோகப் பார்க்க செல்லும் ஒரு சிலர். இப்படி பல்வேறுபட்ட மனிதர்கள் வாழும் கிராமம் தான் எமது கிராமம் இப்படி பல்வேறு முயற்சிகளில் கஸ்ரப்பட்டு வேலை செய்யும் எம் மக்கள் தம் பிள்ளைகளை படிக்க அனுப்பும் பாடசாலை தான் எமது பாடசாலை. எம்மோடு வாழ்ந்து எம் கிராமத்தின் ஒவ்வொரு அடி மண்ணோடு பாடு பட்டு தம் வாழ்வு நிறைவு பெற்ற பின் நாலு பேர் தூக்கி போவதும் எம் பாடசாலையின் முன்னால் உள்ள தெருவால்தான் ஆக மொத்தத்தில் எம் கிராம மக்களின் வாழ்வையும் அவர்கள் வாழ்வு நிறைவெய்திய பின் அவர்களிற்கு நடக்கும் இறுதி ஊர்வலத்தையும் கண்டு வாழ்வின் தத்துவத்தை விளக்குவதும் எமது ஞானாசாரியர் கண்டு வாழ்வின் தத்துவத்தை விளங்குவதும் எமது ஞானாசாரியர் பாடசாலை தான். நான் எனது பாடசாலையில் 1963-1973வரை படித்தேன். வெகுகாலமாக

திருசிவப்பிரகாசம் அதிபராகவும் திரு ஆழ்வாப்பிள்ளை அவர்கள் தலைமை ஆசிரியராகவும் இருந்தனர்.

திரு ஆழ்வாப்பிள்ளை ஆசிரியரிற்கு எல்லா மாணவர்களையும் தெரியும் ஒரு மாணவன்/மாணவி அவர்களின் பின்புலமும் நன்றாகவே தகப்பன் பெயரைக் கூறினால் போதும் அவர்களின் பரம்பரையையே கூறி விடுவார். ஒவ்வொரு மாணவனினதும் குடும்ப சூழ்நிலை அறிந்து ஆசிரியர் அவனிற்கு பாடம் சொல்லிக் கொடுக் லாக இருக்கும். எமது வகுப்பில் காலை உணவு உண்ணாமல் வரும் ஒரு சில மாணவர்களை பார்த்திருக்கும் போது அவனின் வளர்ச்சி கூடுதகிறேன். அவர்களின் குடும்ப சூழல் அப்படியானது. இது எல்லாம் ஆழ்வாப்பிள்ளை ஆசிரியரிற்கு நன்றாகவே தெரியும் அவரும் மற்றைய ஆசிரியர்களிற்கு இது அந்த மாணவர்களிற்கு தங்களால் ஆன உதவிகளைச் செய்து படிப்பிப்பார்கள் இப்போது இப்படிப்பட்பற்றிக் கூறிட பிரச்சனைகள் குறைவாக இருந்தாலும் வேறு பல பிரச்சனைகள் புதிதாக உருவாகியுள்ளன.

அப்போது பொரும்பாலும் எமது ஊரை சேர்ந்த ஆசிரியர்களே படிப்பித்தார்கள் ஆசிரியர்களான கந்தையா, திருமதி பத்தினிப்பிள்ளை, திருமதி பத்தினி திரு கயிலாயர், திரு கணபதிப்பிள்ளை, திருமதி முத்துத்தம்பி, திருமதி பொன்னையா, திரு கந்தசாமி, திரு சிற்றம்பலம் திருமதி தாமு போன்றோர் எனது ஊர் ஆசான்கள் பத்தினிப்பிள்ளை ரீச்சரின் தமிழுடன் தான் இன்றும் நான் வாழ்கிறேன். கந்தசாமி ஆசிரியர் படிப்பித்த கணிதம் இன்றும் மனதில் பசுமரத்து ஆணிபோல் பதிருந்திருக்கிறது. நாம் 9ம் வகுப்பு(1972ம்ஆண்டு)படித்த போது அரியாலை திரு நடராசா ஆசிரியரின் நெறியாள்கையில் "பிறந்தான் பத்தாயிரம்" என்ற நகைச்சுவை நாடகத்தை அரங்கேற்றினோம் இன்றும் அந்த நாடகத்தைப் பற்றி கதைப்பவர்களைப் பற்றி கதைப்பவர்களைப்பார்த்திருக்கிறேன். இந்த நாடகம் பின் பல்வேறு மேடைகளை வன்னி ஈறாகக் கண்டது திருமதி முத்துத்தம்பி ரீச்சரின் "கல்வித் தெய்வம் அவள் தானடி தோழி" என்ற நடனம் போல் இதுவரை எங்கும் நான் பார்த்ததில்லை வெளிநாடுகளில் எத்தனையோ அரங்கேற்றங்கள் நடைபெறுகின்றன. ஆனல் இந்த நாட்டியம் போல் வெள்ளை உடை உடுத்தி,கையில்தீபம் ஏந்தி அழகான, நேர்த்தியான நடனத்தைப் பார்த்ததில்லை. பியோன் கணபதிப்பிள்ளை அண்ணர் எமது பாடசாலைக்கு செய்த சேவை மிகப் பெரிது எமது பாடசாலையில் தினமும் காலையில் படித்த சிவபுராணம் இன்றும் எமக்கு நல்வழியைக் காட்டுகிறது. ஞானத்தின் ஆசிரியராக இருந்து எமக்கு செழுந்தமிழ் கற்பித்து கல்வி சொல்ல வல்ல நல்வித்தையும் தந்து எம்மை நல்வழிப்படுத்திய எமது ஞானாசாரியர் கல்லூரியின் 80ம் ஆண்டு எம் எல்லோரிற்கும் நீங்காத நினைவுகளையும் ஆசியையும் தந்து எம்மைவாழச் செய்கிறது. சுடர் தன்னை மறைத்து வெளிச்சம் தருவது போல், நாம் எங்கெங்கோ காலத்தின் கோலத்தால் வாழ்ந்தாலும் எம் பாடசாலை தன் சேவையைப் சாதி மத பேதமின்றி ஆற்றிவருவது நாம் செய்த நல்வினைப் பயன் என்றே எண்ணத் தோன்றுகிறது. ஒருவனின் பசியைப் போக்குவதும், கல்வி ஊட்டுவதும் மனித சேவையில் உன்னத சேவை அவை இரண்டையும் நான் எனது பாடசாலையில் கண்டிருக்கிறேன். நம்கடன் பணி செய்து எம் கிராமத்திற்கும்,எம் பாடசாலைக்கும் எம்மால் ஆனதைச் செய்து வாழ்வின் பயனை அடைவோம். மனித சேவையின் மிகப்பெரிய சேவையான ஆசிரியர் சேவையைத் தொடரும் ஆசான்களிற்கு தலை சாய்த்து வணங்குகிறேன்.

**கணபதிப்பிள்ளை சிவராசா**
**பொறியியலாளர்,**
**அவுஸ்திரேலியா**



# கற்களைக் கடவுளாக்கிய கல்லூரியின் வயது 80

ஞானாசாரியார் கல்லூரியில் படித்த காலத்தில் பசுமை நிறைந்த நினைவுகள் இதயத்தில் இனிக்க இன்றுவரை வாழ்கின்றோம்.

"கல்வி இல்லாச் செல்வமும் கலங்கமுள்ள அழகும்
கடுகளவும் பிரகாசிக்காது"

எமது ஊர் ஒரு சராசரி விவசாயக்கிராமம் பசுமைநிறைந்த இயற்கை வனப்பு மலிந்த எமது ஊரின் உயர்வுக்கு ஊக்கமளித்த பெருமைக்குரியது எமது கல்லூரி. உயிர் கொடுத்து உண்டி கொடுத்து கடவுளிலும் மேம்பட்ட கல்வியைத் தந்த களஞ்சியமாகத் திகழும் எமது பாடசாலை வெறும் கற்களாகப் போனகுழந்தைகளை செதுக்கிச்செப்பனிட்டுச்சாதனையாளர்களாகச்-சான்றோராக கல்வியில் பெருமையும் புகழும் பெற்று வாழ வழிசெய்தது. ஆரம்பக்கல்வியின் ஆழ்ந்த அகன்ற அத்திவாரத்தால் உயர்வுபெற்று பெரும் சிறப்புடையவர்களாய் இன்றுவரை புகழுடன் வாழ்கின்றோம்

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்னும் வள்ளுவர் வாய்மொழியை "கற்றுணர்ந்தொழுகு" என்னும் வேதவாக்காக இரத்தினச் சுருக்கமான பொன்மொழியைப் பொறித்து வழிநடத்துகிறது. பாடசாலை மாணவரின் புள்ளி அறிக்கையில் இந்த வாசகம் பொறிக்கப்பட்டு மகுடவாசகமாக அமைந்து எமது மனதை ஈர்த்து நிற்கிறது.

கற்பித்தவன் கண்ணைக் கொடுத்தவன் என்ற உண்மை நிலைக்கேற்ப தகுதியான பட்டங்கள் பெற்ற பயிற்றப்பட்ட அனுபவம் மிக்க திறமையும் முயற்சியுமுடைய ஆசிரியப் பெருந்தகைகள் அங்கே கற்பித்தார்கள். கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், உலகவரலாறுகள், புவியியல் ஏனைய அழகியல் பாடங்கள் சிறந்த முறையில் கற்பிக்கப்பட்டது. முக்கியமாகச் சமயக்கல்வியை சமூகக்கல்வியாக கற்பித்தலாகவும் செயல்முறையிலும் புகட்டினார்கள். சமயத்தை வாழ்வியலாக ஒழுங்குநெறியாக நடைமுறைப்படுத்தினார்கள்.

அத்துடன் விளையாட்டின் உயர்வை உணர்ந்து சாதாரண பாடசாலை விளையாட்டுகளுடன் சிறப்பாக மல்யுத்தம்,கெத்துச்சண்டை, சாரணியக்கம் போன்ற வற்றையும் மாணவர்கள் திறமையறிந்து கற்பித்தனர் உறுதியான உடல் வளர்ச்சியில்தான் உளவளர்ச்சி இருக்கிறது என்பதனை மாணவர்கள் அனுபவவாயிலாக அறிய வாய்ப்பு வழங்கினார்கள். மாவட்ட ரீதியில் மட்டுமல்ல, தேசியரீதியில் விளையாடி வெற்றிப் பதக்கம் பெற்றனர் இதனால் மாணவரிடையே ஒற்றுமை விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, வெற்றி தோல்விகளைச் சமனாகக் கருதி சந்தோஷமாக ஏற்றுக் கொள்ளும் நிலைமை உருவானது. ஒழுக்கம், பண்பு, பணிவு, சைவசமயப் பற்று, சமய

வாழ்க்கை முறை எம்முடன் பின்னிப் பிணைந்து நாங்கள்உருவானோம். இத்தனைக்கும் காரணம் எங்களுக்குஅடிப்படையில் தரப்பட்ட கல்வியறிவே.

தனிமனித மாற்றங்கள் சமுதாய வளர்ச்சிக்கு உதவுகிறது. தனித்துவமான திறமைகளும் குண இயல்புகளும் விடாமுயற்சியும் கொண்ட எங்கள் ஊரவர்கள் மிக உயர்ந்துஉன்னதமாக வாழ்கிறார்கள். உலக சமூகத்தில்,வாழ்வின் ஒவ்வொரு நெருக்கடியையும் எதிர் கொள்ளும் தகுதியுடையவர்களாக வாழ்கிறார்கள். கற்றாரைக் கற்றாரேகாமுறுவர் என்ற இனிய தத்துவ மொழிக்கிணங்க வெளிநாடுகளில் கற்றவர்கள் மத்தியில் எங்கள் பிள்ளைகளும் உயர் கல்வி கற்று உயர்ந்த பதவிகளில் இருக்கிறார்கள். வைத்திய கலா நிதிகளாக, கணக்காளர்களாக, பொறியியலாளர்க ளாகச் வக்கீல்களாக, பட்டதாரிகளாக, வியப்புக்குரியவர்களாக பல்லின மக்களிடையே வாழ்கிறார்கள்.

இடம் பெயர்ந்து வந்து வாழும் எமது உறவுகள் விவேகமான கல்வியறிவில் மேம்பட்ட ஒரு சமூகத்தை தங்கள் சந்ததியை மிகச் சாதுரியமாக உருவாக்குகிறார்கள். எமது நாட்டில் கிடைக்காத வாய்ப்புக்கள் வசதிகள்,சலுகைகளை இங்கு பெற்றுத் தமது குழந்தைகளை வளர்க்கிறார்கள். விடாமுயற்சி,கடின உழைப்பு, சாதுரியமான வழிகாட்டல்கள் இவர்களது பழக்கமாகி விட்டது. போட்டி போட்டு முன்னேறுகிறார்கள் ஆனால் பொறாமை,அகங்காரம் வேறுபாடு என்பன இல்லாத இயல்பினராய் ஒற்றுமை, அன்பு, பணிவு,கூட்டுமுயற்சி, தாராள மனப்பான்மை என்பவற்றுடன் இயல்பாக வாழ்கிறார்கள் இந்தத் தனித்திறமைகள், கூட்டு வாழ்க்கை முறை அடுத்தவரைப் பேணிப் பாதுகாக்கும் தன்னலம் அற்ற குணங்கள் யாவும் எமக்குக் கல்வியகம் தந்த அத்திவாரக் குணங்களே!

இன்றும் பாடசாலையில் கற்ற இலக்கிய கதாபாத்திரங்களான காந்தி,விவேகானந்தர், கதைகள் ஞாபகத்தில் வைத்து வாழ்க்கையை நடத்த முடிகிறது. இந்தப் பெருமையெல்லாம் எமக்குப் படிப்பித்த ஆசிரியப் பெருந்தகைகளையே சாரும். எமது பாடசாலை என்பது வருடகாலமாக சிறந்த உயர்ந்த பாராட்டப்படக் கூடியளவுக்கு இருப்பதற்கு இங்கு கற்பித்த-கற்பிக்கும் அதிபர்கள் ஆசிரியர்களே முழு முதல் வழிகாட்டிகள். உலகக் கண்ணாடியில் எமது சமூகம் இன்று பிரகாசிக்க நாம் வழிபடக் கூடியவர்கள் அவர்களே!

எதிர்காலத்தில் எமது பாடசாலை கல்வியில் ஒழுக்கத்தில், ஞான ஒளி பரப்பவும் பாராட்டப்படவும் சிறப்பான தலைமைகள் மேலிடவும் இறைவனை வேண்டுகிறோம். இதற்கு அரும்பாடுபடும் ஆசிரியர்கள் ஒற்றுமையுடனும்,ஒருமித்த கருத்துடனும் கூட்டுமுயற்சியுடன், ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்தும் பாடுபட வேண்டும் என்பது எமது தாழ்மையான வேண்டுகோளாகும். கல்லூரியின் களங்கமற்ற உயர்வுக்கு அனைவரது அன்பும்,தொண்டும் அயராத உழைப்பும் மிகமிக அவசியம் என்பதை உணர்ந்து பாடுபடுவோம்.

44, KEPPEL ROAD
EASTHAM
LONDON E62BD
U.K

**திருமதி. புவனேஸ்வரி நடராஜா**
**ஓய்வுபெற்ற ஆசிரியை,**
**பழைய மாணவி**

# ஆங்கில மொழி மூலக் கல்வி

இன்றைய உலகில் ஐரோப்பிய நாடுகளில் குறிப்பாக பிரான்ஸ், ஜேர்மனி, டென்மார்க் நாடுகளில் ஆங்கிலத்தினை பல்கலைக்கழக மட்டங்களில் ஆய்வுகளை மேற்கொண்டு வருவதற்கு பயன்படுத்துகின்றனர். ஒரு கால கட்டத்தில் முற்றாகவே ஆங்கிலமொழியினை எதிர்த்து வந்த இந்நாடுகள் இன்று அவற்றினைப் பயன்படுத்தி அதனைக் கற்றுப் பயன்படுத்த வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டனர். ஆங்கில மொழியின் முக்கியத்துவத்தினை உன் ரீதியாக உணரக்குடியதாக இருக்கின்றது. இதேபோல வளர்ந்துவரும் நாடுகளில் குறிப்பாக இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் மொழியின் முக்கியத்துவம் மீண்டும் தலைதூக்கி நிற்பதனை நாம் உணரக் கூடியதாக இருக்கின்றது.

வேறும் பல ஆய்வாளர்கள் குறிப்பாக எழுதும் திறன் போன்ற முக்கிய திறன்களில் தேர்ச்சி பெற்ற பின்னரே பிள்ளைகளுககு இரண்டாம் மொழி பற்றி கற்பது பற்றி சிந்திப்பதற்கு வழிவகுத்துள்ளார். அவருடைய சிந்தனையில் சகல வகையான கற்றலுக்கும் தேவையான உளப்பாங்குகள், உளசார்புகள், மற்றும் நடத்தைகளையும் பிள்ளைகளில் வளர்க்க உதவும் ஒரேமொழி தாய்மொழியாகும். தாய்மொழியானது மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையிலும் அவர்களுக்குள்ளும் இசை வாக்கத்தையும் நம்பிக்கையையும் உருவாக்குகின்றது என்றும், பிள்ளைகள் தம்மைச் சுற்றியுள்ள உலகை ஆராய்வதற்கான சிறந்ததொரு சந்தர்ப்பத்தினை வழங்குகின்றது என்றும் மாணவர்களின் மனத்தடைகளை அகற்றி அவர்களுடைய கற்பனை வளத்தை யும் படைப்பாற்றலையும் விருத்தி செய்கின்றது என்பது இவ் அறிஞர்களின் கருத்தாகும். பிள்ளை தனது மொழி, தனது கலாச்சாரம், தன்னைச் சூழவுள்ள உலகு என்பது பற்றிய தெளிவான விழிப்புணர்வைப் பெறுகின்ற என்ற அவரது கருத்து தாய்மொழி கல்வியின் முக்கியததுவத்தை மிகக் கூடிய அனைவருக்கும் வலியுருத்துவதாகும்.

கல்வி பற்றி இரண்டுவகையான நிலைப்பாடுகள் உள்ளன. அதலாவது நிலைப்பாட்டின்படி பிள்ளைகளுக்கு உள்ளார்ந்த பல ஆற்றல்கள் இருக்கின்றன. கல்வியானது அவ்வாற்றல்களை பயன் தருமுறையில் வெளிக்கொணர வோண்டும் என்பதாகும். இரண்டாவது நிலைப்பாட்டின்படி அறிவார்ந்த ஆசிரியர் அறியும் ஆற்றலுமற்ற பிள்ளைகளிடம் தனது "அறிவை வைப்புச் செய்ததாவும்" இதனையே "Banking Concept Of Education" என Paulo Freireve என்ற இலத்திரன் அமெரிக்கக் கல்விச் சிந்தனையாளார் எடுத்துக் கூறினார்.

ஆங்கில மொழியை அடிப்படையான எழுத்தறிவை பெற 12-14 ஆண்டுகள் வரை செல்லும் அத்தகைய எழுத்தறிவை 8-9 ஆண்டுகளில் பெற்று விட முடியும் சமூகத்திலும் தொழிற்சந்தையிலும் முழுமையாகப் பங்கு பெறத் தேவையான எழுத்தறிவை அந்நிய மொழியில் பெறுவதற்கு 16-17 ஆண்டுகள் பெற முடியும் இந்நிலையில் அந்நிய மொழியில் கல்வி பெற முற்பட்டால் பிள்ளைகளின் சொந்த வளங்களும் சமூகத்தின் வளங்களும் விரயமாக நேரிடும் என்ற கருத்திலும் நிலவுகின்றது. தாய்மொழிப்பற்றும் வழிவழிவந்த பண்பாடு பற்றிய பெருமிதத்தையும் கொண்ட மக்கள் வாழும் நிலையில் பல பெற்றோர்கள் தமது மொழியையும் பிள்ளைகளுக்கு கற்பிக்கின்றனர். ஆனால் ஆங்கில மொழியில் பயிலும் பெரும்பாலான பிள்ளைகளைப் பொறுத்தவரையில் அவர்களுடைய பாடசாலை மொழிக்கும் சமூகம் பயன்படுத்தும் மொழிக்கும் இடையே

ஒரு பாரிய இடைவெளி உண்டு என்பதை ஒரு பெருங்குறைபாடாக கல்வியாளர்கள் தெற்விக்கின்றனர்.

**கல்வி ஆய்வாளர்களின் முடிவுகள்**

1981 ம் ஆண்டு ஜொன்சன் அன்ட் மொரோ (Jonson and morrow) என்பவருடைய ஆய்வில் ஆங்கில மொழிக் கற்பித்தல் நோக்கம் ஆனது விரிந்த தவனை அடிப்படையில் விரிவான பாடவிதமான கற்பித்தலை குறிப்பிடுவதாக இருத்தல் வேண்டும் என குறிப்பிடுகின்றார். மேலும் ஆங்கிலமொழிக் கற்பித்தல் முறை பரப்பு எல்லை, கற்பித்தல் முறையின் வேறுபாடுகளின் அடிப்படையில் அதன் அபிவிருத்தியில் தங்கியுள்ளது. மாணவர்கள் ஒரு குறிப்பிட்ட மட்டத்தில் மொழித்தேர்ச்சி பெற முயற்சிப்பதால் மாணவர்கள் பாடம் சார்பான திறமைகளை பெற்றுக்கொள்ள முடியும். cohen (1986) என்பவரின் ஆங்கில மொழியினை 2வது மொழியாக கற்பித்தலை எவ்வாறு மேற்கொள்ள முடியும் என்ற ஆய்வை வெளிப்படுத்தினார். ஆங்கிலமொழி பயிலும் மாணவர்கள் போதியளவு ஆங்கில அறிவு பெற்றிருக்க வேண்டும். இல்லாவிடின் அதனை அவர்கள் தவிர்க்க முயல்வர். ஆங்கிலமொழி பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் வகுப்பில் போதிய செயற்பாடுகளையும் அவர்களுக்கு கற்பிக்கக்கூடிய சூழலை உருவாக்கி உண்மையான நோக்கத்தை நிறைவேற்ற வேண்டும். இவடுடைய ஆய்வின்படி இம்மொழி பற்றிய அறிவைப் பெறுவதற்கு சிறிது காலம் எடுக்கும் என்பது தெளிவாகக் கொள்ளப் படுகின்றது.

**இலங்கை பாடசாலைகளில் ஆங்கிலமொழி**

உலக மயமாதலினால் சர்வதேச உறவுகள், கைத்தொழில், வர்த்தகம், தகவல் தொழிநுட்பத்தின் பயன்பாடு உலகளாவிய ரீதியில் பன்மட்டங்களாகப் பெருகிவரும் அறிவுத்தொகுதி ஆங்கிலத்தில் இருக்கின்ற நிலைமை போன்ற வலுவான காரணங்களினால் ஆங்கில மொழியில் தேர்ச்சி பெறுவது அவசியமாகின்றது. இதன் காரணமாகவே எமது நாட்டில் 1950ஆம் ஆண்டு தொடக்கம் பாடசாலைகளில் பயிற்றுமொழி என்ற அந்தஸ்தில் இருந்து நீக்கப்பட்ட ஆங்கிலமொழி ஆனதுஇன்று அதிகார பூர்வமாக மீண்டும் பாடசாலைகளில் ஒரு பயிற்றுமொழியாக ஏற்றுக்கொள் ளப்பட்டது.

"யாவர்க்கும் சம கல்வி" எனும் கொள்கை உருவாக இலங்கை மக்கள் 20ம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை காத்திருக்க வேண்டியிருந்தது. ஆங்கில ஆட்வியளாலர்கள் உயர்ந்த ஆங்கிலக்கல்வி சாதாரண மக்களுக்கு சுயமொழிகளில் ஆரம்பக்கல்வி என்ற கொள்கையை தமது ஆட்சிக்காலம் முழுவதும் பின்பற்றினார். கோல்புறுக் குழுவினரின் (1831) கல்வி ஆலோசனைகளுக்கு அமைவாக கற்பித்தல் மொழி ஆங்கிலமாக இருத்தல் வேண்டும் என்றும் சுயமொழி ஆரம்பப் பாடசாலைகளை மூடிவிட்டு அதற்குப் பதிலாக ஆரம்பம் தொடக்கம் ஆங்கிலம் கற்பிக்கும் பாடசாலைகள் நிறுவப்பட வேண்டும் என்றும்; ஆங்கிலக்கல்வியின் முன்னேற்றத்திற்கு ஓர் ஆங்கிலக்கல்லூரி நிறுவப்பட வேண்டும் என்றும்; ஆங்கிலம் படித்த இளைஞர்களை அரச மொழிகளில் சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும் என்றும் கூறப்பட்டது. இதற்கு அமைவாக சுசேமொழிகளைப் புறக்கணித்து ஆங்கிலம் கற்பித்தல் மொழியாக உபயோகிக்கப்பட்டது.

1943ம் ஆண்டு கன்னங்கரா குழுவின் அறிக்கையின் இரு வேறுபட்ட மொழிக்கொள்கையின் குறைபாடுகள் கூறப்பட்டன. பறங்கியோரைத் தவிர்ந்த ஏனையொருக்கு தமது தாய் மொழி பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்றும்

பரிந்துரைக்கப்பட்டது. இவருக்கு கன்னங்கரா காலம் தொடக்கம் படிப்படியாகப் பாடசாலைக்கல்வியிலும் பின்னர் பல்கலைக்கழகக் கல்வி நிலையிலும் ஏற்பட்ட பயிற்று மொழி மாற்றம் ஒரு கல்வி சீர்திருத்தம் அன்றி சமுதாய சீர்திருத்தமாகவும் விளங்கியது.

உயர் கல்வி நிலையில் மருத்துவம் பொறியியல் முகாமைத்துவம் விஞ்ஞானம் மற்றும் சமூக அழகியல் துறைகளில் ஆங்கிலம் பயன்படுத்தப்பட்டு மொழித் தேவை ஓரளவுக்கு பூர்த்தி செய்யப்பட்டது. இது போன்று வலுவான காரணங்களால்,(பல்தேசியக் கம்பனி வருகை) இளைஞர்கள் மத்தியில் துரிதமாக ஆங்கில மொழியில் தேர்ச்சியை ஏற்படுத்த முடிந்தது மற்றும் நாட்டின் வளர்ச்சி பெற்ற பாடசாலைகளில் ஆங்கிலம் சிறப்பாக கற்பிக்கப்பட்டு வந்தது.

இன்றைய நிலைமைகளில் ஆங்கிலத்தின் தேவை அதன் முக்கியத்துவம் என்பன பற்றி மாற்றுக் கருத்திற்கு பொதுவாக இடமில்லை என்றே கூறவேண்டும் பூகோளக்கிராம கோட்பாட்டினால் பாரதூரமான இடர்களை எதிர்கொண்டுள்ள எமது சந்ததியினரை அதிலிருந்து காப்பாற்றிக் கொள்வதற்கு அவர்களுக்கு ஆங்கில மொழியைக் கற்பிப்பது தேசிய தேவையாக இருக்கின்றது. இலங்கையில் சகல குழந்தைகளும் ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றவர்களாக எதிர் வரும் 10 ஆண்டுகளில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று கூறப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. சுருங்கக் கூறின் இன்று ஆங்கில மொழித்தேர்ச்சியை எதிர்ப்போர் எவருமில்லை.

சந்ததியினரை அதிலிருந்து காப்பாற்றிக் கொள்வதற்கு அவர்களுக்கு ஆங்கில மொழியைக் கற்பிப்பது தேசிய தேவையாக இருக்கின்றது. இலங்கையில் சகல குழந்தைகளும் ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றவர்களாக எதிர் வரும் 10 ஆண்டுகளில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று கூறப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. சுருங்கக் கூறின் இன்று ஆங்கில மொழித்தேர்ச்சியை எதிர்ப்போர் எவருமில்லை.

நாட்டின் சில பாடசாலைகளில் முதலாம் தரத்திலும் ஆங்கிலம் பயிற்று மொழியாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளதை கருத்திற் கொண்டு தேசிய கல்வி ஆணைக்குழு அரசாங்கப் பாடசாலைகளில் ஆரம்பக் கல்வி நிலையில் சிங்களம்,தமிழ் பயிற்று மொழியாதல் வேண்டும் ஆங்கில மொழிக் கல்வி ஆரம்ப நிலையில் இடம்பெறல் வேண்டும்.மூன்றாம் தரத்தில் இருந்து முறையாக ஆங்கிலம் கற்பிக்கப்படுதல் வேண்டும் ன்றும் பரிநதுரைத்தது.

இக் காலத்தில் ஆங்கிலம் வர்த்தகக் கைத்தொழில்த்துறையில் நிருவாக மொழியாக பயன்படுத்தத் தொடங்கியது இராஜதந்திரத்துறை மற்றும் உலகளாவிய தொடர்புகளில் அம் மொழி விரைகபயன்படத் தொடங்கியது. கணனி, இணையம், மின்னஞ்சல் என்பன ஆங்கில மொழியின் முக்கியத்துவத்தை மேலும் வலுப்படுத்தின புதிய நூற்றாண்டு அறிவு மையநூற்றாண்டு, தகவல் மையநூற்றாண்டு என வர்ணிக்கப்பட்டு அறிவு வெள்ளம் பிரவாகம் எடுத்து ஓடுகின்ற நூற்றாண்டாக மாற்றம் பொற்றது. 50ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட அறிவுத் தொகுதிக்குச் சமனான அறிவுத் தொகுதி ஐந்து ஆண்டுகளில் உருவாகும். இரு ஆண்டுகளுக்கு ஒரு முறை அறிவுத் தொகுதி இரட்டிப்பாகும் நிலை உருவாகியுள்ளது இத்தகைய மாற்றங்களில் ஆங்கில மொழி பிரதான இடத்தை வகிக்கத் தொடங்கியதைத் தொடர்ந்து உலகளாவிய ரீதியில் ஆங்கிலம் பேசாத ஐரோப்பிய நாடுகளில் கூட ஆங்கில மொழியின் முதுவம் வெகுவாக உணரப்பட்டுள்ளது.

இலங்கையின் சுய மொழிகள் பயிற்சி மொழியாக அறிமுகம் செய்யப்பட்ட போதிலும் பாடசாலை நிலையில் ஆங்கிலம் ஒரு முக்கிய பாடமாக கற்பிக்கப்பட்டு வந்தது. அரசாங்க பணியில் சேர்வதற்கோ அல்லது பலகலைக்கழகங்களின் அனுமதி பெறுவதற்கே ஆங்கி பாடத்தில் சித்தியெய்தி இருக்க வேண்டும். என்ற கட்டாயம் இருக்கவில்லை பல்கலைக்கழக பட்டதாரிகள் அரசாங்க பணிகளை மட்டுமே நாடுவது என்பது வழமையாயிற்று மறுபுறம் பாடசாலைகளில் ஆங்கில மொழியை திறன்பட கற்பிப்பதற்கான ஆசிரியர்களினுடைய பற்றாக்குறை முக்கிய கல்வித்துறைப் பிரச்சினையாயிற்று. இந் நிலையில் மாணவர்களின் ஆங்கிலத் தேர்ச்சி மட்டுமன்றி நாடளாவிய ரீதியில் ஆங்கிலத் தேர்ச்சி பெரிதும் பாதிப்புக்கு உள்ளாயிற்று.இந்தியா போன்ற ஏனைய தென்னாசிய, தென்கிழக்காபசிய நாடுகளில் காணப்பட்ட ஆங்கிலத் தேர்ச்சியுடன் ஒப்பிடும் போது இலங்கையின் பின்தங்கிய நிலையும் உணரப்பட்டது. துரிதமாக வளர்ச்சி பெற தொடங்கிய தனியார் துரையினரும் பாடசாலை, பல்கலைக்கழக மாணவரின் ஆங்கிலத் தேர்ச்சியை மேம்படுத்துமாறு கோரிக்கைகளை விடுவிக்கத் தொடங்கினர்.

2000ம் ஆண்டில் பின்வரும் கொள்கை முன்மொழிப்பட்டது.

1. க.பொ.த (உ/த) வகுப்புக்களில் விஞ்ஞன பாடங்களை பயிலும் மாணவர்கள் ஆங்கில மொழியில் பயில்வதற்காக விருப்புத் தெரிவு வழங்கப்பட்டது.
2. ஆனால் 6ம் தரத்தில் இருந்து சில தெரிவு செய்யப்பட்ட பாடங்களை ஆங்கில மொழியில் கற்க அனுமதி வழங்கப்பட்டது. (கணிதம், விஞ்ஞானம், சுற்றாடல் கல்வி, சுகாதாரக்கல்வி, உடற்கல்வி)
3. 2003 மார்கழியில் தேசிய கல்வி ஆணைக்குழுவால் மனித விருத்திக்கான கல்வி பற்றிய புதிய தொலைநோக்கு என்ற அறிக்கையின்படி அமைச்சரவையின் ஒப்புதலின்றி முதலாம் தரத்திலிருந்து ஆங்கில மொழியைப் போதனா மொழியாகக் கொள்ளலாம் என்றதொரு கருத்து வேறுபாட்டுக்கு உட்பட்ட கொள்கை ஒன்று முன்வைக்கப்பட்டது.

யாழ் மாவட்டத்தில் 2002ம் ஆண்டு சென்பற்றிக்ஸ் கல்லூரியும் யாழ் இந்து மகளிர் கல்லூரி ஆகிய இரண்டும் முதன்முதலில் ஆங்கில மொழி மூலம் கல்வியைப் போதிப்பதற்காக செயற்றிட்டத்தை ஆரம்பித்து தற்போது 13 பாடசாலைகள் ஆங்கில மொழிமூலம் கல்வியைப் போதிக்கும் பாடசாலையாக யாழ் மாவட்டத்தில் யாழ் வலயத்தில் காணப்படுகின்றன. இதனைவிட வலிகாம வலயத்தில் 8 பாடசாலைகளிலும் மானிப்பாயில் சர்வதேச ஆங்கிலப் பாடசாலையும் இதனைவிட தென்மராட்சி, வடமராட்சி ஆகிய பிரதேசங்களில் ஒரு சில பாடசாலைகளிலும் ஆங்கில மொழி ஊடகக் கற்பிக்கப்படுகிறது.

மாணவர்கள் ஆங்கில மொழி மூலம்கற்பித்தலை மேற்கொண்ட போதிலும் க.பொ.த சாதாரணதரப் பரீட்சைவரை மிகவும் துணிச்சலுடன் ஏறத்தாழ 50வீதமான மாணவர்கள் சிறப்புத்தரங்களைப் பெற்று வருகின்றனர். அரசாங்கத்தினால் நடாத்தப்படும் க.பொ.த இறுதிப்பரீட்சையிலும் சிறந்த பெறுபேறுகளை பெறுகின்றனர். ஆனாலும் அவர்கள் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் ஆங்கில மொழிமூலம் கற்பதற்கு சிறிதளவு தயக்கம் காட்டுகின்றனர் இதனால் உயர்தர வகுப்புக்களில் ஆங்கில மொழி கற்பித்தலில் பாரிய வீழ்ச்சி ஏற்படுகின்றது. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் பிரபல பாடசாலைகளிலும், வடமராட்சியில் சிறப்பாக நெல்லியடி மத்திய கல்லூரி, வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, மெதடிஸ் உயர்தரப் பெண்கள் பாடசாலையிலும் உயர்தரப்

பரீட்சைக்கான ஆங்கில மொழிமூலக் கற்பித்தல் நடைபெற்று வருகின்றது. தனியார் கல்வி நிறுவனங்களிலும் விசேடமாக தரம் மிக்க ஆசிரியர்களினால் ஆங்கில மொழிமூலம் கற்பித்தல் நடைபெறுகின்றது.

வடமராட்சியில் பிரபலமான ஹாட்லிக் கல்லூரியில் உயர்தர வகுப்புக்களில் ஆங்கில மொழிமூலக் கற்பித்தல் இல்லாது இருப்பது பாடசாலையின் பெருமையினை சற்றுக் குறைவாக மதிப்பிடுவதாக காணக்கூடியதாக இருக்கின்றது. ஆங்கிலத்தில் கற்பிக்கக்கூடிய ஆசிரியர்கள் இருந்தாலும் மாணவர்களுடைய உற்சாகமின்மையே மறைமுக காரணமாக அமைகின்றது. ஆங்கிலத்தில் கல்வி கற்பதில் பெண்பிள்ளைகளின் நாட்டம் வடமராட்சிப் பிரதேசத்தில் ஒரு முக்கிய அம்சமாக இருப்பதை மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலையில் 10 பிள்ளைகள் ஆங்கில மொழியில் கற்பதன் மூலம் உணரக்கூடியதாக இருக்கின்றது.

இன்று பல்கலைக்கழகத்தில் கலைத்துறை தவிர்ந்த ஏனைய பீடங்கள்யாவும் ஆங்கில மொழிமூலம் கற்கைநெறிகளை மேற்கொண்டு வருகின்றது. 1998ம் ஆண்டு முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம் உருவாக்கப்பட்ட போது முதல் முறையாக சகல மாணவர்களுக்கும் ஆங்கில மொழி போதனா மொழியாகக் கொண்டுவரப்பட்டது. நான் பீடாதிபதியாக இருந்த பொழுது பலவேறு சவால்களுக்கு மத்தியில் ஆங்கில மொழியினை போதனா மொழியாக நடைமுறைப்படுத்தினேன். இதன் விளைவனை ஒரு சில வருடங்களில் மாணவர்களும் உணர்ந்து மிகவும் சிறப்பாக ஆங்கிலக் கல்வியின் சவால்களை எதிர் கொண்டனர். இதன் விளைவாக இலங்கையிலும் ஏனைய நாடுகளிலும், வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களிலும் வேலைவாய்ப்பினையும் உயர்கல்வியினையும் மேற்கொண்டு வருகின்றனர். எமது பல்கலைக்கழகம் இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு ஆங்கில மொழிமூலக் கற்பித்தலுக்கு ஒரு முன்னோடியாகத் திகழ்ந்தது என்பதையிட்டு பெருமையடைகின்றோம். கல்வி பயிலும் ஒவ்வொரு மாணவனதும் ஆளுமையினதும் ஒரு மாற்றத்தை எம்மால் உணரக்கூடியதாக இருந்தது.

இரு மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மாணவர்களுக்கு மொழி ரீதியான நம்பிக்கையை நாம் வலுப்படுத்தமுடியும். பல்கலைக்கழகத்தில் முதலாம் ஆண்டு கற்பித்தலில் இரு மொழி முறையை நடைமுறைப்படுத்தி வெற்றி கண்டிருக்கின்றோம். ஆகையால் இன்றைய காலகட்டத்தில் இரு மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**மா.நடராசசுந்தரம்**
**[ஓய்வுநிலைப் பேராசிரியர்]**
**யாழ் பல்கலைக்கழகம்**

## சமூகக் கல்வி மன்றம்



## ஆங்கில மன்றம்



# மாணவர் கல்வியும் ஒழுக்கமும்

ஏழுவகைப் பிறப்பினுள்ளும் மானிடப் பிறப்பு ஒன்றே மாண்பு மிக்கது. உயிரகளெனப் படுபவை ஓரறிவு முதல் ஆறறிவு வரையுள்ளன. ஆறாம் அறிவான சிந்தித்துச் செயலாற்றும் பகுத்தறிவு மிக்கவர் மானிடர்களே. மாணவப் பருவத்தைத் தாண்டியே ஒருவன் முழு மனிதனாக உருப்பெறுகின்றான். இவனிடம் நன்று, தீது, நீதி, அநீதி எனப் பகுத்தறியும் ஆற்றல் உண்டு. இதனாலன்றோ வள்ளுவரும் "சென்றவிடத்தாற் செலவிடா தீதொரீ" நன்றின் பாலுய்ப்பது அறிவு எனக் கூறினார். இத்தகைய மனிதன் மாணவப் பருவம் முதல் வாழ்நாள் முழுவதுமே ஒழுக்கத்தை உயிரினும் மேலாக மதித்தல் வேண்டும் "ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் "குறல் 131)

என்றார் வள்ளுவர் நல்லொழுக்கத்தின் சிறப்பைக் கூறும் விடத்து

" நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்
தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும்"

- குறள் 138

எனக்கூறி குறிப்பிட்டுள்ளார். மாணவப் பருவம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. இளமையிற் கல்" இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என ஆன்றோர் மொழிந்தனர். இளமையிற் கல்வியும் ஒழுக்கமுமே என்றும் தொடர்ந்து இறக்கும் வரைக்கும் இருக்க வல்லது. இதனாலேயே "தொட்டிலிற் பழக்கம் சுடுகாடு வரைக்கும்" என ஆன்றோர் கூறினர்போலும் அன்பு, ஆதரவு, ஆண்மை, உணர்வு, ஆக்கப்பண்பு, தர்மவழி நடத்தல் உண்மை, இகழ்ச்சி விலக்கல், பண்புடைமை பகைவிலக்கல் தேவையறிதல் பணிவு பொறையுடைமை, சேவை நோக்கு, முன்னோர் அடிச்சுவடுகளை அறிந்து நடத்தல் தெய்வசிந்தனை அமுதவாக்குகளைக் கற்றறிந்து நடத்தல் ஆறு பகை நீக்கி ஆறை உணர்ந்து வாழும் வழிநடத்தல் கண்கண்டதெய்வங்களை உணர்ந்து அத்தெய்வங்களைப் போற்றி செயலாற்றி வாழ்தல், ஆகிய யாவற்றையும் மாணவப் பருவத்திலேயே குறிப்பாக கட்டிளமைப் பருவத்தில் வளர்த்துக் கொள்ளல் வேண்டும். மனிதன் அறநெறி பிறழா ஒழுக்கத்தினாலேயே சிறப்படைகின்றான். இதனை மாணவர் நன்குணர்ந்து கொள்ளல் வேண்டும்.

கல்விக்கு எல்லையில்லை: கல்வி என்பது வாழ்க்கை அதை அடையக்கூடிய ஒரே வழி சுய அனுபவமும் அறிவு சேர்க்கும் ஊக்கமும் தளராத அறிவுத் திறனுமாகும்" என்றும் அத்தகைய வாழ்க்கையிலிருந்து பெறும் அறிவு அனுபவத்திலிருந்து உதிக்கவேண்டும். அந்த அறிவு சிந்தனையைத் தூண்டவேண்டும். சிந்தனைத் தூண்டல் புதுத்தன்மை பெற்று முழுமை பெற்றதாக எல்லோருக்கும் உரிய பொதுச் சொத்தாக மாறவேண்டும். எனக் கூறியுள்ளார் பிளேட்டோ என்னும் தத்துவவியலாளர். மேலும் அகிலத்தின் அணையாத விளக்காகிய அறிவுச் சுடரே மக்களுக்கு உண்மையான அணிகலன் எனக்கூறிய சோக்கிரட்டீஸ் கல்வி மூலமும் கல்விப் பயிற்சி மூலமும் உலக மக்களில் 95% சதவீதத்தினரை உயர்வடையச் செய்யலாம் எனக் கூறியுள்ளார். சுவாமி விவேகானந்தர் "மனிதனிடம் மறைந்து கிடக்கும் பரிபூரணத்துவத்தை வெளிப்படுத்தவதே கல்வி" எனக்கூறியுள்ளார். "கல்வி என்பது வாழ்க்கைக்கு ஆயத்தப் படுத்தவதல்ல. அதுவே வாழ்க்கை என்ற கருத்தை முன் வைத்தார் தத்துவவியலாளர் ரூசோ.

பிள்ளையின் பருவத்திற்கேற்ப கல்வி புகட்டப்படவேண்டும். அதனூடாக ஒழுக்க நெறிகள் புகுத்தப்படவேண்டும். குழந்தைப் பருவத்திலேயே பிள்ளைக்கு உடலாலும் உள்ளத்தாலும் காப்புணர்ச்சி அளிப்பவர்களாகத் தாயும் தந்தையும் இருத்தல் வேண்டும். பிள்ளையின் உடல் வளர்ச்சிக்கும் புலனுணர்ச்சிக்கும் உறுதுணை புரிய வேண்டும். மனிதப் பண்புகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து சமூகத்தோடு இணைந்து வாழும் அறிவினைப் பெறுவது கட்டிளமைப் பருவமாகும். இப்பருவத்திலேயே சமய, அறநெறி பற்றிய கருத்துக்க ளைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். மேலும் கட்டிளமைப் பருவத்தில் மாணவர் குழுக்களாக சகபாடிகளுடன் சேர்தல், பொறுப்பற்ற தன்மை வீண் பொழுதுபோக்குகள், கல்வி கடமைகளில் ஊக்கமின்மை ஆகிய நெறிபிறழ் நடவடிக்கைகளிலும் ஈடுபடச் சந்தர்ப்பமுண்டு, இப்பருவத்தில் அவர்களை நன்னெறிப் படுத்தும் பொறுப்பு பெற்றோர் ஆசிரியர்கள் மூத்தோர்களின் செயற்பாடுகளிலேயே தங்கியுள்ளது.

கல்வி ஒருவனை நல்ல மனிதப் பண்புடையவனாகவும் குடிமகனாகவும் ஆக்க வேண்டும். ஆகவே கல்வி நல்ல மனிதரை உருவாக்கி அவர்களினூடாக நல்ல சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என ரூசோ குறிப்பிட்டுள்ளார். ஜோன் ரூயி " கல்வி என்பது என்றும் வளர்ந்து கொண்டிருப்பது. சூழ்நிலை மாற்றங்களுடன் மாறிக் கொண்டிருக்க வேண்டியது. என்றும் இயங்கிக் கொண்டிருப்பது. எனவே கல்விக்கு இறுதி இலக்கு என ஒன்றும் இல்லை. வளர்ச்சிக்கு வழிவகுக்கும் கல்வி வளர்ந்து வரும் கல்விக்கே வழிகாட்ட வேண்டும். செயல் அனுபவ மூலம் பெறப்படும் அறிவே உண்மையானது. ஆகவே அறிவு என்பது வாழ்க்கையின் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு இயங்குவதாகும். வாழ்க்கைக்கு ஆயத்தப்படுத்துவதல்ல. வாழக்கையின் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு இயங்குவதாகும். வாழ்க்கைக்கு ஆயத்தப்படுத்துவதல்ல. வாழ்க்கையே கல்வி கல்வியே வாழ்க்கை என்றும் " தனியாட்களின் திறன்களை விருத்தி செய்து அவற்றிற்கேற்பச் சூழலைப் பயன்படுத்தி அவனுக்குதவுவதே கல்வி என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும் கல்வி என்பது முன்னேற்றத்தை நோக்கி வளர்ச்சி பெறுவதாக அறிவியல் துறைகளையும் முறைகளையும் மென்மேலும் பயன்படுத்துவதாக அமைதல் வேண்டும். மகாத்மா காந்தி அவர்கள் "கல்வி என்பது குழந்தைகளிடமிருந்து முழு மனிதனை வெளிக்கொணர்வது. முழு மனிதனை உருவாக்குவது அவனுடைய ஆளுமை. எனவே மனிதனின் உடல், உள்ளம் ஆன்மா இருதயம் என்பவற்றை ஒருமித்த வகையில் விருத்தி செய்து ஆளுமை அடையச் செய்வதே கல்வியின் பயனாகும். வங்கக்கவிஞர் தாகூர் அவர்கள் ஆத்மீகம் ஒழுக்கம் படைப்பாற்றல் போன்றன யாவும் அழகியலின் தன்மையாகும். வாழ்க்கை என்பது அழகுணர்வில் வளர்வது அழகுணர்வே ஆளுமையின் முழுமை அழகுணர்வு மனித உள்ளத்தின் வெளியீடு எனக் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் மனித உள்ளத்தை சிந்தனையை அறிவை வளர்ப்பது மதம். எனவே கல்வி என்பது இறைவனைத்தேட, ஆத்மீக இன்பம் தேட வழிவகுக்க வேண்டும் எனக்குறிப்பிட்டுள்ளார். இதனாலன்றோ கல்வியின் பயன் " அறம் பொருள் இன்பம் வீட்டை நாற்பயனே" என்றும் " கட்டறுத்து வீடு பெறல்" நம்முன்னோர் கூறினர் போலும்.

கல்வியின் பயன் ஒழுக்கம் இது ஒரு குலத்தக்கோ இனத்துக்கோ உரிய சொத்து அன்று கீதையில் அபயம், எண்ணத்தூய்மை, அறிவிலும் புத்தியிலும் விடாமுயற்சி ஈகை, தன்னடக்கம் வேள்விகள் செய்தல், வேதத்தைக் கற்றல், தவம், நேர்மை அஹிம்சை, சத்தியம், கோபமின்மை, பற்றற்ற தன்மை, சாந்தம் அவதூறு பேசுவதை வெறுத்தல் உயிர்களிடத்தில் அன்பு பூண்டொழுகல், கவர்ச்சியின்மை, பெருந்தகைமை தாழ்மை நிலையாயிருக்கும் தன்மை, ஆண்மை, பொறுமை, கபடமின்மை, வீண்பெருமையின்மை என்பன இறைத்தன்மை பொருந்திய பண்புகளாகும் எனக் குறிபிடப்பட்டுள்ளது. இவை யாவும் தூய்மை தன்னடக்கம் பற்றில்லாமை

சத்தியம் அகிம்சை, ஆகிய ஐந்து அறவொழுக்கங்களின் பல்வேறு வடிவத் தோற்றங்களாகும்.

உள்ளம் உடல் யாவும் தூய்மை பெற்றிருத்தலே ஒழுக்கத்தின் முதற்படி உணவு உட்கொள்ளுதல், உடைஉடுத்தல், மற்றைய அன்றாடப் பழக்க வழக்கங்கள் யாவும் மனதைக் கட்டுப்படுத்தியிருப்பது. இவை யாவும் மனதைத் தூய்மைப்படுத்தியிருப்பது. முதன் முதலில் " நீ அருந்தும் எதையும் இறைவனுக்குச் சமர்ப்பி இறைவனுக்குச் சமர்ப்பிக்கப்படாத உணவை ஒருவன் அருந்தக் கூடாது உன் உணவு எப்படியோ அப்படியே உன் இரத்தமும் தூய மனம் பிரேம பக்தியை உண்டாக்குகின்றது. என்பது அன்னை சாரதா தேவியின் அருள்வாக்கு. "உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்" என்ற நிலையில் உடலையும் உள்ளத்தையும் தூய்மைப்படுத்தும் பயிற்சியை மாணவப் பருவத்திலேயே பெறல் வேண்டும்.

பண்டைய கல்வி முறையில் குருகுலக்கல்வி முக்கியம் பெற்றிருந்தது. மாணவரைப் பொறுத்தவரை பிரமச்சரியம் முக்கியம் பெற்றது. 5 வயது தொடக்கம் 18 வயது வரையுள்ள மாணவரே கல்வி கற்றனர். குருவின் இல்லத்திற்குச் சென்று அங்கு தங்கியிருந்து குருவிற்குப் பணிவிடைசெய்தே கல்விகற்றனர். இதற்கு பல்வேறு வரலாறுகள் சான்று பகர்கின்றன. குருவிற்கு "கையுறை" கொடுக்கும் வழக்கம் இருந்தது. கற்றலில் புலனடக்கத்திற்கு முக்கியம் கொடுக்கப்பட்டன. இதற்கான பயிற்சிகளும் வழங்கப்பட்டன. குருவிடம் நிலமலை நிறைகோல் மலர்நிகர் மாட்சிக்குரிய தன்மை காணப்பட்டது. சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல், நவின்றோர்க்கினிமை, நன்மொழி புணர்த்தல் ஓசையுடைமை, ஆழமுடைத்தாதல் ஆகிய பண்புகள் அவர்கள் கற்பித்தலிற் காணப்பட்டது. பணியுமாம் என்றும் பெருமை என்பதற்கிணங்க மாணவர்களிடம் அடக்கமும் பணிவும் காணப்பட்டது. அத்துடன் மாணவர்களிடம் சாந்தம், தயை பொறுமை, ஈகை, தூயசிந்தனை வாய்மை, போன்ற குணங்களும் மிகுந்து காணப்பட்டது.

கல்வி மக்களிடையே (மாணவரிடையே) அபிவிருத்தியில் விருப்பம், மாற்றங்களை ஏற்படுத்தும் மனோநிலை, ஆக்கம் கொடுக்கும் நடத்தைக் கோலங்கள் ஆகியவற்றை வளர்த்து அவர்களின் மனப்பாங்கில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். தன்னம்பிக்கை தொடக்கம் ஆற்றல், துணிந்து செயலாற்றல் ஆகியன உருவாதல் வேண்டும். கல்வி ஒரே உலகம் என்ற நிலையில் மேன்மேலும் விருத்தியடைதல் வேண்டும்.

மனிதன் தன்னலமறுப்பு அறிவு நோக்கு, சகிப்புத்தன்மை, நீதி உணர்வு உணர்வுக் கூர்மை, அடக்கம் ஈடுபாடு ஆகியன கொண்டவராக விளங்கவேண்டும். மனிதனை தனிமனிதனை, நிறைமனிதனாக உருவாக்குவதற்குக் கல்வி உதவவேண்டும் மாணவர் அப்பருவம் கடந்ததும் நிறைமனிதனாக ஒழுக்கசீலராக வையத்துள் வாழ்வாங்கு வாழ வழி காட்டுவதாகக் கல்வி அமையவேண்டும் இன்றைய மாணவரே நாளைய தலைவர். "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா" என்பர். எனவே சிறுபராயத்திலிருந்தே நல்ல ஒழுக்க சீலராகப் பயிற்றப்பட்டு நற்பிரஜையாக "கல்வியின் குறிக்கோள்" நற்பிரசையை உருவாக்குதல்" என்றவாக்கிற்கிணங்க மாணவர் உருவாகுவார்களாக!

**செல்வி. பாலாம்பிகை கந்தசாமி**
**ஓய்வுநிலை அதிபர்.**

# சிக்மன்ட் புறொய்டின் ஆளுமைக் கோட்பாடு

உளவியல் மனிதன் குறித்தான் பல்வேறு எண்ணக்கருக்கள் பற்றி ஆராந்து பல புதிய உண்மைகளை வெளிக்கொணர்ந்து வருகின்றன. இந்தடிப்படையில் ஆளுமை பற்றிய எண்ணக்கருவும் உளவியல் வரலாற்றில் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தன. ஆளுமை என்றால் என்ன? என்பதனை ஆராய்ந்த உளவியல் அறிஞர்கள் பல்வேறுபட்ட விளக்கங்களை அளித்துள்ளனர். அவை பற்றி நோக்குவதாகவும் இக்கட்டுரை அமைகின்றது. குறிப்பாக மனித வாழ்க்கையில் சாதாரணமாக ஒருவரைப் பற்றி உரையாடும் போது அவர் சிறந்த ஆளுமை உடையவர் என்கின்றோம் இங்கு ஆளுமை என்றால் என்ன? என்பது பற்றிய வரைவிலக்கணத்தை நோக்கும் போது, பொதுவாக ஆளுமை என்பது மனிதனது நடத்தையும் அவனது குண இயல்புகளையும் குறிப்பதாக அமைகின்றது.

சாதாரணமான கருத்தில் ஒருவரது உயரம், குணாதிசயம், செயல்கள், எண்ணங்கள், உடலமைப்பு, நடை, உடை, பாவனை போன்றவற்றைக் கொண்டு ஒருவரை ஆளுமை உடையவர் என்கின்றோம். மனிதனுடைய வாழ்வில் எதிர்ப்படும் நிலைமைகளில் தனக்கே உரித்தான முறையில் ஒவ்வொரு மனிதனும் செயற்படுவதை நாம் பார்க்கின்றோம். இவ்வாறான செயற்பாட்டு முறைகள் அவனது ஆளுமையின் தன்மையினை வெளிப்படுத்துகின்றன. ஆளுமை என்பதனை சுருக்கமாக "ஒருவரை தனித்துவமானவராக ஆக்கும் எண்ணங்கள், உணர்வுகள், நடத்தைகள் என்பவற்றினுடைய தொகுப்பாகும்" எனக் குறிப்பிடப்படுவதுமுண்டு.

ஆளுமை என்பதனை ஆங்கிலத்தில் personality என்பர். இதன் இலத்தின் சொல்லான persona எனும் அடியிலிருந்து தோற்றம் பெற்றது எனலாம். இதனது பொருள் முகமூடி என்பதாகும். அதாவது நடிகன் தான் ஏற்றிருக்கும் பாத்திரத்தின் இயல்பிற்கேற்ப தனது உண்மையான உருவத்தினை மறைப்பதற்காக அணிந்திருப்பதை குறிக்கும். இதன் பண்டைய பொருள் ஒருவனது பண்பைக் குறிக்கும் வெளித் தோற்றமாகும். தற்காலத்தில் இச்சொல் விரிவான பொருளைப் பெற்று ஒருமனிதனின் சீரான தனிப்பட்ட நடத்தை முறையை குறிப்பதாயிற்று. வரலாற்றின் அடிப்படையில் ஆளுமை என்பது ஒருவர் பூணும் வேடம், அவரின் வகிபங்கு என்பதைக் குறிக்கின்றது.

ஆளுமை பற்றிய சில உளவியலாளர்களின் கருத்துக்கள் பின்வருமாறு, சிரில் பேட் எனும் அறிஞர் "ஆளுமை என்பது ஏதோ ஒரு சமுதாய சந்தர்ப்ப சூழ்நிலையில் அவர் துலங்கும் போது அவர் வெளிப்படுத்தும் உடல், உள செயற்பாடுகளின் ஒழுங்கமைப்பாகும்".

**N.S.**மன் என்பவர் "தனிப்பட்டவர்களிடம் காணப்படும் அமைப்புக்களதும், நடத்தை கோட்பாடுகளினதும் விருப்பு, ஆற்றல், திறமைகள், உளச்சார்பு என்பவற்றின் மிகச் சக்தியுள்ள பண்புகளின் ஒன்றிணைப்பாகும்".

ஆல்போட் எனும் அறிஞர் "ஆளுமை" என்பது தன் வாழ்க்கையில் எதிர்ப்படும் நிலைமைகளில் தனக்கே உரித்தாக முறையில் ஒவ்வொரு மனிதனும் செயற்படுவதை காண்கின்றோம். இத்தகைய செயற்பட்டு முறைகள் அவனது ஆளுமையின் தன்மையை வெளிக்காட்டுகின்றது.

**கால்யுங்** எனும் உள மருத்துவர் "பிறருடன் ஏற்படுத்தும் தொடர்புகளில் ஆளுமை என்பது நபருக்கு நபர் வேறுபடுகின்றது" எனக் குறிப்பிட்டார். இவற்றை இரண்டாக வகுத்து ஆராய்ந்தார்.

| **அகமுகி** | **புறமுகி** |
|---|---|
| கதைப்பது குறைவு | கலகலப்பாக கதைத்தல் |
| கூச்சப்படுதல் | கூச்சப்படாமை |
| தனியாக பணியாற்ற விருப்பம் | பிறருடன் செயலாற்ற விருப்பம் |

**கேலன்** எனும் அறிஞர் நான்குவகை மனப்பான்மைகளை வருணித்துள்ளார். அவை, சிடுமூஞ்சி மனப்பான்மை, அழுமூஞ்சி மனப்பான்மை, சிரிமுக மனப்பான்மை, தூங்குமூஞ்சி மனப்பான்மை என்பனவாகும். எனவே ஆளுமையை இத்தகைய மனப்பான்மைகளின் அடிப்படையிலும் வகைப்படுத்தலாம் என்பது இவரின் கருத்தாகும்.

உளவியல் வரலாற்றில் புரட்சிகரமான மாற்றத்தினை ஏற்படுத்தியவர்களுள் சிக்மன்ட் புறொய்ட் குறிப்பிடதக்கவராவார். உளப்பகுப்பாய்வு, ஆளுமை பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொண்டு பல புதிய சிந்தனைகளை வெளிக் கொணர்ந்தவ ராவார். மனித மனத்தின் செயற்பாடுகளையும் மனதைப் பீடிக்கும் நோய்களையும் கண்டு உணரும் முறையினை உளப்பகுப்பாய்வு கோட்பாடினூடாக தெளிவுபடுத்தியதோடு மனித மனம் பற்றிய கருத்தினை அடிப்படையாகக் கொண்டு ஆளுமை பற்றிய எண்ணக்கருவை தெளிவாக விளக்கியிருந்தார். அதாவது ஒருவரின் உள்ளம் எப்படி அமைகின்றதோ அதன்படியே அவரின் ஆளுமையும் அமைந்திருக்கும் என்ற கருத்தினை அடிப்படையகக் கொண்டு ஆளுமைக் கோட்பாட்டை விவரிக்கிறார். புறொய்ட் ஆளுமையை பின்வருமாறு மூன்றாகப் பிரித்து விளக்கினார்.

1. ID-உள்ளார்ந்த உந்தல்
2. EGO-அகம்
3. SUPEREGO-அதியகம் என்பதாகும்.

**ID (உள்ளார்ந்த உந்தல்)**

ஆளுமையினை அடித்தளம் இட் என்பதாகும். இட் எனும் சொல்லிற்கு தனி மனிதனின் தூண்டல் உணர்வுகள் என்று பொருள்படும். தன்னை அறியாமலேயே உணர்ச்சி வசப்படுவதைச் சுட்டும். மனித ஆளுமையின் வலிமைமிக்க பகுதியாக இது விளங்குகிறது. இதிலிருந்து தான் அகம், அதியகம் வேறுபட்ட நிலைகளில் வளர்ந்து செல்கின்றது. இட் அடிப்படையில் நனவிலி சார்ந்தது.இதனை இன்பம் காணும் தத்துவம் (The pleasure principle) என்பர். குறிப்பாக குழந்தைப் பருவத்தில் இவ்வின்பம் காணும் தத்துவத்தின் ஆதிக்கம் அதிகமாகவே

காணப்படுகிறது. என்பது புறோய்டின் கருத்தாகும்.(The ID is the only component that is present from birth. This aspect of personality is entirely unconscious and includes of the instinctive and primitive behaviors. According to Sigmund Freud, the ID is the source of all psychic energy, making it the primary component of personality)

இட் உடனடியாகக் கீழ்த்தர மகிழ்ச்சி பெறுதலை நோக்கமாக் கொண்டு விளங்குகிறது. இந் நிலையின் சக்திகள் முழுமையாக நனவிலி நிலைப்படுபவை. இட் என்பது ஒருவருக்கு நிலைப்படுபவை. இட் என்பது ஒருவருக்கு பிறப்பிலேயே கிடைக்கும் ஒரு சிலைமையாகும். இது நனவிலியை ஒத்ததாக இருப்பதனால் அதன் தன்மை மனதில் இருப்பதனை உணர்வதில்லை. சாதரண உரையாடலில் உனக்கு ஆணவம்,திமிர் பிடித்துவிட்டது எனக் கூறுவதும் இட்டின் வெளிப்பாடே யாகும். இதனையே கீழைத்தேய தத்துவங்கள் குறிப்பாக சித்தாந்த தத்துவம் மும்மலங்களினூடாகத் தெளிவுபடுத்தியிருந்தது.பொதுவாக ஆணவம் என்பது மனிதன் பிறக்கும் போது கூடவே பிறக்கின்றத என்பது சித்தாந்தத்தின் முடிந்த முடிவாகும்.

மேலும் நீதி, நேர்மை, நியாயம் என்பவற்றை ஏற்காது உடனடி தேவைகளை நிறைவேற்றும் இட் மனிதனது உடலில் காணப்படும் கவர்ச்சி, பகை போன்றவற்றை உள்ளடக்கியதாக விளங்குகிறது.சிக்மன் புறொய்ட் இட்டினை லிபிடோ என்றும் கூறுகிறார். அதாவது குழந்தைப் பருவத்தில் ஒவ்வொரு கட்டத்திலும் மாறுதலுக்குட்பட்டு அந்தந்தக் கட்டத்திற்கு ஏற்ப லிபிடோ வெளிப்படுகிறது எனக் குறிப்பிட்டார். இதனையே லிபிடோ வளர்ச்சி என்றார் புறொய்ட்.

மேற்படி லிபிடோ வளர்ச்சியினையே புறொய்ட் உளர்பாலியல் வளர்ச்சி என்றும் கூறுகிறார். இந்தடிப்படையிலேயே குழந்தையின் பாலியல் வளர்ச்சிக் கட்டங்களை வாய்வழி இன்பம் (வாய்வழிமூலம் இன்பத்தைப் பெற்று கொள்ளு தலைக் குறிக்கின்றது. தாயின் முலைக்காம்பை சூப்புதல், விரல் சூப்புதல், பொருட்களை வாயில் போட்டு கடித்து நொறுக்குதல் இதன் பாற்படும்),

**குதவழி இன்பம்** (இப்பருவத்தில் குழந்தை மலம், சலம் கழிப்பதன் மூலம் இன்பத்தை பெற்றுக் கொள்கிறது. மாறாக பிள்ளைகளுக்கு கழிப்பதை ஒழுங்குகளைக் கடைப்பிடிக்க பெற்றோர் கட்டளையிடுவார்களானால் குழந்தை யின் இன்பம் தடைப்படும்), இலிங்கவழி இன்பம் (பாலியல் உறுப்புக்களை கையாளுவதன் மூலம் இன்பத்தை பெற்றுக் கொள்ளுகிறது), மறைபருவ காலம் (இப்பருவத்தில் பிள்ளை தமது பாலியல் உறுப்புக்களை மறைத்துக் கொள்ளுகிறது), பாலியல் வளர்ச்சி நிலை (எதிர்பாலாரிடையே முதிர்ச்சி நிலைப் பட்ட விருப்புக்களை, ஆசைகளை, காதலை வெளிப்படுத்துகின்ற பருவமாக விளங்குகின்ற பருவமாக விளங்குகிறது) எனப் பிரித்து விளக்கிக் காட்டினார்.

**EGO[அகம்]**

இட் இற்கு அடுத்த நிலையாக அகம் காணப்படுகின்றது. அகமானது திட்டமிட்டும் பிரச்சினைகளளை கட்டுப்படுத்தும் பண்புகளாக காணப்படுகின்றது.

அதாவது உடல் வேட்கைக்கும் சமுதாய கட்டுப்பாட்டுக்குமிடையில் சமாதானப் படுத்தி வைப்பதுதான் இதன் வேலையாகும். புத்திசாலித்தனம், ஒழுங்கு போன்ற தன்மைகளைக் கொண்டதாக அகம் விளங்குகின்றது.

மேலும் இட்டினது உள்ளீடுகளைக் கொண்டிருக்கும் அகம் இட்டினது செயற்பாடுகளை புற உலகிற்கு பொருந்தக்கூடிய அளவில் உருவாக்க முற்படும். இட்டினது தீவிர தன்மையை மிதப்படுத்தவும் முயலும். இட்டானது மகிழ்ச்சியை குறியாக கொண்டிருக்கையில் அகம் யதார்த்தம் குறித்த கவனத்தை செலுத்துகின்றது. இட் ஒன்றைச் செய்ய வேண்டும் என்ற நோக்கோடு தொழிற்படும். எடுத்துக்காட்டாக குறிப்பிட்ட நபருக்கு மலமோ அல்லது சலமோ கழிக்க வேண்டிய நிலையேற்படின் அதனை எவ்விடத்திலாவது தமது ஆசையை பூர்த்தி செய்ய முற்படும். ஆனால் அகம் அவ்வாறல்லாது அதனை ஒழுக்கமான முறையில் செயற்படுத்த முற்படும். இதனால் இது மெய்மைத் தத்துவம் எனப்படும். இதன் பிரதான பங்கு மிகத்தீவிரமான பங்களிப்பையும் ஏற்றுக் கொள்ள முடியாத தூண்டல்களின் போக்கையும் மிதப்படுத்தும்.

ஒன்றைச் செய்ய வேண்டும் என்ற நோக்கோடு தொழிற்படும். எடுத்துக் காட்டாக குறிப்பிட்ட நபருக்கு மலமோ அல்லது சலமோ கழிக்க வேண்டிய நிலையேற்படின் அதனை எவ்விடத்திலாவது தமது ஆசையை பூர்த்தி செய்ய முற்படும். ஆனால் அகம் அவ்வாறல்லாது அதனை ஒழுக்கமான முறையில் செயற்படுத்த முற்படும். இதனால் இது மெய்மைத் தத்துவம் எனப்படும். இதன் பிரதான பங்கு மிகத்தீவிரமான பங்களிப்பையும் ஏற்றுக் கொள்ள முடியாத தூண்டல்களின் போக்கையும் மிதப்படுத்தும்.
(The Ego is component of personality that is responsible for the dealing with reality. According to Freud the Ego develops from the ID and e ensures that impulses of the ID can be expressed in a manner acceptable in the real world)

மேலும் அகமானது இட்டிற்கும் அதியகத்திற்கும் இடையே பொறுப்பான அலுவலராக செயற்படுகின்றது. இது மனிதனை தண்டனையிலிருந்து தப்ப வைத்துக் கொள்கின்றது. எனவே தான் அகம் நிறை வேற்று அதிகாரியாக செயற்படுகின்றது. எந்தெந்த நேரத்திற்கு எது தேவையென்பதையும் அறிந்து செயற்படுகின்றது.

**SUPER EGO**(அதியகம்)

ஆளுமையின் மூன்றாவது கூறு இதுவாகும். குறிப்பாக அதியகம் ஒழுக்க நியமங்களின் உறைவிடமாக சித்திரிக்கப்படுகின்றது. சமூக இலட்சியங்களது பிரதிநிதியாக இது காணப்படுகின்றது. இதை மனச்சாட்சி என்றும்கூறுவர். அதியகம் ஏறத்தாள 6 வயதிலிருந்து எழத் தொடங்கியது.

மேலும் பெற்றோர், ஆசிரியர், சமூகம், அறநூல் வழியாக பெற்றுக் கொண்ட ஒழுக்க ஆதாரங்களது உறைவிடமாக காணப்படுகின்றது. சமூக இலட்சியத்துக்கு இசைவாக சரி பிழையை உணர்ந்து நடக்கும். ஆளுமையின் கூறு இதுவாகும். மனித நடத்தையை சீர் தூக்கி பார்க்கும் நீதிபதி போல் இது விளங்குகின்றது.

அதாவது மனச்சாட்சியினூடாக சட்டதிட்டங்களை பேணி நடத்தையை கட்டுப்படுத்துகின்றது.

(That last component of personality to develop is the super Ego .the Super Ego is the aspect of personality that holds all of our internalized moral standards and ideals that we acquire from both parents and society our sense of right and wrong the super Ego provides guidelines for making judgments)

அதியகம் பாரம்பரிய விழுமியங்களின் பிரதிநிதியாக செயற்படுகின்றது. அதிகளவு முன்நனவு மனம் சார்ந்தது.நான் செய்வது அவசியம் அல்லது செய்ய வேண்டும் என்ற வகையில் சிந்தித்து செயற்படுகின்றது. இட் எனக்கு வேண்டும் என்ற வகையிலும் அகம் என்னால் முடியும் என்ற வகையிலும் செயற்படும். அத்துடன் இட் ஆனது திருப்தியை நோக்காகக் கொண்டு நல்ல விடயங்களை புறக்கணிக்கும்.ஆனால் அதியகம் ஒழுக்கமாக வாழ வைக்கும். எரிக் பெர்ன் என்பவர் குறிப்பிடுகையில் “இட் குழந்தைத் தன்மைக்கும் அகம் பெற்றோரது நிலைமைக்கும் அதியகம் முதிர்ச்சி பெற்ற ஒருவனின் தன்மைக்கும் ஒப்பான தாகும் என்கின்றார்“ இவ்வாறாக புரொய்டின் ஆளுமை பற்றிய கருத்தாக்கங்கள் வரலாற்றில் புரட்சிகரமான மாற்றம் ஏற்பட வழிவகுத்தன எனலாம்.

**திரவியநாதன் திலீபன்**
*B.A(Hons) sp.in (phy),*
*PGDE (Psy), Dip.in (couns) M.phil(R)*
பேராதனைப் பல்கலைக்கழகம், பேராதனை.

# வணிக மன்றம்



# பழைய மாணவர் சங்கம்



# இலங்கைத் தமிழர் பொருளாதார அபிவிருத்தியும் அரசியல் செயற்பாடுகளும்

புவியியல் ஒருமைப்பாடுடைய இலங்கைத் தீவை இட ரீதியாக பங்கிட்டுக் கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கும். இலங்கைத் தமிழர்களும் சிங்களவர்களும் இனத்துவப் பிணக்குகளிற்குட்பட்டு அதன் வழி ஊற்றெடுத்த பொருளாதார நெருக்கடிகளில் மாண்டு போயுள்ளனர் என்பது நாம் எல்லோரும் அறிந்த உண்மையே. இவ்வாறானதொரு சிக்கலிருந்து மீண்டு கொள்வதற்குப் போராடுகின்ற இலங்கைத் தமிழர்கள் தமது அரசியல் ரீதியான சமவுரிமைகளைப் பெற்றுக் கொள்ளவும் தமது பொருளாதாரத்தை சுயாதீனமாக முகாமை செய்யவும் தேவையான தகைமையைப் பெற்றுக் கொள்ள தம் சாதனையை மீட்டிப் பார்த்து தந்திரோபாயங்களை பட்டறிவின் பாற்பட்டு அவற்றை உரியவாறு மறு பரிசீலனைக்குட்படுத்துவதும் அவசியமாகும். இலங்கைத் தமிழர்கள் எதிர் நோக்கும் பிரச்சனை இலங்கையின் காலணித்துவ ஆட்சிக் காலத்திலிருந்தே முடுக்கி விடப்பட்டுள்ளதால் முதற்கண் அவை பற்றியும் அறிந்து கொள்வது அவசியம் என்பதை நம்மவர்கள் உணர வேண்டும்.

நெருக்கடிக்குள்ளாகியுள்ள இலங்கைத் தமிழர்களின் அரசியல் பொருளாதாரத்தை முறைசார் அணுகு முறைகளைப் பயன்படுத்தி அதன் பொதுவான நிலைப்பாட்டை உறுதி செய்வதன் மூலம் தமிழர்களின் அரசியல் பொருளாதாரத்தை மீட்டெடுக்க வேண்டுமே தவிர மேல்வாரியானதொரு கண்ணோட்டத்தின் மூலம் அதன் யதார்த்தத்தை படம் பிடித்துக் காட்டி உரிய தரப்புக்களுடன் தீர்வை நோக்கி நகர வேண்டும் என்பது இன்றுள்ள தேவைப்பாடாகும். ஆனாலும் இவ்வாறானதொரு விரும்பத்தக்க சூழலின் மறு அந்தத்தில் இலங்கை அரசாங்கம் நின்று கொண்டு விரும்பத்தகாத ஒரு விதத்திலே பெருந்தொகையான பாதுகாப்புச் செலவினங்களைச் செய்து இலங்கையின் சமூக அரசியல் பொருளாதாரம் ஒரே விதமாகவே உள்ளது எனவும் அது ஒரு விடயமாகும். இவ்வாறான தொரு முயற்சியே தமிழர்களின் மனதில் அவ நம்பிக்கையைத் தோற்று வித்துள்ளது. என்று கூறினால் அது மிகையாகாது. அளவு மீறிய இத்தகையதொரு அரசியல் செயற்பாடானது காலணித்துவ காலத்தி லிருந்து தத்தெடுத்துக் கொண்ட அரசியல் பொருளாதாரத்தை செப்பனிடாது மேலும் மேலும் மோசமாக்கிக் கொள்ளும், நிலையினையே தோற்றுவிக்கின்றது எனலாம். இவ்வாறானதொரு அரசியல் செயற்பாடுகள் தமிழர் பொருளாதாரத்தை மாத்திர மல்லாமல் முழு மொத்த இலங்கையின் பொருளாதாரத்தையே ஆழக்குழி தோண்டிப் புதைப்பதாக உள்ளது. ஆகவே இன்று நம் முன்னுள்ள கடப்பாடு என்னவென்றால் இத்தகைய பிரச்சினைகளின் தோற்றுவாய்களை இனம் கண்டு கொள்வதும் அதன் வழி இலங்கைத் தமிழர்கள் அனைவரினதும் அறிவுசார் அனுபவமாக மாற்றி அப்பிரச்சினை களை வென்றெடுக்கும் ஒரே கூட்டமைப்பாகத் தோன்றி தமிழர் பொருளாதாரத்தை முன்னகர்த்தி அதன் பால் இலங்கையின் பொருளாதரத்தை உயர்த்தி நிற்கும் முன் கொழுவாகவும் பின் கொழுவாகவும் அமைந்து விடுதல் வேண்டும் என்பதை பறை சாற்றி நிற்பதாக இக் கட்டுரையை வரைய முற்படுகின்றேன்.

## இலங்கைத் தமிழர்களின் அரசியற் பொருளாதாரம்

வீதாசார அடிப்படையில் இலங்கைத் தமிழர்கள் ஏறத்தாழ 12% எனவே காணப்பட்டாலும் அவர்கள் இலங்கையின் வடக்கு மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் செறிந்து வாழ்ந்ததன் மூலம் இப் பிரசேசத்தை தமிழர்கள் தமது பூர்வீக வரலாற்று வாழ்விடமாக வரையறை செய்ததுடன் அந்த வரையறைக்குள் சுயாதீனமான பொருளாதாரம் ஒன்றையும் மேம்படுத்தி வந்துள்ளனர். இதனை அடிப்படையாகக் கொண்டே யாழ்ப்பாண இராச்சியமும் அதன் நிர்வாகப் பொறிமுறையும் அமைந்தது என்பதனை வரலாற்று ஆதாரங்கள் மூலம் உறுதி செய்ய முடியும் 1505ம் ஆண்டு இலங்கையில் கால் பதித்த போர்த்துக்கேயர் 1619ம் ஆண்டளவில் யாழ்ப்பாண இராச்சியத்தை ஆக்கிர மித்ததன் மூலம் இலங்கைத் தமிழர் அரசியற் பொருளாதாரத்தின் மீதான முதல் அடி விழுந்தது எனலாம். வரி வருமானத்தின் மீது அதீத அக்கறை கொண்ட போர்த்துக்கேயர் அதனை ஈடேற்றுவதற்கான நிர்வாகப் பொறிமுறையை யாழ்ப்பாண இராச்சியம் கொண்டிருந்ததை அவதானித்தனர். இதனால் அத்தகைய நிர்வாகக் கட்டமைப்பில் எத்தகைய மாற்றங்களையும் போர்த்துக்கேயர் செய்யவில்லை. 1650ம் ஆண்டு யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றிய ஒல்லாந்தர் பின்னர் 1796ல் ஆங்கிலேயர் போன்றோரும் நிர்வாக கட்டமைப்பில் பாரிய மாற்றங்களைச் செய்யவில்லை. இந் நிலை இலங்கைத் தமிழர்களின் அரசியற் பொருளாதாரம் நன்கு வடிவமைக்க ப்பட்டிருந்ததை எடுத்தியம்புகின்றது. ஆனாலும் 1832ம் ஆண்டின் கோல்புறூக் சீர்திருத்தம் பிரித்தானியர் களிற்கான நிர்வாகச் செலவு இலங்கையில் அதிகரித்தமை காரணமாக அதனைக் கட்டுப்படுத்த இலங்கைத் தீவு முழுவதற்கும் ஒருமித்த நிர்வாகப் பொறிமுறையை கொண்டு வர எடுத்த நடவடிக்கையுடன் இலங்கைத் தமிழர் அரசியற் பொருளாதர வரலாறு என்பது தனது கடல் கடந்த வர்த்தகப் பரம்பல் காரணமாக உயர்ந்தளவிலான நாணயமயமாக்கத்திற்குட்பட்ட நவீன பொருளாதார முறையைக் கொண்டிருந்த போதும் இலங்கைத் தமிழரிற்கு சாதகமற்ற பல்வேறு அரசியல் தீர்மானங்கள் தமிழரின் அரசியற் பொருளாதரம் தலையெடுப்ப தைத் தவிடு பொடியாக்கியது.

## தமிழர் பொருளாதாரம் இலங்கைத் தீவிற்குள் சங்கமமாதல்

காலனித்துவ செயற்பாடுகள் தமிழர் பொருளாதரத்தின் ஆற்றலை படிப்படியாக உறிஞ்சியதுடன் அதனை ஒரு தேக்க நிலைக்கு உள்ளாக்கியது இறுதியில் அதன் சுய சார்புத்தன்மை இழக்கப்பட்டு இலங்கைப் பொருளாதரத்தில் தங்கியிருக்கும் தன்மையை பெற்றுக் கொண்டது எனலாம். ஆகவே தமிழர்கள் தமது பொருளாதாரத் தைத் தக்க வைக்க தெற்கு நோக்கி நகர்ந்து சிங்கள பொருளாதாரத்துடன் தம்மையும் செருகிக் கொண்டனர். இத்தகையதொரு இடம்பெயரும் செயற்பாடு இன்று வரை தொடர்ந்திருப்பதே மற்றுமொரு தலையிடியைக் கொடுத்துள்ளது எனலாம். காலனித்துவ ஆட்சியாளர்கள் தமக்குத் தேவையான பொருளாதார நன்மைகளை சுரண்டிக் கொள்ள நாடுகளைப் பயன்படுத்தினர். கைத்தொழில் புரட்சி ஏற்பட்டதைத் தொடர்ந்து தமக்குத் தேவையான மூலப்பொருட்களைப் பெற்றுக் கொள்ளவும் சந்தைகளைப் பெற்றுக் கொள்ளவும் நாடுகளைப் பயன்படுத்தினர். இந்த அடிப்படையில் தான் 1830களில் பெருந்தோட்டங்களை நிறுவினர்.

உதாரணமாக இலங்கையில் தேயிலை,இறப்பர் பெருந்தோட்டங்களை அமைத்ததும் அதற்குத் தேவையான மலிந்த ஊழியத்தைப் பெற தென்னிந்தியத் தமிழர்களை மலைநாட்டு சிங்களவர் மத்தியில் செருகுவதற்கும் தயக்கம் காட்ட வில்லை. இவ்வாறான பெருந்தோட்டங்களை உருவாக்கும் பொழுது தமிழர் பகுதிகளில் காணப்பட்ட பனை மரங்கள் மற்றும் மா, பலா, வாழை,போன்றவற்றைப் பெருந்தோட்ட மாக உருவாக்கும் சிந்தனை காணப்படாமல் மேலும் தமிழர் பொருளாதாரம் நலிந்து செல்வதற்கு காரணமாயிற்று. இந்த வகையில் காலணித்துவ ஆட்சியாளர்களின் பாதிப்பு என்பது கூட சிங்களவர் பொருளாதாரத்தை விட தமிழர் பொருளாரத்தின் மீது உயர்வாக இருந்தமையே எமது அவலத்திற்கு காரணமாகும். காலணித்துவ ஆட்சியாளர்கள் தமது குறிக்கோள்களை வினைத்திறன் மிக்கதாக அடைந்து கொள்ளப் பல்வேறு அரசாட்சி அலகுகளை நீக்கி இலங்கை என்ற ஒரு மித்த அமைப்பை உருவாக்குவதில் கங்கணம் கட்டி நின்றது. அதே வேளை சுயமாக இயங்கிய கட்டமைப்புக்களையும் தமக்கு நன்மையளிக்கும் வரை சுயமாக இயங்க விடவும் தவறவில்லை. இந் நடவடிக்கைகள் தமிழர்களின் அரசியல் எல்லைகளை நிராகரித்தது மாத்திரமல்லாமல் அவர்களிற் கிடையில் இனப் பிணக்குகள் ஏற்படவும் கொந்தளிப்புக்கள் உருவாகவும் வழிவிட்டது எனலாம்.

## தமிழர்களின் பொருளாதாரம் நெருக்கடிக்குள்ளாதல்

இலங்கையில் தமிழர் பொருளாதாரம் அக நிலையில் தங்கியிருத்தல் என்பதே அதன் பரம்பலும் ஒருபுறம் இருக்க மறுபுறம் காலணித்துவ ஆட்சியாளர்களின் கொள்கைகளுமே இப் பிரச்சினைக்கு வித்திட்டன. காலணித்துவ ஆட்சியாளர்களின் வரி அறவீடுகள் தமிழர்கள் தமது வாழ்வாதரத்திற்கு மேல் நகருவதை தடுத்து நிறுத்தியது தமிழர்களின் வாழ்க்கை முறையில் எந்த வித முன்னேற்றங்களையும் செய்யத்தவறிய காலணித்துவ அரசாங்கம் அவர்களது சமூக பொருளாதார உட்கட்டமைப்பின் பால் எத்தகைய மீள் முதலீடுகளையும் செய்யத் தவறியது. இதனால் வடக்கு, கிழக்கில் ஆங்காங்கே செறிந்து காணப்பட்ட வளங்களை விரைவாகப் பயன்படுத்த முடித்தனர். இதனால் வரிகளை செலுத்த வேண்டிய மக்கள் தமது வாழ்வாதாரத்தைப் பேணவே திண்டாடினர். ஆகவே அவர்கள் தமது வாழ்வாதாரத்தைக் கொண்டு நடாத்த வெளி நோக்கி நகர்வதைத் தவிர வேறு வழி காணப்படவில்லை இந்த வகையில் தான் இலங்கைத் தமிழர்கள் வெளிநோக்கி நகர்வதென்பது ஓர் இயல்பான தன்மையாக மாறியது. தமிழர்கள் வாழ்வாதாரமட்டத்திற்குள் முடக்கப்பட்ட பொழுது வர்த்தக பரிமாற்றத்திற்கு வேண்டிய உற்பத்தி மிகையையும் பெற்றிருக்கவில்லை. இந்த வகையில் தமிழர்களின் வெளிநாட்டு வர்த்தகம் என்ற பொருளாதாரம் சூறையாடப் பட்டது.

**மாணிக்கம் லோகசிங்கம்**
**BBA(Hons),DIP in Edu, DIP in Elon,**
**DIP in pub in Adm.**



# மாணவர் கற்றலில் ஆசிரியரின் வகி பங்கு

21ஆம் நூற்றாண்டில் மாணவர்களின் கற்றலை விருத்தி செய்வது பற்றி பல்வேறு முறைகளில் வலியுறுத்தி வருவதை நாம் அவதானிக்கின்றோம். அதாவது மாணவர்களின் கற்றலை ஊக்கிவிப்பதில் ஆசிரியரின் வகிபங்கு மிகவும் முக்கியமானது. இன்று கல்வி என்பது வெறுமையாக தனக்குள் அறிவைப் புகுத்தும் ஒரு செயற்பாடல்ல, அதாவது கற்பித்தலில் முக்கிய அம்சமாக கருதப்படுபவை தேர்ச்சி மையக்கல்வியாகும். இதனால் சகல பிள்ளைகளிற்கும் கற்றலுக்கு உதவி செய்தல் ஆசிரியரின் கடமையாகும்.

காலத்திற்கு காலம் இலங்கையில் அமுல்ப்படுத்தப்படும் கல்வி சீர்திருத்தங்களினால் பெறப்பட்ட அனுபவங்களைக் கொண்டும், புதிய கல்விச் சீர்திருத்தங்களின் இடைகால மீளாய்வு அறிக்கைகளில் பெறப்பட்ட முடிவுகள் கல்வியின் பண்பு ரீதியான பெறுமானத்தில் எதிர்பார்க்கப்பட்ட பயன்பாடுகளை எமது சமூகத்திற்குத் தரவில்லை என்பதனால், 2007 ஆம் ஆண்டு புதிய கல்வி சீர்திருத்தமானது "தேர்ச்சிமிக்க மாணவர்களை உருவாக்குதல்" என்ற தொனிப் பொருளில் அமைந்துள்ளதோடு பாடசாலை என்ற நிறுவன அமைப்பு பின்வரும் செயற்பாட்டு அலகுகளினால் ஆசிரியரின் வகிபாகத்தையும் மாற்றியமைத் துள்ளது.

1. மாணவர்களின் தேர்ச்சியை மேம்படுத்தல்
2. செயற்பாட்டு அடிப்படையிலான கற்றல்
3. செயற்றிட்டங்கள், ஒப்படைகள் மூலமான கற்றல்
4. மாணவர்களின் ஆக்கதிறன்
5. பிரச்சினை தீர்க்கும் திறன்
6. சமூகத்திறன்
7. கற்பனை வளம்
8. மாணவர்களுக்கு முதன்மையான கற்றல் எண்ணக்கருக்களுக்கு இடமளித்தல்

மனிதனுடைய வளர்ச்சியிலே அவன் பெற்ற புதிய அறிவு அவனை உயர்த்திச் செல்கின்றது. அனுபவமும், அறிவும், சுயமாகவோ அல்லது பிறருடைய உதவியினாலே பெறப்படுகின்றது. இத்தகைய செயற்பாடே கல்வி என்றும் அதன் பேறு கற்றல் என்றும் கணிக்கப்படுகின்றது. இக் கல்வியின் பெருக்கத்திலும் விருத்தியிலும் நடுநாயகமாக விளங்குபவர்கள் ஆசிரியர்கள். ஒவ்வொரு நிலையிலும் ஆசிரியருடைய பங்களிப்பு பல்வேறு மாற்றங்களுக்கு உட்படுகின்றது. ஆசிரியர் தான் செய்கின்ற கருமத்தின் தன்மையையும்

தாற்பரியத்தையும் ஒவ்வொரு நிலையிலும் வேறுபட்டே செய்கின்றான் நாடகத்தில் நடிகன் பல்வேறு பாத்திரங்களை ஏற்பது போல ஆசிரியரும் பல்வேறு வகிபாகங்களை எடுக்கின்றார். காலத்திற்கு ஏற்ற கல்வியை வழங்குவதற்கு ஆசிரியரின் பங்களிப்பு காலத்துக்கு காலம் வளர்ந்து விரிவடைந்து செல்கின்றது.

அதாவது ஆசிரியர் என்பவர் ஆரம்ப நிலைகளில் மாணவர்களின் கற்றற் செயற்பாட்டில் ஊடுகடத்துபவராகவும், தன்னிடம் உள்ள அறிவினை அப்படியே மாணவர்களுக்கு செலுத்துபவராகவும், இடைப்பட்ட நிலைமையில் ஆசிய-மாணவ இடைவினையுறுதல் செயற்பாட்டின் அடிப்படையில் அமைந்த பரிமாறுபவராகவும், தமது அறிவு, ஆற்றல்களை மாணவர்களுக்கு வழங்கி அவர்களோடு கலந்துரை யாடி அவர்களது கருத்துக்களையும் ஏற்று பெற்றும் வழங்கியும் செயலாற்றும் பாத்திரமாகவும், விளங்குகின்றார்.

தற்பொழுது ஆசிரியர் என்பவர் புதிய வகிபாகத்தின் அடிப்படையில் "உருமாற்றுபவராக" மாணவர்களுக்கு அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றின் அடிப்படையில் அமைந்த வாழ்நாட் பயிற்சியை வழங்கி செயற்பாட்டு ரீதியிலான மாணவர் மையக் கற்றலுக்கு ஊக்கிவிக்கும் ஒரு வளவாளராக, ஊக்கியாக செயற்பட்டு மாணவர்களை புதுமெரு கூட்டுபவர் என்றும் கூறப்படுகின்றது.

பிள்ளைகளின் கற்றலுடனும் வளர்ச்சியுடனும் தொடர்பு கொண்டிருக்கும் தரப்பினர்களுள் ஆசிரியர் பிரதான இடத்தைப் வகிக்கின்றார். குடும்ப உறுப்பினர் களுக்கு அடுத்ததாக ஆசிரியர்களே பிள்ளைகளுடன் நெருங்கிய மனிதத் தொடர்புகளை கொண்டிருப்பவர்களாகக் கருதப்படுகின்றது. அந்த வகையில் மாணவர்களுடைய கற்றல் செயற்பாட்டின் மிக முக்கியமான பங்காளராக ஆசிரி யரே செயற்படுகின்றார் என்பது யாராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாததாகும்.

இன்றைய சூழலில் பாடசாலைகளே பிள்ளைகளிடம் இருக்கின்ற அறிவினை அகலப்படுத்தவும், திறன்களை இனங்காணவும், உதவுகின்ற களமாக வும், ஆசிரியர்களே அதற்கான பின்புலங்களாகவும் திகழ்கின்றார்கள் என்னும் குறிப்பிடப்படுகின்றது. ஏனெனில் இன்றைய சூழலில் ஒரு குழந்தை பாடசாலை யிலே செலவிடுகின்ற காலம் குறிப்பிடத்தக்கதாக உள்ளது. அன்றியும் பல்வேறு பாடங்கள், இணைபாடவிதானச் செயற்பாடுகள் ஊடாக மாணவர் கற்றலைத் தூண்டுவதற்கான வசதிகளும் வாய்ப்புக்களும் மாணவர்களிலும் பார்க்க ஆசிரியர் களிடமே அதிகமாக உள்ளன என்பது நோக்கத்தக்கது.

ஒரு ஆசிரியர் என்பவர்,

1. கற்றலுக்கு உதவி செய்பவராக
2. ஒருங்கிணைப்பாளராக

3. தொடர்பாளராக
4. விரித்துக் கூறுபவராக
5. சிறார்களின் தேவைகளை உணர்ந்து கொள்பவராக
6. புதிய உத்திகள் புகுத்துபவராக
7. விழுமியங்களை விருத்தி செய்பவராக
8. கற்றலுக்குத் தேவையான நற்பழக்க வழக்கங்களைப் பதியவைப்பவராக
9. வாழ் நாள் முழுவதும் கற்பவராக
10. சமுதாய வினையூக்கியாக
11. மதிப்பீட்டாளராக

இன்றுமாறியுள்ளார்.

அத்துடன் ஆசிரியர் பணி என்பது பிள்ளை பயமின்றியும், பல வந்தமின்றியும், பாரபட்சமின்றியும் கற்பதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுத்தல் என்பதாகும். இந்த வகையில் மாணவர்களின் கற்றல் ஊக்குவிப்பாளராக செயற்படும் ஆசிரியரின் பங்களிப்புக்கள் எவ்வாறானதாக அமைகின்றது என்பதை நாம் எடுத்துக் கொள்வோம்.

UNESCO நிறுவனம் எதிர் வரும் நூற்றாண்டில் பாடசாலை முதல் பல்கலைக் கழகம் வரை கல்வி எப்படி அமைதல் வேண்டும் என்பது பற்றி சிந்தித்து உலகளாவிய குழுவொன்றை அமைத்தது. "கற்றல் அதனுள்ளே அனைத்தும்" எனும் அறிக்கையை 1999 இல் வெளியிட்டது. இவ்வறிக்கையில் பின்வரும் 4 கருத்துக்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. அவை கல்வியின் நான்கு தூண்கள் (Four pillars in Education) எனப்படுகின்றன

1. அறிவினைப் பெறக் கற்றல்(Learn to konw)
2. செயலாற்றக் கற்றல் (Learn to Do)
3. கூட்டாக வாழக் கற்றல் (Learn to live Together)
4. சுயம் இழக்காதிருக்கக் கற்றல்(Learn to Be)

ஒரு மாணவன் கற்பதற்கு ஆசிரியர் ஒருவர் பின்வரும் இருவகையான ஒருவர் பின்வரும் இருவகையான ஊக்கலை வழங்குவதன் மூலம் உதவ முடியும்.

**1. உள்ளார்ந்த ஊக்கம் (Intrinsic)**

இயல்பாகவே பிள்ளைகள் தம்முள் பல ஊக்கிகளைக் கொண்டுள்ளனர். அவற்றுடனேயே அவர்கள் பாடசாலைக்கு வருகின்றார்கள். ஒரு பிள்ளையின் தேவை, அவா, இலக்கு, ஆர்வம் என்பன உள்ளார்ந்த ஊக்கமாகும். கற்றல் செய்கைகளினால் இயல்பாக எழுகின்ற ஊக்கிகளிலே நல்ல ஊக்கிகளை வளர்ப்பதும் அதே வேளை தீய ஊக்கிகளை தடுப்பதும் நன்னெறிப்படுத்துவதும் ஆசிரியரின் பொறுப்பாகும்.

**2. வெளிவாரியான ஊக்கம் (Extrinsic)**

பிள்ளையின் உள உந்துதல்களுக்கு அப்பால் வெளியிலிருந்து கற்றலை நோக்கி தூண்டுபவை வெளிவாரியான ஊக்கமாகும்.

அவ்வாறான காரணிகள் சில பின்வருமாறு,

1. வெகுமதியளித்தல் (Reward)
2. தண்டனையளித்தல் (punishment)
3. அடைவுமட்டத்தை வகுத்துக் கற்பித்தல் (Achivement motivation)
4. வெற்றி பெறும் வகையில் செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல்
5. போட்டி, கூட்டுறவு மனப்பான்மையை ஏற்படுத்திக் கற்பித்தல்
6. மகிழ்ச்சிகரமான கற்றற் சூழலை தோற்றுவித்தல்
7. கற்பித்தற் துணைச் சாதனங்களைப் பயன்படுத்தல்
8. கற்றலைச் சிறுபடிகளாக்கி மாணவர்களை ஈடுபடுத்தல்
9. போதனைகளை ஒழுங்கமைத்தல்
10. பல்வேறு வகையான கற்பித்தல் உத்திகளைப் பயன்படுத்தல்
11. பிள்ளையிடம் தன்னம்பிக்கையினை ஏற்படுத்தல்
12. மனப்பாங்குகளை வளர்த்தல்
13. மாணவரின் தேவையினை அறிந்திருத்தல்
14. பொருத்தமற்ற மனவெழுச்சியை ஏற்படுத்தும் காரணிகளை இனங்கண்டு அவற்றினை நீக்குதல்.
15. வீட்டில் கற்றலை ஊக்கப்படுத்தல்

இவ்வாறாக ஓர் ஆசிரியர் மாணவர்களுடைய கற்றலை ஊக்குவிப்பவராக செயற்படும் போது கற்பவர் சார்பாக பின்வரும் விடயங்களையும் அவ்வாசிரியர் கவனத்திற் கொள்வது அவசியமாகின்றது.

1. மாணவர்களுடைய முன்னறிவு
2. கற்பதில் அவர்கள் காட்டுகின்ற ஆர்வம்
3. அவர்களுடைய வயதும் இயலுமைகளும்
4. மாணவர்களுடன் தொடர்பு கொள்கின்ற முறை
5. மாணவர்களின் குடும்பப் பின்னணி

**கற்றலில் இரு வகையுண்டு**

1. மேலோட்டமான கற்றல் **(suface learning)**
2. ஆழமான கற்றல் **(Deep learning)**

கற்றலின் தராமானது கற்பவரை அழமான கற்றலுக்கு ஊக்கிவிக்கப்படும் ஆற்றலைக் கொண்டு அளவிடப்படுகின்றது. இந்த வகையில் பாடசாலைகளில்

ஆசிரியர்களின் முக்கியமான பணி மாணவர்களுக் பயிற்றுவித்தல் நிகழ்ச்சி திட்டங்களையும், அதற்கான சவால்களையும் சாதகமான நிறுவனச் சூழலையும் உருவாக்குவதன் மூலம் ஆழமான கற்றலை உறுதி செய்ய முடியும், இந்நிலையில் ஆசிரியர் கற்றலுக்குரிய ஆலோசராக மாற்றம் பெறுகின்ற நிலை காணப்படுகின்றது.

"கேட்பவை எளிதில் மறக்கப்படுகின்றன. பார்த்தவற்றை நாம் நினைவில் வைத்துக்கொள்கின்றோம். ஆனால் நாமே பங்கு கொண்டு செயலில் ஈடுபட்டால் தான் அதன் தன்மையும் அடிப்படையாக அமைந்துள்ள கருத்துக்களையும் நாம் நன்கு அறிந்து கொள்கின்றோம்.

பிள்ளைகளின் கற்றலில் ஆரம்ப காலத்தில் குடும்பமே கூடிய செல்வாக்கைப் பெற்றிருந்தது. ஆயினும் இன்று அதன் செல்வாக்கு குறைக்கப்பட்டு அவற்றையும் ஆசிரியர்களே ஏற்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது. இதற்கு ஆசிரியர் நல்லதோர் வழிகாட்டியாக செயற்பட வேண்டியுள்ளது. மாணவர்களுக்கு கற்க உதவுவதும் கற்றலில் அவர்களுக்கு ஏற்படக்கூடிய இடர்களை களைய உதவுவதும், கற்கும் பாடங்களில் தமது திறமைகளை வெளிப்படுத்தி தேர்ச்சி பெற உதவுவதும் ஆசிரியரின் முக்கிய பணியாகவுள்ளது.

**திரு.ந.பாக்கியநாதன்**
இணையாளன்,
உடுப்பிட்டி.

* இன்பத்தில் பங்கெடுத்து துன்பத்தில் தூரச் செல்பவன் உறவை துண்டிப்பதே மேல்.
* நண்பனின் உடலில் ஒரு பாகமாக இரு அப்போதுதன் அவனுக்கு ஏற்படும் காயம் உனக்கும் வலிக்கும்.
* கால்விரல் இல்லை என்பாற்காக கவலைப்படாதே காலே இல்லாதவனைப் பார்த்து நீ ஆறுதல் அடைந்து கொள்.

## சின்னம் சூட்டும் விழா - 2007



## சாரணர் குழு–2014



# ஞானாசாரியார் கல்லூரி 80 வது ஆண்டுவிழா

எனது ஆரம்ப கல்வியை எனது சொந்த ஊரில் அமைந்திருக்கும் ஞானாசாரிய கல்லூரியில் ஆரம்பித்தேன் நான் முதல்முதலாக பாடசாலைக்குப் போனபோது ஏதோ என்னவோ நடக்கும் என்றதவறான ஏக்கத்துடன் விருப்பமின்றிச் சென்றது நல்ல ஞாபகமிருக்கு. ஆனால்,சேர்ந்த சிலநாட்களில் பாடசாலைச் சுற்றாடல் என்னை மிகவும் கவர்ந்து விட்டதால் பின் பாடசாலைக்குப் போக வேண்டுமென்ற ஆர்வம் வரத்தொடங்கியது. ஆரம்ப கல்வியை எனக்கு அறிமுகப் படுத்தி தமிழ், ஆங்கிலம், கணிதம் ஆகிய பாடங்களை நன்கு கற்பித்தவர்களில், கந்தையா பத்தினிப்பிள்ளை ஆசிரியர் (பத்தினியக்கா), கந்தையா ஆசிரியர், சிவகுரு ஆசிரியர், ஆறுமுகம் ஆசிரியர் ஆகியவர் களின் சேவை எனக்கு மிகவும் உறுதுணையாக இருந்தது. முக்கியமாக ஆறுமுகம் ஆசிரியர் என்னிடம் பிரத்தியேக கவனமெடுத்து எனது கையெழுத்தையும், அதோடு என் தலை யெழுத்தையும் சிறப்பாக செய்வதற்கு மிகவும் பாடுபட்டார். தமிழிலும், ஆங்கிலத்திலும் எத்தனையோஅச்சு கொப்பிகளை வரவழைத்து அவை யாவற்றையும் கிரமமாக எழுதுவித்து எனது கையெழுத்தை அச்சுப்போன்ற எழுத்தாக எழுதக்கூடிய மகிமையை தந்தவர் ஆறுமுக ஆசிரியர் என்றால் மிகையாகாது. புன-72-பு ஒரு போது நான் கல்லூரிக்குப் போனபோது எனது கையெழுத்தை பார்த்த ஆறுமுக அசிரியர் பிரமித்துவிட்டார் எவ்வளவு அழகான கையெழுத்து என்று அவர் எனக்கு பெருமை சேர்த்தபோது,இவையெல்லாம் உங்கள் முயற்சியென்று அவருக்கு நான் நன்றி சொன்னேன்.ஒரு மாணவனின் வளர்ச்சியில் ஆசிரியர்களுக்கு பெரிய பங்குண்டு மாணவர்களின் அறிவாற்றலை வளர்த்து அவர்களை நல்லதொரு மாணவர்களாக மாற்றும்ஆற்றல் ஆசிரியர்களின் கையில் மட்டுமே இருக்கின்றது.

எனது தமிழ் அறிவுக்கும் கணித அறிவுக்கும் பொறுப்பாக இருந்தவர்கள் முறையே கதிர்காமத்தம்பி ஆசிரியரும், தம்பிப்பிள்ளை ஆசிரியருமாவர். கதிர்காமத்தம்பி ஆசிரியர் எமக்கு தமிழ் கற்பித்த முறையே ஒருபுதுவிதம்.தமிழ் எமக்கு ஆர்வத்தை ஊக்குவித்து, பாடத்தில் எதுவித வெறுப்பும் ஏற்படாத வகையில், தமிழ் கற்பிக்கும் போது பல சரித்திரக்கதைகளை மிகவும் ஆர்வமாகாக கேட்கும் முறையில் விளக்கமாகக் கூறி மாணவர்களின் தமிழ் ஆர்வத்தை கேட்கும் முறையில் விளக்கமாகக் கூறி மாணவர் களின் தமிழ் ஆர்வத்தை வளர்த்தார் இதன் காரணமாகவோ என்னவோ எனக்கு தமிழில் நல்ல விருப்பம் ஏற்பட்டது. ஒருமுறை வகுப்பில், வல்லவனுக்கு புல்லும் ஆயுதம், என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரையுமாறு தந்திருந்தார். நான் எழுதிக் கொடுத்த கட்டுரையை வாசித்த ஆசிரியர் அக் கட்டுரையை வகுப்பில் திரும்பத்திரும்ப வாசித்து ஏனைய மாணவர்களும் அதை கவனிக்குமாறு கேட்டுக்கொண்டார் இதேபோல, தம்பிப்பிள்ளை ஆசிரியரும் கணிதத்தில் மிகவும் முயற்சி எடுத்துப் படிப்பித்தார் கனிட்டதராப்பத்திர (J.S.C) வகுப்புக்குரிய பல கடந்தகால வினத்தாள்களை எம்மைக் கொண்டு செய்வித்து பயிற்சியளித்தார். இதன் காரணமாகவோ என்னவோ, ஞானாசாரிய கல்லூரியில் கற்ற ஆரம்ப கல்வியை

அடிப்படையாகக் கொண்டு, பின்னர் நான் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியில் சிரேஸ்ட தராதரப்பத்திர வகுப்பில் (s.s.c) சித்தியடைந்தபோது, தமிழ், ஆங்கிலம் கணிதம் ஆகிய மூன்று பாடங்களிலுமே விசேட சித்தி பெற்றேன்.

எனவே, ஒரு மாணவனின் வளர்ச்சிக்கு ஆரம்ப கல்வி மிகவும் அவசியம் என்பதை நாம் நன்கு உணரவேண்டும் ஞானாசாரிய கல்லூரி எம்மை போன்ற பலருக்கு இப்படியான அத்திவாரத்தை ஏற்படுத்தி தந்ததன் காரணமாகவே நாம் நல்ல ஒரு நிலையில்இன்று இருக்கின்றேம். என்னைப் போன்ற பல மாணவர்கள் ஞானாசாரியார் கல்லூரியின் அடிப்படைக் கல்வியை வைத்தே இன்றும் கல்வியில் சிறந்தவர்களாக இருக்கிறார்கள் என்பது உண்மையாகும்.

இக்கல்லூரியில் இருந்த மற்றுமொரு சிறப்பு கல்லூரி மாணவர்களின் ஒழுக்கமும் கட்டுப்பாடுமாகும். இக் கல்லூரியில் கற்று வந்தவர்கள் நான் அறிந்தளவில் மிகவும் கட்டுப்பாடுடனும் ஒழுக்கமுடையவர்களாகவுமே இருந்து வருகின்றார்கள் இதற்கு முக்கிய காரணம் இக்கல்லூரி ஆசிரியர்களே என்பதையிட்டு நாம் பெருமைப்பட வேண்டும்.

இக்கல்லூரி கல்வியோடுமட்டும் நின்று விடாது, விளையாட்டுப் போட்டிகளையும் நன்கு ஊக்குவித்து வந்தது. பல மாணவர்கள் ஓட்டப் பந்தயங்களில் சிறப்பாகச் செய்து வெற்றிக்கிண்ணங்களையும் பெற்றிருக்கின்றார் கள். ஒரு காலகட்டத்தில் கல்லூரியை விட்டு வெளியேறும் நாட்களில் நானும் ஓட்டப்போட்டிகளில் சிறப்பாகச் செய்து,100,200மீற்றர் ஓட்டங்களில் எப்போதும் முதலிடத்தைப் பெற்று வந்தேன், ஞானாசாரிய கல்லூரியில் ஆரம்பித்த விளையாட்டுப்பயிற்சியானது நான் தொடர்ந்து கல்விகற்ற அமெரிக்கன் மிசன் கல்லூரிக்கு மிகவும் உதவியாக இருந்தது. ஆங்கும், 100,200 மீற்றர் போட்டிகளில் முதலிடத்தையே பெற்றேன். உடுப்பிட்டி அமெரிக்கமிசன் கல்லூரியில் படித்த போது,மாவட்ட போட்டிகளில் கலந்து கொள்வதற்கான பயிற்சி ஒழுங்காக நடைபெறும். அதன்போது, ஒரு சமயம் சுகயீனம் காரணமாக இந்தப் பயிற்சிக்கு என்னால் போக முடியாது இருந்தது. நான் பயிற்சிக்கு வராததைக்கண்ட எனது பயிற்சி ஆசிரியர் (Robet) ஒரு நாள் எனது வீட்டுக்கே வந்துவிட்டார். (உடுப்பிட்டியிலிருந்து கரவெட்டிக்கு)இது அவர் என்மீது வைத்திருந்த நம்பிக்கையைக் காட்டுவதாக அமைந்திருந்தது. இப்பெருமையானது நான் ஆரம்ப கல்வி கற்ற ஞானாசாரிய கல்லூரிக்கே உரித்தாகும்.

ஒரு கல்லூரியின் வளர்ச்சி அங்கு கற்பிக்கப்படும் விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களில் மட்டும் தங்கியிருப்பதில்லை.இப்பாடங்களோடு ஏனைய கலை, கலாசார நிகழ்ச்சிகளும் கல்லூரியின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவும். அறிவு வளர்ச்சியோடு, மகிழ்ச்சிதரவல்ல மனவளர்ச்சியும் மாணவர்களுக்கு அவசியம். அவர்களின் மனவளர்ச்சியை ஊக்குவிக்க அவர்களுக்கு போதியளவு கலை நிகழ்ச்சிகளை கற்பிக்க வேண்டும் கல்வி கற்கும் ஒரு மாணவன் கல்விப் பாடங்களில் திறம்படச் செய்வதற்கான பல விஞ்ஞான ஆதாரங்கள் உண்டு மூளைவளர்ச்சி, உடல்வளர்ச்சி, மனவளர்ச்சி ஆகியவற்றுக்குபல்முகப் படுத்தப்பட்ட கலை அவசியம். இவற்றை மனதில் கொண்டு பிள்ளைகளின் பாடத் திட்டங்களை நிர்வாகம் நடைமுறைப் படுத்துவது அவசியம். ஞானாசாரிய கல்லூரி

எமக்கு வித்திட்டு எம்மை வளர்த்த கல்லூரி. இங்குள்ள ஆசிரியர்கள் அனைவரும் தம்மாலான முயற்சிகளை எடுத்து பிள்ளைகளின் கல்வியை மேம்பாடடையச் செய்தார்கள் அப்போது தான் கல்லூரியும்வளர்ச்சியடையும் கல்லூரியின் வளர்ச்சியைக் கண்டு மேலும் பல மாணவர்கள் வந்துசேர வாய்ப்புண்டு. கல்லூரியின் வளர்ச்சிக்கு இது மிகவும் அவசியம்.

கல்லூரியின் வளர்ச்சியை மேம்படுத்த பல விசேட முறைகளைக்கையாள வேண்டும். விஞ்ஞானம்,கணிதம்,கம்பியூற்றர் ஆகிய பாடங்களில் மேலதிக கவனம் செலுத்த வேண்டும். இத்துறைகளில் போதியளவு, தேர்ச்சிபெற்ற ஆசிரியர்களை நியமனம் செய்து இப்பாடங்களை சிறப்பாகச் செய்வதன் மூலம் பிள்ளைகளுக்கு எதிர்காலத்துக்குழ தேவைப்படும் பாடத்திட்டங்களை வகுத்துக் கொடுக்கலாம். இப்போது இப்பாடங்களுக்கு அதிக வரவேற்பு இருப்பதால் இவற்றை முறையாக கற்பித்துக் கொடுக்க வேண்டியது. கல்லூரியின் கடமையாகும். இப்பாடங்களைக் கற்பதால், எதிர்காலத்தில் மாணவர்களுக்கு வேண்டிய பல தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

எல்லா பெற்றோரும் தமது பிள்ளைகளை உங்களை நம்பியே இக் கல்லூரிக்கு அனுப்புகிறார்கள் கல்லூரிக்கு வரும் மாணவர்கள் பெரும்பாலும் அவர்களின் அதிக காலத்தை தமது பெற்றேரை விட உங்களுடனேயே கழிக்கிறார்கள். பெற்றோரின் மனம் மகிழ்ந் திருக்கும் வண்ணம் பிள்ளைகளை நன்கு வழிநடத்துவது உங்கள் கைகளிலேயே இருக்கின்றது. ஞானசாரியர் கல்லூரியின் எண்பதாவது விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் அனைவரும் இக் கல்லூரி மூலம் ஏதாவது ஒரு வகையில் மேன்மையடைந்தவர்களாக இருப்பர் என்பது. எனது திடமான நம்பிக்கை. பெற்ற தாய் தந்தையரை எப்படி நாம் இலகுவில் மறந்துவிடமுடியாதோ அதேவாறு எமக்கு வாழ்வு தந்த ஞானசாரியர் கல்லூரியையும் அங்கு சேவை செய்த, செய்யும் ஆசிரியர்களையும் எம்மால் இலகுவாக மறந்து விட முடியாது. ஞானசாரியர் கல்லூரியின் செயற்பாடுகள் மேலும் விரிவடைதற்கான அத்தனை முயற்சிகளிலும் நாம் தோழிற்பட வேண்டும். எந்ததொழிற் வகையிலும் கல்லூரியின் கல்வித்தராதரம் குறைந்து விடாது இருப்பதை நாம் அனைவரும் உறுதி செய்ய வேண்டும். அப்போதுதான் எம்மை வளர்த்து எடுத்த எமது கல்லூரிக்கு நாம் செய்யும் பெரிய நன்றிக் கடனாக அது இருக்கும்.

**ஞான ஒளி ஊட்டிவளர்த்த ஞானசாரியக் கல்லூரியின்**
**வளர்ச்சிக்கு எனது நல்வாழ்த்துக்கள்.**

**கலாநிதி எஸ். கிருஸ்ணபிள்ளை B.Sc**
அதிபர்,ஆர்.ஜி.கல்வி நிலையம்,
ஸ்காபரோ,ஒன்ராறியோ,கனடா

# எம்மொழி செம்மொழி

**கலைமாமணி முனைவர்**
**இளசை சுந்தரம்**

தமிழ் செம்மொழி ஆகிவிட்டது. இது பற்றி அதிகமாகப் பேசப்படுகிறது. இப்பொழுது செம்மொழி என்றால் என்ன என்கிற சந்தேகம் பலபேருக்கு இருக்கின்றது. செம்மொழி ஆவதில் என்னபயன் என்று பலபேர் சிந்திக்கிறார்கள். ஒருமொழி செம்மொழி ஆகவேண்டுமென்றால் அதற்குப் பதினொருஅடிப்படைப் பண்புகள் இருக்க வேண்டும். அவை என்னவென்றால், தொன்மை, தனித்தன்மை, புதுமைப்பண்பு, நடுநிலமை, பன்மொழிகளுக்குத் தாய்மை, பட்டறிவு இலக்கியங்க ளைப்பெற்றிருத்தல், பிறமொழிகலப்பற்ற தன்மை, இலக்கிய வளம், உயர்ந்த சிந்தனைகள், கலை இலக்கியத் தனித்தன்மை பங்களிப்பு, மொழிக்கோட்பாடு இவ்வளவு அடிப்படைப் பண்புகளும் அதற்கு இருக்க வேண்டும். இந்திய அரசு இதுவரைக்கும் ஏற்றுக்கொண்டுள்ள செம் மொழிகளான சமஸ்கிருத, பாரசீக, அரபு மொழிகளின் செம்மொழிப் பட்டியலில் தமிழும் இடம் பெறுவதாலே இந்தியப் பல்கலைக்கழக மாநிலக்குழு தமிழைச் செம்மொழியாக உடனடியாக அங்கீகரிக்கும்.

தமிழ் செம்மொழி ஆவதில் என்ன பயன்? தமிழ் செம்மொழியாக அங்கீகரித்து பெற்றபின் மொழிப்பாடமுள்ள எல்லாப் பல்கலைக்கழகங்களிலும் தமிழ் கற்பிக்க ஆய்வு செய்யத் தனித்தமிழ்த் துறைகள் உருவாக்கப்படும். அதற்கான செலவை பல்கலைக்கழக மானியக் குழுவும் மத்திய, மாநில அரசுகள் ஏற்கும். இதனால் இந்தியா முழுவதும் இருக்கின்ற தமிழ்மானவர்கள் தமிழில் உயர்கல்வி பெற வாய்ப்பு ஏற்படும்.

இந்தியப்பல்கலைக்கழக மானியக்குழு செம்மொழியாகத் தமிழைச் அங்கீகரித்து மொழிப்பாடமுள்ள பல்கலைக் கழகங்களில் தமிழ்த்துறை, சமஸ் கிருதத்துறை போல் தனித்துறையாக உருவாகும். தமிழ்க்கல்வி எங்கெல்லாம் கற்பிக்கப்படும் அங்கு தமிழ் ஆய்வுகளும் மேற்கொள்ளப்படும்.

என்சைக்ளோபீடியா,பிரிட்டானிகா போன்ற உலகப் புகழ் பெற்ற கலைக் களஞ்சியங்கள், சமஸ்கிருதம் செம்மொழி என்பதால் வடமொழிபற்றிய செய்திகள்

அவற்றில் விரிவாக இடம் பெறுகின்றன. தமிழ் செம்மொழி ஆவதால் இத்தகைய கலைக்களஞ்சியங்களில் தமிழ்மொழி, இலக்கியக்கலை, பண்பாட்டுச் செய்திகள் விரிவாக இடம் பெறுவதன் மூலம் தமிழினப் பெருமை உலகளாவிய முறையில் நிலைபெறும் பூனாவிலுள்ள டெக்கான் காலேஜ் ஒப் போஸ்ட்

கிராஜுவேஷன் அன்ட்ரிசர்ச் என்ற அமைப்பு சமஸ்கிருத ஆங்கில அகராதி தயாரிக்கத் திட்டமிட்டு பல தொகுதிகளை வெளியிட்டுள்ளது. அதேபோல் தமிழ்-ஆங்கில அகராதித் தொகுதிகள் பலவற்றைத் தயாரிக்கலாம்.

சமஸ்கிருதம் செம்மொழி என்பதால் அதிலுள்ள படைப்புக்கள் ஆங்கிலம் போன்ற மேலைத்தேய மொழிகளிலும் சீனம்,ஜப்பான் போன்ற கீழைத்தேய மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு வருகின்றன.

அதே போல் தமிழ்ப்படைப்புக்களும் உலக மொழிகளில் மொழி மாற்றம் செய்யப்படலாம். அப்போது தமிழின் வளமும் தமிழர்தம் பெருமையும் உலகெங்கும் நிலைபெற வாய்ப்பு ஏற்படும்.

செம்மொழிகளுக்கிடையே ஒப்பீட்டாய்வு நிகழ்வது தவிர்க்க முடியாத ஒன்றாகும். இதனால் ஏனைய செம்மொழிகளை விட தமிழ் எந்தெந்த வகைகளில் சிறந்து விளங்குகிறது என்பது ஆதாரபூர்வமாக நிறுவப்படும்.

தமிழ்மொழியின் சிறப்புப்பற்றி பல்வேறு அறிஞர்கள் தங்களது கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அமெரிக்காவில் இருந்து தமிழகம் வந்த டாக்டர் வின்சுலோ தமிழ் ஆங்கில அகராதியைத் தொகுத்தார். அதன் முன்னுரையில் வேற்று மொழியின் துணையின்றித் தனித்து இயங்கும் தமிழின் சிறப்பு வியப்பளிப்பதாகும்.மதுரையின் தமிழ்ச்சங்கம் நிலவிய காலத்தில் தொகுக்கப்பட்ட நூல்கள்(எட்டுத்தொகை,பத்துப்பாட்டு) தமிழுக்குப் பெருமை அளிப்பவையாகும். தமிழ் மொழி செய்யுள் வடிவிலும் நடையிலும் கிரேக்க மொழி செய்யுளைக் காட்டிலும் தெளிவும் திட்டமும் உடையதாகவும் கருத்தாழம் மிக்கதாகவும் விளங்குகிறது என்று பாராட்டியுள்ளார்.

இன்றைய கணனி உலகத்திற்கு ஈடுகொடுக்கக்கூடிய அறிவியல் மொழியாக நம்மொழி விளங்குகிறது. மொழியியல் பேரறிஞர் டாக்டர் கிரியர்சன் உள்ளத்தில் உருவெடுக்கும் சிந்தனைகளை மிக நுட்பமான உணர்வுகளை எண்ணி, எண்ணியாங்கு திறம்பட வெளிப்படுத்த வல்லமொழியாகத் தமிழ் அமைந்துள்ளது என்று புகழ்ந்து கூறுகிறார். ஈராஸ் பாதிரியார் நான் சுவீடனி லிருந்து வந்த ஒரு திராவிடன் என்று தன்னைக் குறிப்பிட்டுப் பெருமைப்படுகிறார்.

இப்படிப் பிறநாட்டு அறிஞர்கள் தமிழின் சிறப்பைப் பேசுகிறார்கள் தமிழ் மக்கள் அதைக்காப்பாற்ற வேண்டும். ஆனால் நிலைமை எப்படி இருக்கின்ற தென்றால் ஓர் ஊரில்போய்ப் பேருந்து நிலையம் எங்கே இருக்கிறதென்று கேட்டேன்.அந்த ஆள் முழித்தார். பின்பு அப்படியெல்லாம் எதுவும் இங்கே இல்லையே என்றார். இல்லை பஸ்ஸ்டான்ட் எங்கே இருக்கிறது என்று கேட்டதும் ஆ..அப்படித் தமிழில் கேளுங்க என்றார்.

**நன்றி**

# ஞாபகமில்லையா?

"மறதிக்கு மருந்து வாத்தியாரின் பிரம்பு" இது அந்தக் காலத்தில் பாடசாலைகளில் கூறப் படும் கூற்று என்ன செய்வது படிப்பதெல்லாம் உடனடியாக மறந்து விடுகின்றதே. நினைவில் வைத்திருக்க என்ன செய்யலாம்? இது மாணவர்கள் பலரின் மனதில் எழும் கேள்வி வல்லாரைக் கீரை சாப்பிட்டால் ஞாப சக்தி அதிகரிக்கும் என்பது அன்னையரின் கூற்று.

ஆசிரியரிலிருந்து பெற்றோரா கட்டும். மாணவராகட்டும் மற்ற துறையினரே யாகட்டும் "மறதி" என்பது எப்படி வருகிறது என்று அதற்கான காரணத்தை ஆராய்ந்தால் 90% மறதி என்ற சொல்லையே மறந்து விடலாம். மறதி பற்றி அறிய வேண்டுமெனில் ஞாபகத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும்.

எண்ணங்கள் அல்லது செய்திகள் தக்க வைத்துக்கொள்ளப்பட்டுத் தேவைப்படும் சமயத்தில் நினைவிற்கு கொண்டு வருவதையே ஞாபகம் என்கிறோம். உளவியல் அடிப்படையில் ஞாபகம் என்பது ஒரு செயல் அல்லது நிகழ்வு களின் பதிவே ஆகும். பழைய அனுபவங்களின் தக்க வைப்புக்கள் அவற்றினை வேண்டிய தருணத்தில் நினைவு கூரல் அவ்வாறு நினைவு கூரும் நிகழ்வுகள் அவை நடைபெற்ற வரிசை களின் தொடராக அடையாளம் காணப்படுதல் என்பதாக உள்ளது. அதாவது செய்தி சேகரிப்பு, சேகரித்த தகவல்கள் மாறுபட்ட கால அளவில் தக்க வைத்துக்கொள்ளல், தேவைப்படும் போது நினைவுக்கு கொண்டு வருதல் (Encoding, Storing Retrieval) ஆகியன ஞாபகத்திறனின் படிகளாகின்றன.

ஞாபகம் என்பது ஏதோ ஒன்றினை மனப்பாடம் செய்து அதை அப்படியே நினை விற்கு கொண்டு வந்து வெளியில் கக்குவது அல்ல. எந்தச் செயலும் நிகழ்வுமே அவரவர் எதிர் கொள்ளும் அனுபவத்தின் அடிப்படையி லேயே அமைகிறது. அவ்வாறான அனுபவம் எவ்விதம் நினைவில் நிறுத்திக் கொள்ளப்படுகி றது என்பதைப் பொறுத்தே நினைவு கூர்தல் நிகழ்கிறது. ஒருவருடைய சொந்தக் கருத்தின் அடிப்படையில் வெளிப்படுத்தப்படும் திறனே ஞாபகம்.

மாணவரின் ஞாபக விருத்தியில் பெற் றோரின் பங்கு மிக முக்கியமானது. மாணவரின் உடல் ஆரோக்கியம் இதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. துரித உணவை (fast food) விடுத்த மாணவர்களுக்கு தானியங்கள், பழங் கள், காய்கறிகள் அடங்கிய உணவை வழங்க வேண்டும். சுறுசுறுப்பான மூளை, அசதியற்ற தன்மை, நல்ல தூய்மையான காற்று இவை மூன்றுமே நல்ல ஞாபகத்திறனை அளிக்கவல் லது. இத்தகைய சூழலை தம் இயல்பிற்கு ஏற்ற வகையில் பெற்றோர் அமைத்துக் கொடுக்க வேண்டும்.

விழிப்புணர்வுடன் கவனிக்கும் திறன் ஞாபகத்தை அதிகரிக்கும்.இதனை ஆசிரியரே தூண்டவல்லவர். physically present, mentally Absent என்ற நிலையில் விழி ஆசிரியரைப் பார்த்துக்கொண்டிருக்க கவனம் வேறெங்கோ இருக்கும். இம்மாதிரியான நிலையை ஆசிரிய ரால் எளிதில் கண்டுபிடித்து விட முடியும் அதற் கான காரணத்தை தாயின் பரிவோடு ஒவ்வொரு ஆசிரியரும் அணுகி மனரீதியாக மாணவனோ மாணவியோ எவ்விதத்தில் பாதிக்கப்பட்டுள்ளார் என்பதைக் கண்டறிந்து படிப்பதில் ஆர்வம் ஏற்படுமாறு ஆலோசனை கூறி வழிகாட்டுதல் ஆசிரியர் பணியாகும்.

மாணவர்கள் கற்றவற்றைத் திரும்பவும் படித்தலினால் தமது ஞாபகத்திறனை அதி கரிக்க முடியும். மாலை 6.00 மணியிலிருந்து 8.00 மணிவரை பெற்றோர் அவர்களுடன் அமர்ந்து அவர்களுக்கு படிப்பதற்கு உதவுதல் வேண்டும் தாம் தொலைக்காட்சி பார்ப்பதை அந் நேரத்தில் தமது பிள்ளைகளுக்காக நிச்சயம் தியாகம் செய்தேயாக வேண்டும்.

Interest is the Mother of attention
Attention is the Mother of Memory

என்ற கூற்றுக்கிணங்க மாணவர்கள் ஆர்வம் என்ற பாட்டியினையும் கவனம் என்ற தாயையும் இறுகப் பற்றிக் கொண்டால் உங்கள் ஞாபகத் திறனை எளிதில் வளர்த்துக் கொள்ளலாம்.

**தொகுப்பு :**

மருத்துவர் M.K.M

## எமது கல்லூரியின் முத்த பழைய மாணவியும் யாழ்ப்பாண அரசாங்க அதிபருமாயிருந்த மதிப்பிற்குரிய திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் (சிதம்பரப்பத்தினி) அவர்களின் ஞாபகார்த்தமாக அவரின் தேன்வதை என்னும் கவிதைத் தொகுப்பிலிருந்து ஒரு சில துளிகள்

### தமிழ்

கனவில் கலர்ந்த கன்னி-மெய்க் காதல்
கவிதை பின்னி
கனிந்த மொழியை உன்னி உடன்
கவிழ்ந்தேன் எனதுசென்னி (கனவில்)
கனகாம்பரமும் இல்லை அவள் கமழும்
மணம் சேர் முல்லை
கட்டிக் கரும்பின் வில்லை அவள் கனியும்
அன்போ பெருந்தொல்லை(கனவில்)
என்னை அழகில் வெல்ல - கன்னி
எவரும் இல்லை உலகில்
எண்ணம் இனியும் என்ன - என்று
அணைத்தாள் என்னை மெல்ல (கனவில்)
அன்னை தயவும் கன்டேன்- அவள்
அன்பில் உயிரும் கொண்டேன் என்னை
இழந்து விட்டேன் - தமிழ் தன்னை
மணந்து கொண்டேன்.

### மாணவன்

கல்வியில் ஆர்வம் கடமையில் ஓர்மம்
கருத்தினில் சீலம் கனிந்திடும் பாவம்
குருவிடம் பணிவு குணத்தில் உயர்வு
கொண்டவன் எவனே அவனே மாணவன்
வறுமையில் செம்மை வாழ்வினில் உண்மை
உரிமையில் திண்மை உளத்தினில்
மேன்மை உயிரிடம் அன்பு உயரிய பண்பு
என்ற நிறைவுடன் வாழ்வான் நிறைவுடை
மாணவன்

### தமிழணங்கே

தித்திக்கும் தேன்துளியே திகட்டாத
தெள்ளமுதே முத்திக்கும் வழிகாட்டும்
முத்தமிழே முழுநிலவே எத்திக்கும்
கலைபொழியும் எல்லையிலே எழிலரசி
புத்திக்கும் எட்டாத பொன் மகளே
புகழுருவே சங்கத்தில் நீ பிறந்தாய்
சரித்திரத்தில் நீ வளர்ந்தாய் சித்திக்கும்
புலவர்களின் சிந்தனையில் நீ வளர்ந்தாய்
என்றைக்கும் குமரியடி எள்ளளவும்
மாற்றமில்லை மன்றத்தில் மலர்பவளே
மயங்குதடி என் மனது காவியத்தில்
நடந்தாய் காதல் இன்பம் கொடுத்தாய்
ஓவியத்தால் உயர்ந்தாய் உத்தமியே
எனதுயிரே

### கிராமியப்பாடல் (வேதனை)

காலைக் கருக்களிலே கலட்டித்
தெருவினிலே வேலைக்குப் போற மச்சான்
கொஞ்சம் வேலியால் பார்த்தாலென்ன
சோலைமருங்கினிலே சோடியாய் மாடுகட்டீ
மாலையில் போற மச்சான் - என்
மயக்கத்தைத் தீர்த்தாலென்ன
ஓரணை வண்டிலே ஒண்டியாய்
தனியிருந்து சோலியாய்ப்போற மச்சான்
என் சாலைவழி நடுவே சோக்காய்
உடையணிந்து ஜோராகப் போறமச்சான்
என்னை நேராகப் பார்த்தாலேன்ன
கானக் குயிலுடனே கலக்கும் இசைபோல
மெனைக் கெடாமலே மச்சான் - என்
வேதனையைத் தீர்த்தாலேன்ன

# நடன ஆபரணம்



முதிபோன்ற முகத்தின்
நெற்றியினை மங்கலமாய்
அலங்கரிக்கும்-உச்சிப்பட்டம்

வளைவு நெளிவுடன் இனியவை
கேட்டு இரசிக்கும் செவியினை
அன்போடு அரவணைக்கும்-காதணி

வலம்புரிச் சங்கைப் போன்று
வலுக்கும் கழுத்தை
தீண்டும்-அட்டியல்

கிழமைநாட்களில் முதலையும்
இறுதியையும்
சிவன் போன்று அணியும்
-சூரிய சந்திரப் பிறை

அன்பு கொண்ட நெஞ்சினை
இன்பமாய் மகிழ்வூட்டும்
பொலிவு கொண்ட-பதக்கமாலை

பறவைகளின் சிறகுகளாய்
மரங்களின் கிளைகளாய்
அன்னத்தை ஊட்டும்
கரத்தைச் சாரும்-வளையல்

இறைவனின் உடுக்கை போன்ற
இடையை நட்சத்திரங்களின்
தொகுப்புகளாய் ஸ்பரிசிக்கும்
-ஒட்டியாணம்

தாளத்தை சந்தத்தை
இராகங்களாய் கோர்த்து இருக்கும்
கிண்கிணிகளின் சேர்க்கை-சலங்கை

இவைகள் அனைத்தும் பெண்சிலையைத்
தீண்டி அச்சிலையை நடனமாதுவாக
உயிர்ப்பிக்கும் சிறப்போ சிறப்பு

# புலம் பெயர் நண்பனுக்கு.........

பனி விழும் தேசத்து கடுங் குளிரில் வாழும் நண்பனே மன்னிக்க,
வன்னிக்கு போயிருந்தேன் பதிலெழுத நாட்களாயின
வந்ததும் உன் கடிதம் மேசையில் கண்டேன்.
படித்ததும் எழுதும் பதில் இது,
துயருரைத்த வார்த்தைகளில் உன் விழி நீர்க் கறைகள்
என் மனம் இரங்கியது. நெகிழ்ந்தது
உடல், பனி விழும் தேசத்தலென்றாலும் மனமின்னும்
முற்றத்து மாமரத்தையே சுற்றி வருவதைப் புரிவேன்.
புலம் பெயர் பறவையின், கூடு திரும்பும் ஆசை கண்டு மகிழ்ச்சி
தாய்மடி நினைவுகள் கரையாதிருப்பதே திருப்தி
கலங்காதே காலம் ஒருநாள் கணக்கெழுதும்
வானப் பயணம் முடித்து நீ வருவாய்.
அவசரங்கள் எதிர் மோதும் அன்னிய தேசத்திலே
அறியா முகங்களிடையே ஆறிவார் உன்னை
மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட சிகரங்களும்
சிந்தாமணிப் பிள்ளையார் கோவில் திருவிழாவும்
சன்னதி கோவில் கச்சான் கடைகளும் காப்புக் கடைகளும்
கண் முன்னே நிற்கிறதா அசை போட்டுப் பார்
ஊர்ப் புதினம் கேட்டாய் ஒன்றிரண்டு சொல்லுகிறேன்
சின்னப் பொடியல் எல்லாம் சீரழிந்து போயிட்டாங்கள்
என்ன செய்வதென்று அறியாத பெற்றார்கள்.
பின்னேர வேளைகளில் நாமிருந்த மணல் வெளிகள்
இந்நேரம் வந்து பார் இனியுனக்குப் புரியும்.

தொகுப்பு - **இரத்தினம்**



# நன்கொடையாளர்கள்

1. திரு. ந. பாஸ்கரன் - நெல்லியடி கிழக்கு, கரவெட்டி.

2. திருமதி. வனிதா குமரேசமூர்த்தியும் வினோத் சிலோஜினி குடும்பம் - துன்னாலை மேற்கு, கரவெட்டி

3. திருமதி பத்தினிப்பிள்ளை - துன்னாலை மேற்கு, கரவெட்டி

4. திருமதி தம்பிப்பிள்ளை - துன்னாலை மேற்கு, கரவெட்டி

### ICT மின்கட்டண அன்பளிப்பு

திரு.ந. சிவதாஸ் - (லண்டன்)

### Band வாத்தியம், ஆர்மோனியம் அன்பளிப்பு

திரு. க. சுந்தரமூர்த்தி -(லண்டன்)

### Symbol வாத்தியம் அன்பளிப்பு

திரு. த. தவராஜா -(கோயிற்கடவை)

### மிருதங்கம் அன்பளிப்பு

திரு. நா. ஆனந்தராசா (ராஜன்-பிரான்ஸ்)

### நிழற் பட பிரதி இயந்திரம் அன்பளிப்பு

பழைய மாணவர்கள் (லண்டன்)

### 2015 அமுதவிழா மலர் வெளியீட்டு நிதி

திரு.ந.கைலாயர் (கனடா)

# ஆயிரம் பிறை கண்டோர் எம்முடன்.....

ஞானாசாரியர் கல்லூரி பழைய மாணவர் 01.01.2015 இல்80 வயதை அடைந்து எம்முடன் இருந்தவர்கள்.

1. (கதிர்காமு) முருகேசு கதிராசி
2. (அம்பலவாணர்) முருகேசு செல்வமுத்து
3. (அம்பலவாணர்) தங்கம்மா
4. (வீரவாகு) வள்ளிப்பிள்ளை
5. (சிதம்பரப்பிள்ளை) வேலுப்பிள்ளை இராசம்மா
6. கந்தர் சிவநாதன்
7. கதிர்காமு வெற்றிவேலு
8. கனகசபை பரஞ்சோதி
9. இராமநாதன் முத்துக்குமார்
10. சின்னப்பிள்ளை) ஆலாவசுந்தரம் மகேஸ்வரி
11. (சிதம்பரப்பிள்ளை) வேலுப்பிள்ளை
12. (கதிர்காமு) கந்தசாமி இலட்சுமிப்பிள்ளை
13. இராமநாதன் மயில்வாகனம்
14. இராசயா (post peon)
15. (அம்பலவாணர்) கந்தையா பாக்கியம்
16. இனையதம்பி கந்தசாமி
17. (முத்தையா) வல்லிபுரம் பத்தினிப்பிள்ளை
18. (கந்தையா)வயிரமுத்து கனகம்மா
19. ஆசிரியர் க.கணபதிப்பிள்ளை
20. ஆசிரியை அருட்பிரகாசம் கமலவதி
21. நடராசா கயிவாயர்
22. சின்னத்தம்பி சிதம்பர நாதன்

நன்றி

தொகுப்பில் :
உதவியாளர் மதிப்புக்குரிய ஆசான்
**திரு ந.கயிலாயர்**

# நிறைவாக...

வலிகளும் வேதனைஎம் நிறைந்த ஒரு பிரசவத்துக்கு ஒப்பானது இந்த மலர் வெளியீடாகும். கல்லூரியின் வரலாற்றை ஆவணப்படுத்தும் முயற்சியே ஞானதீபம் எனும் இந்நூல். மலர் வெளியீடு என்பது ஒரு சாதாரண விடயமல்ல என்பதை நாம் அனுபவத்தில் இங்கு கண்டு கொண்டோம். ஆக்கங்கள் திரட்டுவதிலிருந்து அச்சுக்குப் போகும் வரை எத்தனையோ கருத்துக்கள் விமர்சனங்கள் கண்டங்கள். இவற்றை யெல்லாம் கடந்து ஒரு சஞ்சிகையை வெளியிடுவதென்பது அலைபொங்கும் ஆற்றைக் கடப்பதற்கு சமனாகும்.

பகீரத பிரயத்தனத்தின் பின்பு தான் இம் மலரை வெளியிட முடிந்தது. இச் சஞ்சிகையானது பூரணம் நிறைந்தது. எவ்வித குறைகளுமில்லை என்று கூறிப் பெருமை கொள்ள நாம் முயற்சிக்கவில்லை. குற்றங்குறைகள் இருக்கத்தான் செய்யும் குற்றம் களைந்து குணமறிந்து கொள்ளுதல் கற்றறிந்த மாந்தர் கடன். இம் மலரில் இடம்பெறும் ஆக்கங்கள் அனைத்தும் அவரவர் மனதில் உருவானவையே. அதற்கு அவர்களே பொறுப்புடையர். சில ஆக்கங்கள் தொகுக்கப்பட்டவை.

எங்களால் இயன்றதைச் செய்தோம் என்றொரு திருப்தி மனதில் போற்றுவார் போற்றட்டும் தூற்றுவார் தூற்றட்டும் போகட்டும் கண்ணனுக்கே என்ற ஆத்மிக வழிகாட்டலை உள்ளத்தில் கொண்டு அவையடக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- மலர்க்குழு

பணிதலே உயர்தலுக்கு வழியாகும்

- அன்னை திரேசா

காலமெல்லாம் காண கருத்துப் பொக்கிஷமாய்

விளங்க இம் மலருக்கு முழு அனுசரணை

வழங்கி கைலாயம் அன்னஉயர்வு பெற்ற

கல்லூரித் தாயின் முன்னாள் இரசாயன ஆசிரியர்

பெருந்தகை பெயர் குறிப்பிடவிரும்பாத

வள்ளல் அவரும் அவர் குடும்பமும்

வளமுடன் வாழ்க!

அதிபர்

நவீன டிசைன்களில் பெண்களுக்கான
சேலைகள், ரவிக்கைகள், ஆண்களுக்கான
சேட் வகைகள், ரவுசர்கள் சிறுவர் சிறுமிக்கான
ஆடைகள் மற்றும்
சகலவிதமான உடுபிடவைகளுக்கு உடன் நாடுங்கள்

# செல்லமுத்து புடவையகம்







**செல்ல முத்துஸ் புடவையகம்**
**நெல்லியடி, கரவெட்டி.**

# EASWARY BEAUTY Center



**Facial Thredding**
**Waxing Perming**
**Staigbting Hair Cutting**
**Wedding Cake, Birtbday Cake.**



**MIS.KANESHKUMAR EASWARY**
**NUNUVIL LANE,**
**KARAVEDDY EAST, KARAVEDDY.**


T.P:- 0776135375


# பரந்தாமன் சிற்றுண்டியகம்

## சகலவிதமான சுவையான சிற்றுண்டிவகைகளுக்கும் ஓடர் செய்யுங்கள்











**கம்பர் மலை,**
**வல்வெட்டித்துறை.**

# ஒளியருவி




## வீடியோ, போட்டோ




மங்கள காரிய வைபவங்களுக்கு,
தரமான முறையில் புகைப்படங்கள்,
வீடியோ எடுத்திட இன்றே நாடுங்கள்.



**சாமியன் அரசடி,**
**கரவெட்டி.**



மக்கள் மனமறிந்த வங்கி

# மக்கள் வங்கி

நெல்லியடி.

**சிறந்த எதிர்காலத்திற்கான சேமிப்பு வங்கி**






**சிறந்த எதிர்காலத்திற்கான சேமிப்பு வங்கி**

ஞான தீபத்துக்கு
எங்கள் வாழ்த்துகள்

**N.S.R Fitter**



Nelliady,
Karavedey.

தரமான, சுவையான
சைவ, அசைவ
உணவுகளுக்கு

**எவறெஸ்ற் குடும்ப
உணவகம்**



பிரதான வீதி,
நெல்லியடி.

பாண், பணிஸ், கேக் வகைகள், சிற்றுண்டிகள்
மற்றும் சுவையான தின்பண்டங்களுக்கு
நாட வேண்டிய இடம்

**சுபாஸ் வெதுப்பகம்**



பிரதான வீதி,
நெல்லியடி கரவெட்டி.

தரமான பாடசாலை உபகரணங்கள்

தர உள்ளீட்டு பொருட்கள்


நாவல்கள்

விளையாட்டு உபகரணங்கள்

இவற்றினைப் பெற்றுக்கொள்ள

ஒரே இடம்






# சிதம்பரப்பிள்ளை


# புத்தகசாலை





*பிரதான வீதி, நெல்லியடி,*

*கரவெட்டி.*


Vinmeen Ankhady
Point pedro Rode, Nallur.
P.Vageesan
Tel:- 0776516622
K.Sriranganathan
Tel:- 021 2263027


வண்ண வண்ண அழகு
பொருட்கள் வீட்டு பாவனைக்கு
பெறவேண்டிய இடம்
மங்கை அழகு மடம்
நெல்லியடி.


ஞானதீபம் என்னும் சுடர்
மிளிர எங்கள் அன்பளிப்பு
மருதம்
இரும்பகம்
நெல்லியடி.


தரமான சுத்தமான நவீன டிசைன்களில்
அழகிய வடிவங்களில் ஆபரணங்கள்
குறித்த தவணையில் பெற்றுக்கொள்ள
சரவணா மகா லட்சுமி
நகை மாடம்
நெல்லியடி கரவெட்டி


அழகிய ஆடை வகைகளுக்கு
இன்றே நாடுங்கள்
அருண் ரெக்ஸ்
நெல்லியடி கரவெட்டி



Get the right loan for you.
Savings
SAFE ANY THING
SAFETY LOCKERS
Prestige
Bank of Ceylon
SRI LANKA'S NO.1 BANK
24 HOURS ATM & INTERNET BANKING
Ria
MoneyGram
BOC
NELLIADY




SINGER
உறுதியான உத்தரவாதம்
50% வரை
மின் சேமிப்பு
நெல்லியடி, கரவெட்டி.
SINGER Plus

# யா/ஞானசாரியர் கல்லூரி
## கரவெட்டி.


## அமுதவிழா நிதி அன்பளிப்பு - 2015

| தொ. இல | பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | ந.கயிலாயர் | 150000 |
| 2 | திரு.P.செல்வவிநாயகம் | 10000 |
| 3 | திருமதி.ந.சிவபாலன் | 5000 |
| 4 | கோவிற்கடவை திருமண மண்டபம் | 5000 |
| 5 | திருமதி.சா.இராகவன் | 5000 |
| 6 | திரு.தி.முருகதாஸ் | 5000 |
| 7 | திரு.நவரட்ணம் பராநிதி | 5000 |
| 8 | திரு.சி.சிதம்பரநாதன் | 5000 |
| 9 | திரு.ம.மகாகேதீஸ்வரன் | 5000 |
| 10 | திரு.தி.காந்தருபன் | 5000 |
| 11 | சா.குகநேசன் | 5000 |
| 12 | திருமதி.புஷ்பலிங்கம் | 5000 |
| 13 | திரு.சி.சிற்றம்பலம் | 5000 |
| 14 | செல்வி.உதயரஞ்சினி சிதம்பரப்பிள்ளை | 5000 |
| 15 | திருமதி.சிவபாலா பவானந்தன் | 5000 |
| 16 | திரு.திருமதி சேந்தன் சுமதி | 5000 |
| 17 | திரு.K.சிறிசந்திரன் | 5000 |
| 18 | திருமதி.பொ.மதன்மோகன் | 3000 |
| 19 | திரு.தா.வல்லிபுரம் | 3000 |
| 20 | திரு.இ.செல்வவிநாயகம் | 3000 |

| | | |
|---|---|---|
| 21 | திரு.செ.சுகுணகுமார் | 3000 |
| 22 | திருமதி.கி.சிவமதி | 3000 |
| 23 | திரு.க.கமலதாசன் | 2000 |
| 24 | திரு.ச.உருத்திரகுமார் | 2000 |
| 25 | திருமதி.ப.வல்லிபுரம் | 2000 |
| 26 | திரு.வே.சிவசிதம்பரம் | 2000 |
| 27 | திருமதி.செ.சிவயோகநாதன் | 2000 |
| 28 | திருமதி.ம.கோபிநாத் | 2000 |
| 29 | திருமதி.சா.இராசேந்திரம் | 2000 |
| 30 | திருமதி.ச.அருள்நிதி | 2000 |
| 31 | திரு.க.கமலகோபன் | 2000 |
| 32 | திருமதி.பி.ஜெயதீஸ்வரன் | 2000 |
| 33 | செல்வி.வி.வல்லிபுரம் | 2000 |
| 34 | திருமதி.இ.செல்வராசா | 2000 |
| 35 | திரு.அ.பௌநத்தி | 2000 |
| 36 | திருமதி.சா.சண்முகேஸ்வரன் | 2000 |
| 37 | திருமதி.வ.குமரேசமூர்த்தி | 2000 |
| 38 | திருமதி.கு.சிவதாரணி | 2000 |
| 39 | திரு.ஜே.வில்லியம் மங்கை | 2000 |
| 40 | திருமதி.மல்லிகாதேவி மதியழகன் | 2000 |
| 41 | திருமதி.மாலினி கந்தசாமி | 2000 |
| 42 | க.பிறேமதாசன் | 2000 |
| 43 | செல்வி.சாந்தினி தம்பிராசா | 2000 |
| 44 | திரு. V.கருணாநிதி | 1500 |
| 45 | திருமதி.கு.ஞானதேவி | 1000 |
| 46 | திருமதி.ந.காயத்திரி | 1000 |
| 47 | திரு.ந.ஜெயரூபன் | 1000 |
| 48 | திரு.தா.நவரத்தினம் | 1000 |

| | | |
|---|---|---|
| 49 | திருமதி.க.தர்சினி | 1000 |
| 50 | திருமதி.சி.புவிதா | 1000 |
| 51 | திருமதி.த.செல்வமலர் | 1000 |
| 52 | திரு.இ.முத்துக்குமரன் | 1000 |
| 53 | திருமதி.சி.வீரபாகு | 1000 |
| 54 | திருமதி.கு.நந்தகுமாரி | 1000 |
| 55 | திருமதி.கமலாவதி | 1000 |
| 56 | திருமதி.பா.விமலாதேவி | 1000 |
| 57 | திரு.பொ.வரதராஜா | 1000 |
| 58 | திருமதி.ந.முத்துலிங்கம் | 1000 |
| 59 | திருமதி.வி.இதயகலா | 1000 |
| 60 | திருமதி.வ.சிவசங்கர் | 1000 |
| 61 | திரு.ந.பாலச்சந்திரன் | 1000 |
| 62 | செல்வி.இ.பிரியதர்சினி | 1000 |
| 63 | திருமதி.T.உமாலினி | 1000 |
| 64 | திரு.பா.கிருபாகரன் | 1000 |
| 65 | திரு.T.சண்முகலிங்கம் | 1000 |
| 66 | திரு.பொ.பொன்ராசா | 1000 |
| 67 | திரு.நா.கிருஸ்ணானந்தன் | 1000 |
| 68 | திருமதி.பு.சற்குணதாசன் | 1000 |
| 69 | திருமதி.கு.பிறேமரூபதி | 1000 |
| 70 | திருமதி.செ.குலசிங்கம் | 1000 |
| 71 | திருமதி.ம.அருள்மொழி | 1000 |
| 72 | திரு.சி.மோகன்ராஜ் | 1000 |
| 73 | திரு.தி.சுதாகரன் | 1000 |
| 74 | திரு.A.சுதர்சன் | 1000 |
| 75 | திரு.T.குணசேகரன் | 1000 |
| 76 | K.K.அம்பிகுமார் | 1000 |

| | | |
|---|---|---|
| 77 | திரு.R.ஸ்ரீநிவாசன் | 1000 |
| 78 | திரு.V.விக்னேஸ்வரன் | 1000 |
| 79 | திரு.R.சிவநடராஜ் | 1000 |
| 80 | திரு.R.சுரேஸ்குமார் | 1000 |
| 81 | திருமதி.J.ஸ்ரீவிமலகாந்தன் | 1000 |
| 82 | திருமதி.S.சுந்தரலிங்கம் | 1000 |
| 83 | திருமதி.K.ஸ்ரீ | 1000 |
| 84 | திருமதி.B.மகேந்திரன் | 1000 |
| 85 | திருமதி.T.சிவகரன் | 1000 |
| 86 | திருமதி.R.சுஜீவன்குலாஸ் | 1000 |
| 87 | திருமதி.K.சுமதி | 1000 |
| 88 | திருமதி.T.நகுலேந்திரன் | 1000 |
| 89 | திருமதி.P.தவீந்திரன் | 1000 |
| 90 | திருமதி.P.டேவிட்ராஜ் | 1000 |
| 91 | திருமதி.P.சிவரஞ்சன் | 1000 |
| 92 | திருமதி.S.ராமச்சந்திரன் | 1000 |
| 93 | திருமதி.R.செல்வநாயகம் | 1000 |
| 94 | திருமதி.M.திரிபுவனநாதன் | 1000 |
| 95 | செல்வி.V.பகவதி | 1000 |
| 96 | திருமதி.Y.ராஜகோபால் | 1000 |
| 97 | திரு.சி.பாலேந்திரன் | 500 |
| 98 | திருமதி.சி.வரதலட்சுமி | 500 |



மலர்
2015